காவேரி

419

May - 1946
வியய - வைகாசி

28 MAY 1946
MADRAS



As. 6

குறித்த நேரத்தில் லாரிகள்



திருச்சி	மதுரை
மதுரை	திருநெல்வேலி
மதுரை	தூத்துக்குடி
திண்டுக்கல்	கோயமுத்தூர்

கோயமுத்தூர்	கள்ளிக்கோட்டை
கோயமுத்தூர்	பாலக்காடு
திருச்சி	சென்னை
திருச்சி	பெங்களூர்

யுத்தகால ஆறு வருஷங்களில்
5 கோடி பிரயாணிகளை பத்திரமாக

TVS

கொண்டுபோய் சேர்த்திருக்கிறார்கள்.
இப்பொழுது குறித்த நேரத்தில் சாமான்களை
கொண்டுபோய்ச் சேர்க்கிறோம்

TVS

போக்கு வரத்தை துரிதப்படுத்தி வியாபாரத்தை பெருக்குவது.
எடுத்துப் போவதை எங்களிடம் ஒப்படையுங்கள்

T.V.சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் லிட்

மதுரை & சென்னை

போக்கு வரத்து சாதன மளிப்பது எங்கள் தொழில்

TVSK-20-TM

29 MAY 1946
MADRAS

இந்திய மக்களிடையே
புகழ்பெற்று விளங்கும் நமது
வாசனைத் திரவியங்கள் சுமார் அரை
நூற்றாண்டுகளாக விநியோகிக்
கப்பட்டு வருகின்றன.

விஜயபுரம்
கே. டி. ஆர்.

சரக்குகள்—பன்னீர், அரைக்கீரை, சந்தனாதி தைலங்கள், கிருஷ்ண அகர்பத்தி, ராஜா பற்பொடி — மணத்திற்கும் குணத்திற்கும் பெயர்போனவை — எங்கும் கிடைக்கும்

K·T·R
சந்தனாதி தைலம்

...SOLE DISTRIBUTORS...
GIRISON & Co...MADRAS

தென்னிந்தியாவிலுள்ள எல்லா ஊர்களிலும் எல்லா வியாபாரிகளிடத்திலும், வட இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, பூனா, குண்டூர் டிஸ்டிரிக்ட்டு முதலிய ஊர்களிலுள்ள எங்கள் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும். மற்றப் பாகங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

K. T. R. என்ற விலாஸ எழுத்துக்களை எழுத்துக்கெழுத்து — கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம் —

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ்

இன்ஷ்யூரன்ஸினால் பாதுகாப்பளிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பமும் இன்பம் நிறைந்த குடும்பத்திற்கு அறிகுறி. ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பஸ்தரும் மன நிம்மதியுடனும் கவலையின்றியும் வாழ முடிகிறது. வீண் செலவில்லாமல் பாதுகாக்கப்பட்ட ஒவ்வொரு நிதியும் வியாபாரத்திற்கும் பொருளாதாரத்திற்கும் அதிகபலமளிக்கின்றது. ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் அளிக்கும் நற்செய்தி நம்பிக்கையை ஊட்டுகிறது. பொருளாதாரப் பாதுகாப்பை ஒவ்வொருவருக்கும் அளிப்பதே அதனுடைய நோக்கம்.

இப்பாதுகாப்பை ஹிந்துஸ்தான் பாலிஸி மூலம் அடையுங்கள்

1945-ல் புதிய பாலிஸிகள் 12 கோடிக்குமேல்

ஹிந்துஸ்தான் கோவாப்பரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்,
கல்கத்தா.

டிவிஷனல் ஆபீஸ்:
டிவிஷனல் மானேஜர்,
ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்,
107, அரண்மனைகாரத் தெரு,
மதராஸ்.



Noting the events of the day
3rd May 1946
marriage fixed
jewels solicited &
Ordered at P.A.R's
1. necklace.
3 Pairs bangles.
1 Saree pin
1 Diamond nose screw
1. Pair thodu 1.5. cts.
all to be recd on 20
BASKARA
Better cultivate the diary habit
P. A. RAJU CHETTIAR & BRO.,
JEWELLERS
COIMBATORE.
Louis

தாய்மார்கள் அறிவர்

—உட்வர்ட்ஸ் க்ரைப் வாட்டரின்—
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

1-WW108-111 W. WOODWARD LTD LONDON. ENGLAND

Agent:— **T. T. KRISHNAMACHARI,**
12A Lingha Chetty Street, :: G. T. MADRAS

கும்பகோணம்
நடனகலாமணி
A. N. பெரியநாயகி
பரதநாட்டியம் &
- அபிநயம் -

9-6-'46 ஞாயிற்றுக்கிழமை
உமிஸ் சங்கீத சபாவில்
நடைபெறும்.

சந்தோஷ அறிவிப்பு

சென்ற சில மாதங்களாக தவிர்க்கமுடியாத காரணத்தினுல் நடன கச்சேரிகள் செய்யமுடிய வில்லை. பல அன்பர்களும், சபை களும் ஏமாற்றமடைந்தனர்.

இப்பொழுது வழக்கம்போல் கச்சேரிகள் ஒத்துக்கொள்ள சாத் தியமாக உள்ளது என்ற செய் தியை பொதுஜனங்களும் ரஸிகர் களும் கேட்டு சந்தோஷிப்பார்கள் என்று நம்புகிறேம்.

பொருளடக்கம்

விய மலர் 5 | வைகாசி இதழ் 10

சமரசப் பேச்சின் முறிவு 9

கதம்பம் 11

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள் 12
ராமய்யா

கதிரவன் முகத்திலுள்ள பரு 17
நா. கி. நாகராஜன்

இயற்கை வைத்தியம் 21
தி. சே. சௌ. ராஜன்

குழந்தையும் கொடுமையும் 27
சௌரி

சித்ரா 33
கே. சுந்தரம்மாள்

தியாகமா துரோகமா? 45
ஹரிணி

மீரான் கோயில் 54
மானஸீகன்

மலேயும் மடுவும் 62
ரா. ஸ்ரீ. தேசிகன்

ஸோஷலிஸத்தின் கதை 66
யோகி சுத்தானந்த பாரதியார்

"ஸித்தாந்தத்தின் முடிவு" 72
டாக்டர் வே. ராகவன்

குறிப்பு:- காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவை களில் அடங்கிய அபிப்பிரா யங்கள் அவற்றை எழுதியவர் களுடையனவே. அவைகளுக் குப் பத்திரிகாசிரியர் பொறுப் பாளியல்லர்.

விருந்தின் ருசி

புசித்தால் தெரியும்



கர்னுடக சங்கீத வித்வான்
கும்பகோணம் இசை ஒளி
A. D. சுல்தானின்

இசை விருந்தின் மேன்மையை அனுபவித்தால்தான் அறியமுடியும். நகரமெங்கும் இதை அனுபவித்தவர்கள் பலர். அதைத் தேடித்தேடி அனுபவிக்க விரும்புகிறவர்கள் எண்ணிக்கை கணக்கிலடங்கா. அதற்கு அத்தாக்ஷி வேறு வேண்டியதில்லை. மாதா மாதம் நடைபெறும் கச்சேரிகளே இதற்குப் போதிய சான்று.

5—5—46 - கனியூர் (உடுமலைப்பேட்டை)
7—5—46 - நாகூர் (Exhibition)
8—5—46 - நாகூர் தர்கா
11—5—46 - ஊட்டி, (நீலகிரி)
12—5—46 - கோயம்புத்தூர்
30—5—46 - திருச்சி ரேடியோ நிலையம்



தாயின் மகிழ்ச்சி

பல வருஷங்கள் தனிமையிலும் அசௌக்கியத்திலும் உழன்ற பின்னர், ஒரு புஷ்டியான குழந்தைக்குத் தாயாக விருப்பதில் அவள் பெருமைபடுகிருள்.

கர்ப்பக் கோளாறுகளுக்கு சிறந்த ஔஷதம்.

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
அருணை
கர்ப்பாசயரோக நிவாரணி.

EASTERNS, 358

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ்.



காபினட் தூதுகோஷ்டியினருடன் ஜின்னு சம்பாஷணை. ஜின்னுவின் விதண்டா வாதம் கோஷ்டியினரைத் திகைக்க வைக்கிறது போலும்!



பண்டித நேருவும் அவர் சகோதரி விஜயலக்ஷ்மி பண்டிட்டும் டெல்லியில் பத்திரிகை நிருபர்கள் மஹாநாட்டிற்குப் புறப்படுகையில் எடுத்த படம். அவர்கள் பக்கத்தில் நிற்பது அமெரிக்காவிலிருந்து சமீபத்தில் திரும்பிவந்த அவர் பெண் மிஸ். சந்திரலேகா பண்டிட்.

இரண்டு பழுத்த கிழங்களும் அகமகிழ்கின்றனர். இது வருங்கால அரசியல் மாறுதலுக்குச் சுப சூசகமா என்பதுதான் தற்போதைய பிரச்னை.



மஹாத்மாவுடன் சம்பாஷணை செய்துவிட்டுத் திரும்புகையில் எல்லைப்புற காந்தி, ராஜாஜி, பண்டிதநேரு இம்மூவரும் தீவிரமாக ஆலோசனையில் ஆழ்ந்துள்ளார்கள். இவர்கள் மூளைகளைக் கலக்குவது என்ன?

காவேரி

விய மலர் 5	“சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—” பாரதியார்	வைகாசி இதழ் 10

சமரசப் பேச்சின் முறிவு

ஸிம்லா சமரசப் பேச்சுக்கள் முறிந்தது பற்றி ஆச்சரியப்பட இடமில்லை. அதில் ஈடுபட்டிருக்கும் கட்சிகளுள் எவ்வித ஐக்கிய மனோபாவமோ, பொது லக்ஷியமோ கிடையாது.

காங்கிரஸ் கட்சிக்குத் தேச சுதந்திரம் தான் லக்ஷியம். அதைச் சடிதியில் அடையத் துடியாய்த் துடித்து நிற்கிறது. அதன் தலைவர்கள் இதை அடைவதில் எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயார். லக்ஷியம் பாதிக்கப்படாதவரையில் எதிர் நோக்காகவுள்ள முஸ்லிம் லீகிற்கு ஒருவாறு சுயநிர்ணய உரிமையை அளித்துத் தனித்து வாழும் உரிமையையும் அளிக்கத் தயாராக விருந்தார்கள் அதன் தலைவர்கள். ஆனால் முஸ்லிம் லீகிற்கு நேர் எதிரான நோக்கம். சுதந்திரம் வேண்டுமென்ற அவா விருப்பினும் அதைச் சீக்கிரத்தில் அடையவேண்டுமென்ற விறுவிறுப்பில்லை. தேச சுதந்திரம் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கையில்லை. முஸல்மான்கள் பெருவாரியாகவுள்ள மாகாணங்கள் அனைத்தையும் ஒன்றுகூட்டிப் பாகிஸ்தான் சாம்ராஜ்யம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கம்தான் அவர்களுக்கு. லீக் தலைவர் சீமைத் துணிகளைத்தான் கட்டுவார்; சுதேசியத்தை ஆதரிப்பது என்பதில் நம்பிக்கை கிடையாது.

காங்கிரஸ் கட்சிக்கு எல்லாச் சமூகத்தினரும் ஒன்றே; இந்நாட்டில் எல்லோரும் சம உரிமை கொண்டவர்களே என்ற கொள்கை. லீக்கோ முஸ்லீம்களுக்கென ஏற்பட்ட ஸ்தாபனம்; அதன் தலைவர்கள் இதர சமூகத்தினரை விரோதிகள் எனக் கருதுகிறவர்கள்; அம்மனப்பான்மையைக் கொண்டே எந்தப் பிரச்னையையும் சீர்தூக்கிப் பார்க்கும் ஸ்வபாவம் கொண்டவர்கள்.

காங்கிரஸ் அன்னிய ஆட்சியை உடனே அகற்றவேண்டுமென்னும் ஆர்வம் கொண்டது. இதற்காகப் போர்புரிந்து சர்வ தியாகத்தையும் செய்துள்ளது. ஆனால் லீக் எத்தகைய தியாகத்திலும் ஈடுபட்டது கிடையாது. காங்கிரஸ் லீக்குடன் சமரசம் ஏற்படுத்திக்கொண்டு பிரிட்டிஷ் அதிகாரத்தை அகற்ற விரும்புகிறது. ஆகவே விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையில் சமரசத்திற்கு வந்துள்ளது. ஆனால் லீக்கோ இதற்கு நேர்மாறாக நியாயமற்ற கோரிக்கைகளைக் கிளப்பி அவற்றைக்கொடுத்தால்தான் மேலே போகலாம் என்று விதண்டாவாதம் செய்கிறது. காங்கிரஸின் தீவிர முயற்சியினால் பிரிட்டிஷார் வெளியேறிவிடுவார்களெனக் கண்டு அதிகாரத்தில் தனக்கும் தனிப் பங்கு கேட்க முன்வந்துள்ளது. அதோடு நில்லாது, தனக்குப் பல மாகாணங்களை ஒதுக்கித் தனி சுதந்திர நாடாக அளிக்காவிட்டால் முட்டுக்கட்டைதான், கலகம்தான், குருதிவெள்ளம் ஓடும், என்று பூச்சாண்டி காட்டுகிறது.

இவ்விரண்டு கட்சிகளையும் சமரசப் படுத்த முன்வந்துள்ளனர் பிரிட்டிஷ் காபினட் தூதுகோஷ்டியினர். இவர்களிடமிருந்துதான் அதிகாரம் கைமாறவேண்

டும். இவர்களின்றி, காங்கிரஸ்—லீக் கூடிப் பேசுவதில்லை. வேறு அனர்த்தம் என்ன வேண்டும்? பிரிட்டிஷ் காபினட் கோஷ்டியினருக்கு அதிகாரத்தை உடனே மாற்றி இந்நாட்டைக் காலி செய்துவிட வேண்டுமென்ற அக்கரை இருக்க நியாய மில்லை. ஆனல் நாட்டிலுள்ள குழப்பத் தையும் கலவரத்தையும் உத்தேசித்து, தாங்கள் போகச் சித்தமாயிருக்கிறோம் என்று பறைசாற்றி விட்டார்கள். ஆனல், "அதிகாரத்தை யாரிடம் ஒப்படைப்பது? உங்களுள் சமரசமில்லையே" என்ற பிரச்னையை எழுப்பினர்கள். அதைத் தீர்த்து வைப்பதற்கு முயன்றதாகக் காட்டிவிட்டார்கள். உண்மையில் பிரிட்டிஷார் வெளியேற விரும்பவில்லை. எவ்வளவுக்கெவ்வளவு அக்காலத்தைத் தள்ளிப் போட முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு அவர்கள் பொருளாதார நிலைக்கு நன்மை. யுத்தத்தின் பயனக இங்கிலாந்தின் பொருளாதார நிலை சீர்குலைந்து நிற்கிறது. இதைத் திருத்தி அதிலிருந்து தலைதூக்கக் கொஞ்சகாலம் பிடிக்கும். அதற்குள் யாதொரு சச்சரவுமின்றித் தன் ஆதிக்யம், செல்வாக்கு இவைகளுக்குட்பட்ட நாடுகளுடன் ஐக்கிய பாவத்தில் வாழ்ந்தால் அதன் வியாபாரம் செழித்து நிலைமை சீர்திருந்திவிடும். இதற்காகவே தான் அதன் சமரச முயற்சிகளெல்லாம். தற்காலிகமாகவாவது இந்தியாவில் சமாதானம் நிலவுவதில் பிரிட்டிஷாருக்கு நிரம்ப அக்கரை என்பது மறுக்கமுடியாத உண்மை. காங்கிரஸுக்கும் லீக்கிற்கும் நிரந்தர ஒற்றுமை ஏற்படுவதைப் பிரிட்டிஷார் மனப்பூர்வமாக விரும்புகிறர்களா என்ற கேள்விக்கு விரும்பவில்லை என்று தான் விஷயமறிந்தவர்கள் பதிலளிக்கக் கூடும்.

இத்தகைய முற்றிலும் மாறுபட்ட மனப்பான்மை படைத்த முக்கட்சிகளின் சமரசப் பேச்சு முறிந்ததில் ஆச்சர்யப்பட இடமில்லை.

இதற்கு வேறு கதிதான் என்ன? முஸ்லிம் லீக் மனப்பான்மை மாறினல் ஒழிய வழி இருப்பதாகத் தோன்றவில்லை. அது எப்படிச் சாத்தியம்? தற்போது உள்ள மத்திய அரசாங்கத்தைப் பொது மக்களின் பிரதிநிதிகள் கொண்ட ஸ்தாபனமாக மாற்றி அமைப்பதே இதற்குத் தற்காலிக வழியாகும். பிரிட்டிஷார் தாங்கள் வெளியேறப் போகும் காலத்தைக் குறித்தால் அதற்குள் சமரசம் ஏற்பட வேண்டும் என்ற அவா இரு கட்சியினரிடையே பிறக்கும். இத்தகைய பிரகடனம் சீக்கிரம் பிறக்குமானல் சமரசம் ஏற்படுவது திண்ணம். இல்லையென்றல் கலகம் நிகழ்வது திண்ணம். கலகம் வருமென்று பயந்து பயந்து தேச விடுதலையை ஒத்திப்போடுவது தகாது. தேச விடுதலை எத்தகைய தியாகத்தையும் பொருட்படுத்தாது அடையவேண்டிய லக்ஷியம். தேசம் இனியும் காத்திருக்காது என்று ஜின்ன கோஷ்டியினர் கண்டுகொண்டாலொழியச் சமரசம் ஏற்படாது. சேம்பர்லினின் சமரசக்கொள்கை எத்தகைய நாசத்தை விளைவித்தது என்பது சமீப கால சரித்திரத்தால் விளங்கும். ஹிட்லரை அழிக்க யுத்தம்தான் தேவையாயிருந்தது. ஹிட்லர் கொள்கையைக் கையாளும் நமது ஜின்ன கோஷ்டியினரை நியாயப்படி நடக்கச் செய்யக் கலகம் நிகழ வேண்டுமானலும் அதைக்கண்டு பயந்து காலத்தைக் கடத்துவது தவறு.

பிரிட்டிஷ் காபினட் தூதுகோஷ்டியினர் தாங்கள் வந்த காரியம் இனிமேல்தான் ஆரம்பிக்கப்போகிறது என்று கூறியிருப்பது கொஞ்சம் நம்பிக்கை யூட்டுகிறது. மஹாத்மா இவர்கள் நல்லெண்ணத்தில் பூரண நம்பிக்கை வைத்துள்ளார். வரும் வாரம் சரித்திரத்திலேயே முக்கியமானது என்று குறிப்பிட்டிருக்கிறர். பொறுத்துப் பார்ப்போம். ஜின்னவை ஒதுக்கிவிட்டுக் காரியத்தைப் நடத்தப் பிரிட்டிஷாருக்கு மனம் வருமா என்று பார்ப்போம்.

அட்டைப் படம்.

சர்தார் படேலும் பட்டாபி சீதா ராமையாவும். விவாதம் சென்னை மந்திரி சபை அமைப்பதைப்பற்றி. பட்டாபியின் கோள் சொற்கள் படேலிடம் பலிக்கவில்லை போலும்!

கதம்பம்

மும்மணிகளின் மறைவு

சாஸ்திரியார் என்ருல் மகாக்னம் ஸ்ரீநிவாச சாஸ்திரிகள் அவர்களே யாவர் கண் முன்னும் நிற்பார். சிறந்த அறிவாளி. விசால நோக்கமுடைய சீலர். உலகம் போற்றும் உத்தமர். நாவன்மை நன்கு கொண்டவர். அரசியல் விவகாரங்களை உள்ளபடி சீர்தூக்கி நிதானிக்கும் சக்தி வாய்ந்த நிபுணர். பல பாஷைகளில் பாண்டித்யமுடையவர். வசீகர சக்தி பொருந்தியவர். சிறந்த தேசாபிமானி. யாவராலும் நன்கு மதிக்கப்பட்டவர். நிதான புத்தியுடையவர். இந்தியன் என்று சொல்லிக்கொள்வதில் ஆழ்ந்த பெருமைகொண்டவர். இந்தியர்களின் நலத்தைப் பாதுகாக்கப் பெரிதும் உழைத்தவர். அத்தகைய பெரியாரின் மரணச்செய்தி இந்தியாவை துக்கக் கடலில் ஆழ்த்திவிட்டது. நல்ல நிதான யோசனைகளை இச்சமயத்தில் சொல்லக்கூடிய ஒரு மகா புருஷரைப் பாரதநாடு இழந்துவிட்டது.

புலாபாய் தேசாய் என்ருல் மத்திய சர்க்காருக்கு நடுக்கம். அரசாங்கத்தின் பித்தலாட்டங்களை அலசி அம்பலப்படுத்துவதில் தேசாய் நிகரற்று விளங்கினர். பெரிய சட்ட நிபுணர். சிறந்த தேசபக்தர். அன்னாரின் பிரிவால் இந்தியா ஒரு ஒப்பற்ற தலைவரை, புத்திமானை இழந்துவிட்டது.

இந்தியாவின் உண்மை நண்பர் எட்வர்ட் தாம்ஸன். ஆங்கிலேயன் என்று மமதை கொள்வதை வெறுப்பவர். இந்திய பாஷைகள் இலக்கியங்கள் இவைகளில் ஈடுபட்டவர். வங்காளத்துக்குப் பாதிரியாராக வந்தார். அன்னியர் ஆட்சியில் சுதேச மக்கள் படும் அல்லல்களை உணர்ந்தார். அமெரிக்கா சென்று இந்தியப் பிரச்னையைத் தெளிவாக விளக்கினர். இந்திய சுதந்திரத்துக்காகத் தம்மால் இயன்றவரை பாடுபட்டார். பல புத்தகங்களை எழுதி வெளியிட்டார். இத்தகைய சிறந்த நண்பர் ஒருவரை இழந்தது இந்தியாவின் மகத்தான நஷ்டம்.

இப்பெரியார்களின் ஆத்மாக்கள் சாந்தியடைய இறைவனைத் துதிப்போம்.

விலைகள் குறைந்துவிட்டன!

நாடோறும்—

—நம் தேவைக்குள்ள

பட்டு & நூல் ஜவுளிகள்

கிடைக்குமிடம்

M.N. நாகேந்திரம் சன்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம்

மலைவாசல் உள்மண்டபம்

தெப்பக்குளம் P.O. - திருச்சினுப்பள்ளி

அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்

ராமய்யா

இந்த மலரில் பிரசுரிக்க நேற்று வரையில் விஷயம் ஒன்றும் இல்லாதிருந்தது. பலவித காரணங்களினால் அம்மாஞ்சியும் நானும் சல்லாபிக்க அவகாசம் ஏற்படவில்லை. வெய்யிலின் கொடுமை ஒன்று, நண்பர்கள் வீட்டில் கல்யாணங்கள் இரண்டாவது. டில்லியிலும் ஸிம்லாவிலும் நடக்கும் ஆழ்ந்த யோசனைகளைப்பற்றி ரேடியோ மூலமாய்க் கிடைக்கும் சேதிகளைக் கவனிக்க வேண்டியிருந்தது மூன்றாவது. இத்தகைய காரணங்களைக் கொண்டு அம்மாஞ்சியும் நானும் அதிக நேரம் ஓர் இடத்தில் உட்கார்ந்து சம்பாஷிக்க முடியவில்லை. வெய்யிலின் உஷ்ணம் போதாதென்று, நம்மைச் சுற்றிலும் பலவிதமான சம்பவங்களினால் உஷ்ணம் அதிகப்படுகிறதே என்று அம்மாஞ்சி சென்ற மூன்று வாரங்களாக மிகவும் வெறுப்புடன் இருந்தான். நமது தேசத்தில் உள்ள தலைவர்களெல்லோரும் இதுவரையில் மழமழப்பான சலவைக் கல்களாக இருந்து வந்தார்களே; அதிகாரம் நமது கைகளில் கிடைக்கும் தருணத்தில் ஒவ்வொருவரும் சிக்கிமுக்கிக் கல்கள் ஆகிவிட்டார்களே என்று வருந்துகிறான் அம்மாஞ்சி. எங்கே பார்த்தாலும் நெருப்புப் பொறியாகவல்லவோ கிளம்புகிறது! இவ்வளவு உஷ்ணமும் தணிந்து எப்பொழுது தான் குளிர்ச்சி ஏற்படுமோ தெரியவில்லை என்கிறான்!

நேற்று வரையில் விசேஷம் ஒன்றும் கிடைக்கவில்லை யென்றல்லவோ சொன்னேன். நேற்று இரவு ஒரு நண்பர் வீட்டில் பலமான சாப்பாடு கிடைத்தது. அதன் பயனாக நிசி ராத்திரியில் ஒரு மகத்தான கனவு கண்டேன். கனவில் கண்ட காட்சியை விஸ்தரிக்கிறேன் கவனியுங்கள்.

மயிலாப்பூரில் சமுத்திரக்கரையில் உட்கார்ந்துகொண்டு இருக்கிறேன். அம்மாஞ்சி வருகிறான். அவனுடன் வயது முதிர்ந்த கிழவர் ஒருவர் வருகிறார். அருகில் வந்த பிறகு அவரை உற்றுப்பார்த்தேன்; என்னைத் தூக்கிவாரிப்போட்டது. வாயைப் பிளந்துகொண்டு 'ஆ' என்றேன். தியாகய்யர்வாள் அல்லவா என்று விழித்துப் பார்த்தேன்.

அம்மாஞ்சி: என்னடா மண்டு, அண்டங்காக்கை மாதிரி முழிக்கிறாய்? ஸ்வாமிகளைப் பார்த்தபின் நமஸ்காரம் செய்வதுகூட மறந்துவிட்டாயே!

தியாகய்யர்: ராமய்யா, ஏகாந்த ராமய்யாவாக மணலில் உட்கார்ந்திருக்கிறாய்! உன்னைப் பார்க்கவே அம்மாஞ்சியுடன் இங்கு வந்தேன். என்ன விசேஷம் எப்படி இருக்கிறாய்?

நான்: ஸ்வாமி திருவையாற்றிலிருந்து எப்பொழுது வந்திர்கள்?

தி: என் கஷ்டத்தை இவ்வளவு நேரம் அம்மாஞ்சியிடம்தான் சொல்லிக்கொண்டிருந்தேன். சமாதியில் கிடக்கும் என்னைச் சும்மா விட்டுவிடுங்கள் என்றாலும் கேட்க மாட்டேன் என்கிறார்கள். என்ன செய்வது?

நான்: யார் ஸ்வாமி உங்களை அப்படி உபத்திரவப்படுத்துகிறார்கள்?

தி: யார், யார் என்று தெரியாதவன்போல் கேட்கிறாயே? அந்தத் தியாகப் பிரும்ம ஆராதனைச் சபையோர்கள்தான். விநாசகாலே விபரீத புத்தி என்ற பழமொழி அவர்களைப் பிடித்திருக்கிறது. நான் சமாதி அடைந்து நூறு வருஷம் ஆகிறதாம். அதற்காக மகத்தான மஹோத்ஸவம் கொண்டாடவேண்டுமாம். இதை வேண்டி, பணவசூலுக்காகத் திக்விஜயம் செய்கிறார்களாம். நமது நாட்டில் நல்ல நாளிலே நாழிப்பால் என்பதுபோல் சுபிக்ஷமான காலத்திலேயே கொண்டாட்டங்கள் செய்வது கஷ்டம். இன்னும் பஞ்சகாலத்திலும் பிரளய காலத்திலும் கேட்கவேண்டுமா? வேண்டாம், வேண்டாம் என்று சொன்னாலும் கேட்பார் ஒருவரும் இல்லை.

அம்: தங்களுடைய அபிப்பிராயம் என்ன ஸ்வாமி? தங்களுடைய ஞாபகார்த்தமாக நாங்கள் ஒன்றும் செய்யக்கூடாது என்பதாகவோ?

தி: நல்ல புத்திசாலியான நீயும் இந்த மாதிரி கேட்கிறாயே அம்மாஞ்சி! என்னுடைய சங்கீதவழியில் ஈடுபட்ட நீங்கள் எல்லோரும் என்னுடைய குழந்தைகள். ஆதலால் என்னுடைய திதி யன்று வருஷந்தோறும் என்னுடைய சமாதி இருக்கும் இடத்தில் வந்து எனது ஆத்மாவைத் திருப்தி செய்வதில் எனக்குப் பரம ஸந்தோஷம். ஆனால் உஞ்சிவிருத்தி செய்து, பரம ஏழையாய் வசித்து வந்த எனக்கு, என்னுடைய போலிப் பக்தர்களுடைய படாடோபமும் வீண் ஜம்பமும் சிறிதும் பிடிக்கவில்லை. நான் கைப்பற்றி வந்த சுத்த சங்கீதத்தை மேன்மைப் படுத்துவதற்காக நீங்கள் எல்லோரும் உழைத்தால் பரம திருப்தி. ஆனால் பலரை ஹிம்சித்துப் பணம் சேமிப்பதும் அசுத்த சங்கீதத்தை மேன்மைப் படுத்தி அந்த மார்க்கமாகப் பணவசூல் செய்வதும்,

வீண் ஜம்பத்தில் ஈடுபட்ட ஆட்களைக் கொண்டு என்னைச் சந்தியில் இழுப்பதும் எனக்கு மிகவும் சங்கடமாக இருக்கிறது!

அம்; ஆதலால் இதுவரையில் நடந்த காரியங்களில் தப்பு என்ன என்றும், இனிமேல் நடக்கவேண்டியது எந்த முறையில் இருக்க வேண்டும் என்பதையும் தாங்களே சொல்லுங்களேன், பார்ப்போம்.

தீ: அப்படியே சொல்லுகிறேன் கேள். இந்த வருஷமோ பஞ்ச வருஷம். தானியம் விளையும் ஜில்லாக்களைத் தவிர மற்ற ஜில்லாக்களில் ஜனங்கள் மிருகங்கள் புசிக்கும் வஸ்துக்களைத் தின்று ஜீவித்து வருகிறார்கள். ஆதலால் அடுத்த திதியன்று என்னுடைய ஞாபகார்த்தமாக லக்ஷக்கணக்கான ஜனங்கள் திருவாதிக்கு வந்தால் அவர்களின் ஸௌகரியத்தின் பொருட்டு நீங்கள் உணவுப் பொருள்களை நியாயமாகவோ அல்லது அநியாயமாகவோ சேமித்து வைத்துச் சாப்பாடு போடுவது மகாபாபம். உஞ்சி விருத்தி செய்த எனக்கு ஒவ்வொரு தானியமாகச் சேகரிப்பதின் கஷ்டம் தெரியும். பிரபுத்துவம் நமது கையில் இருக்கிறது என்கிற தைரியத்திலும், அதிகாரம் நமது மந்திரிகளிடத்தில் இருக்கிறது என்கிற சுதந்திரத்திலும் நீங்கள் அதிகாரிகளிடத்தில் போய் முறையிடுவது அனுசிதமான காரியம். ரயில் வண்டிகளில் உட்காருவதற்குக்கூட இடம் இல்லாமல் ஜனங்கள் கஷ்டப்படுகிறார்கள்! ரயில்வே தொழிலாளர்கள் தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களை நிவர்த்தி செய்யாவிட்டால் வேலைசெய்ய மறுத்து விடுவோம் என்று பயமுறுத்துகிறார்கள். ரயில்வே தொழிலாளர் இந்தச் சந்தர்ப்பத்தில் முட்டுக்கட்டை போட்டால் ஜனங்கள் எண்ணத்தகாத கஷ்டங்களை அனுபவிப்பார்கள். மந்திரி சபையில் இருக்கும் நமது தலைவர்வர்களுக்குத் தற்சமயத்தில் அனேகவித கவலைகள் ஏற்பட்டிருககின்றன. ஊர் ஊராகத் திரிந்து எங்கெங்கெல்லாம் உணவுப் பொருள்கள் இருக்கின்றனவோ அவைகளைச் சாம தான பேத தண்டம் என்கிற நான்கு முறைகளிலும் வெளிப்படுத்தி, சேகரித்து, இல்லாத இடங்களுக்கு அனுப்பி, பட்டினியாய்க் கிடப்பவர்களைப் போஷிப்பது மந்திரிகளுடைய முக்கியமான வேலையாய் இருக்கிறது. இப்படிப்பட்ட சமயத்தில் என்னுடைய ஞாபகார்த்தமாக நீங்கள் அதிகாரிகளைத் துன்பப்படுத்துவது எனக்கு லவலேசம் பிடிக்கவில்லை. இதுவரை விளங்கியதா?

அம்: ஒப்புக்கொண்டோம், பிறகு?

கதைக் கோவை

3-ஆம் தொகுதி

கீழ்க்கண்ட 60-எழுத்தாளரின் 60-கதைகள் கொண்டது

ரூ. 7—8—0

(1) "அகிலன்" (2) அ. செ. மு. (3) பி. என். அப்புஸ்வாமி. (4) "அம்மணி" (5) மஞ்சேரி ஈசுவரன் (6) ச. கு. கணபதி ஐயர் (7) கதிரேசன் செட்டியார், மகாமகோபாத்தியாய பண்டிதமணி (8) கமலா எம். எஸ். (9) எஸ். கந்தசாமி (10) கமலாம்பாள் (11) கா. ஸ்ரீ. ஸ்ரீ. (12) கிருஷ்ணமாச்சாரி ஏ. டி. (13) கிருஷ்ணமூர்த்தி வி. வி. எஸ். (14) கிருஷ்ணன் எஸ். (15) "கொனஷ்டை" (16) கோமதி சுப்பிரமணியம் (17) "சசி" (18) சண்முகசுந்தரம் கோ. த. (19) சதாசிவம் ஜி. (20) சபரிராஜன் மீ. வி. (21) சீதாதேவி (22) சீனிவாசராகவன் அ. (23) சுவாமி சுத்தானந்த பாரதி (24) சுந்தரம்மாள் கே. (25) சுந்தரராமன், பூவாளூர் (26) சுந்தரி ஆர். (27) சுப்பிரமணிய முதலியார் வெ. ப. (ராவ் சாகேப்) (28) சுப்பையா ஆ. (29) சுப்பையா வி. எஸ். (30) சூடாமணி பி. ஆர். ஆர். (31) செல்லம் எம், எஸ். (32) தங்கம்மாள் பாரதி (33) தஞ்சம் (34) "தூரன்" (35) "நாடோடி" (36) நீலகண்டன் ப. (37) பார்த்தசாரதி ஆர். (38) பாலசுப்பிரமணியம் கு. ம. (39) "புதுமைப்பித்தன்" (40) வீ. ஆர். மயிலேறு (41) "மாயாவி" (42) "மாரார்" (43) "மாஜினி" (44) Dr. வே. ராகவன் (45) ராமஸ்வாமி எம். எஸ். (46) ராமஸ்வாமி ப. (47) ராமாமிருதம் எல். எஸ். (48) "வல்லிக்கண்ணன்" (49) வாசிமலை (50) விஜயராகவன் (51) வீரராகவன் (52) ஆர். வேங்கடராமன் (53) வேங்கடலக்ஷ்மி (54) ராவ் சாகேப் வையாபரிப் பிள்ளை எஸ்,, பி. ஏ., பி. எல். (55) ஜானம்மாள் (56) (மகாகனம்) ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் வி. எஸ். (57) ஸரஸ்வதி ஆர். (58) ஸரோஜினி ராமஸ்வாமி (59) ஸையத் மகமத் (60) "ஸோமாஸ்"

4-ஆம் தொகுதி

ரூ. 10—8—0

(5-ஆம் தொகுதி தயாராகிறது)

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் — சென்னை

தீ: கவனியுங்கள். இதுவரை சில நண்பர்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் மிராசுதார்களிடம் சென்று சில ஆயிரக்கணக்கான கலங்கள் நெல்லை Centenary சம்பந்தமாக வசூல் செய்திருப்பதாகத் தெரியவருகிறது. இந்தத் தானியம் பட்டினியாய்க் கிடக்கும் இதர ஜில்லா ஜனங்களுக்கு அவசியமாகவும் அதி சீக்கிரமாகவும் தேவையாய் இருக்கிறபடியால் அவைகளை உடனே அதிகாரிகளிடம் கொடுத்துவிடவேண்டும். தஞ்சாவூர் ஜில்லா மிராசுதார்களெல்லோரும் தத்தம் சொந்த உபயோகத்துக்கு வேண்டிய அரிசியை மாத்திரம் வைத்துக்கொண்டு பாக்கி எல்லாவற்றையும் நமது பிரதம மந்திரி பிரகாசத்தினிடம் என் பெயரைச் சொல்லிக் கொடுத்துவிட்டால் எனக்கு ஒரு Centenary அல்ல, பத்து Centenary செய்ததுபோல் திருப்தியாயிருக்கும். அதே மாதிரி கீழ் கோதாவரி, மேல் கோதாவரி, கிருஷ்ணு, குண்டூர் இந்த ஜில்லாக்களிலும் தான்யவந்தர்கள் செய்துவிடுவார்களே ஆயின் எவ்வளவு திருப்தியாயிருக்கும்?

அம்: அடியோடு மொட்டை அடித்து விட்டீர்கள். இனி என்ன?

தீ; சங்கீதக் கச்சேரிகளை ஏற்பாடு செய்து பண வசூல் செய்வது மிகவும் அனுசிதமான காரியம் என்று ஸமீபமாக இரண்டொரு ஸம்பவங்களினுல் தெரிந்துவிட்டது அல்லவா? இதை உடைத்துச் சொல்ல எனக்கு இஷ்டம் இல்லை. நீங்கள் இருவரும் புத்திசாலிகள். உங்களுக்கு இது தெரிந்த விஷயமே. நல்ல சங்கீதம் விலை இல்லாத வஸ்து. அதை விற்பனை செய்வது மனுஷ சரீரத்தை விற்பனை செய்வது போல் ஆகும். அதிலும் என் பெயரைச் சொல்லி ஊர் ஊராகத் திரிந்து பண வசூல் செய்வதில்சிறிதேனும்எனக்குஇஷ்டமில்லை. என்னுடைய கீர்த்தனைகளைப் பிரசாரப் படுத்தி நான் கைப்பற்றிய சுத்த சங்கீத ஒழுக்கத்தை நிலை நிறுத்துவதற்குக் குருகுல வாஸம் செய்து கர்னுடக சங்கீதத்தின் இனிமையைஅறிந்தபத்து ரஸிகர்கள்கிடைத்தால் எனக்குப் போதும். முரட்டுத்தனமான உத்தியோகஸ்தர்களும் அசட்டுச் சங்கீதவழியை அனுஷ்டிக்கும் சபை அதிகாரிகளும் என்னுடைய சுலபமான வழியைக் கடினமான மார்க்கத்தில் கொண்டுபோய் விடுகிருர்கள். தயவுசெய்து இந்த நவீன பத்ததியை நிறுத்தினுல் எனக்கு எவ்வளவோ ஆத்ம சாந்தியாக இருக்கும்.

நான்; ஸ்வாமி! இப்பொழுது ஞாபகம் வருகிறது. ஸமீபமாக அகில இந்திய ரேடியோவில் "தியாகய்யா" என்கிற வரப்போகும் பேசும் படத்தில் உள்ள சில கிருதிகளை ஒலிபெயர்ச்சி செய்தார்களே, அதை நீங்கள் கேட்டீர்களா? சுலபமான வழி என்றீர்களே, உங்கள் மனதிலுள்ளது அது தானு?

தீ: அய்யோ, ராமய்யா, என் வயிற்றெரிச்சலைக் கிளப்பாதே. அன்று ஒலிபரப்பின கிருதிகளில் தச கமகங்களில் இரண்டைத் தவிர வேறு காணப்படவில்லையே! அது சங்கீதமாகுமா? புள்ளி போட்டுக்கொண்டு கோடு கிழித்தமாதிரி அல்லவோ பாடித் தள்ளினுர்கள்! என்னுடைய கிருதிகளுக்கும் இந்தக் கதி வந்ததே என்று இரண்டு தினங்கள் நான் புழுவாய்த் துடித்தேன்.

நான்: ஸ்வாமி மன்னிக்கவும். அன்றைய தினம் என்னுடைய ரேடியோவைக் குடைக் காம்பால் குத்திக் கிழித்து விட்டான் அம்மாஞ்சி. இவ்வளவு மூர்க்கத்தனம் கூடாதென்று அவனிடம் தாங்கள் தயவு செய்து சொல்லவேண்டும்.

தீ: சாந்தமுலேக சௌக்கியமுலேது, அம்மாஞ்சி!

அம்; சாந்தம் தங்களிடத்தில் இருக்கட்டும். வேணுமென்ருல் மஹாத்மா காந்தி இடத்திலும் கொஞ்சம் கொடுத்துவையுங்கள். சௌக்கிய மென்பதோ உங்களிருவருக்கும் என்றைக்கும் கிடையாது! நான் கேவலம் சுகபுருஷன். எனக்குச் சுகம் கிடைக்காவிட்டால், கையில்அகப்பட்டதை யெடுத்து ஓங்கி அடித்துவிடுவது தான் சரியான காரியம் என்று தோன்றுகிறது. ஒரு சங்கீதக் கச்சேரியில் உட்கார்ந்து கொண்டிருக்கும்போது வித்துவான் அபஸ்வரம் பாடினுலும் அதிகப் பிரசங்கம் செய்தாலும் அவன் மென்னியைப் பிடித்து அவன் கண்ணைப் பிடுங்குவதற்குச்சட்டப்பிரகாரம் எனக்கு அதிகாரம் இல்லையே என்று பல முறை வருந்தியிருக்கிறேன். ரேடியோ யந்திரத்திலாவது இந்தச் சுதந்திரம் இருக்கிறதே என்று நான் சந்தோஷிக்கிறேன். ஒருவனே, ஒருத்தியோ, பாடும்போதுஎனக்குப் பிடிக்காவிட்டால், 'கப்' என்று மென்னியைப் பிடிப்பதுபோல் அந்த யந்திரத்தை மூடும்போது எவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறது. இந்தச்சுயேச்சயைக்கூட நான் விட்டுக்கொடுக்க முடியுமா?

தீ: அது என்னமோ அம்மாஞ்சி, உன் னிஷ்டம். கடைசியாக ஒரு வார்த்தை சொல்லுகிறேன். என்னைத் தெரியாதவர்களும், என்னுடைய சங்கீதத்தின் வாசனையே என்னவென்று அறியாதவர்களும், என்னைப்பற்றிப் பம்பாயில் சமீபகாலத்தில் பிரமாதமாகப் பேசினுர்களாம். இதெல்லாம் ஏதோ அனுவசிய காரியார்த்தமாக நடந்ததாகக் கேள்விப்படுகிறேன். இத்தகைய ஸ்துதி எனக்குப் பிடித்தமில்லை. Centenary என்று சொல்லிக்கொண்டு கும்மாளம் போடாமல் இருந்தால் போதும் என்று ஆய்விட்டது. பத்து ரசிகர்கள் சேர்ந்து அங்கும் இங்கும் இறைந்து கிடக்கும் என்னுடைய கீர்த்தனைகளைச்சேகரித்து,

புஸ்தக ரூபமாக அச்சிட்டு, சுருதி சுத்தமாகவும் கமக சுத்தமாகவும் பாடிக்கொண்டிருந்தால் எனக்கு அளவில்லாத ஸந்தோஷம் ஏற்படும். இந்த வருஷம் செண்டினரி கொண்டாட்டம் வேண்டாம். பிழைத்துக் கிடந்தால் அடுத்த வருஷம் பார்த்துக் கொள்ளலாம். அதற்குள் சுபிக்ஷம் மீண்டும் வரலாம்! ஸ்ரீராம! ஸ்ரீராம!

இதற்கப்புறம் தியாகய்யரும் அம்மாஞ்சியும் மெல்ல நடந்து சென்றுவிட்டனர். நானும் விழித்துக்கொண்டேன். அம்மாஞ்சியிடம் நடந்த வரலாற்றைச் சொன்னேன். அவன் "இருக்கும் இருக்கும். இல்லாமல் சொல்லுவாயா? நானும் பலமுறை உன்னிடம் சொல்லியிருக்கிறேன். உருளைக்கிழங்கும் வெங்காயமும் இந்த வயதில் சாப்பிடக்கூடாது. சாப்பிட்டால் விபரீதமாகக் கனவு காண்பாய், தாகம் அதிகரிக்கும், மூச்சையும் அடைக்கும், என்று எவ்வளவு சொல்லியும் நீ கேட்பதில்லை. நேற்றுராத்திரி நீ தூங்கும்போது Centenaryயைக் குறித்துக்கனவு கண்டது உனக்குத் தெரியும்; ஆனால் குள்ளநரி மாதிரி நீ தூக்கத்தில் ஊளை இட்டது எனக்குத் தெரியும். அப்பொழுதே உன்னைத் தட்டி எழுப்ப யத்தனித்தேன், ஆனால் உன் கனவைக் கலைக்க இஷ்டமில்லை. காவேரியில் எழுதவும் விஷயம் கிடைத்தது. பிறகு வேறென்ன வேண்டும்?

* * *

கனவில் கிடைத்த யோசனைப்படி இந்த வருஷம் ஸ்ரீதியாகய்யர் தினக்கொண்டாட்டத்தை நிறுத்திவைக்கவேண்டுமென்று தான் நானும் அம்மாஞ்சியும் அபிப்பிராயப்படுகிறோம். நூறுவது வருஷத்துக்கு உள்ள மகத்துவம் நூற்றொன்றாவது வருஷத்துக்கு உண்டாகாதோ? அதற்குள் நமது தலைவர்களுக்கும் அதிகாரம் பூர்த்தியாகக் கிடைக்கலாம். மனது சந்துஷ்டியும் சாவதானமும் அதிகரிக்கலாம். 1948-ஆம் வருஷம் வரையில் பல்லைக் கடித்துக்கொண்டிருந்தால் பிறகு ஜமாய்த்துவிடலாமே!



லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் ஜனரல் மானேஜர் பண்டிட் சந்தானத்தின் புதல்வி ஸ்ரீமதி சம்பக் சந்தானம் பர்ட்வான் ராஜாவின் நெருங்கிய உறவினரான லெப்டினண்ட் A.K. கன்னாவைச் சமீபத்தில் மணந்தார். இது ஜாதிபேதமற்ற ஒரு நூதன விவாகம். பண்டிட் சந்தானம் நமது மாகாண மந்திரி கனம் கே. பாஷ்யத்தின் சகோதரர்.

மே 10உ மகத்தான ஆரம்பம்...
ஸ்ரீ ஜகதீஷ் பிலிம்ஸாரின்
லவங்கி
Direction... Y. V. RAO
மதுரை ... நியூ ஸினிமா
கோயம்புத்தூர்... வின்ஸெண்ட்ஸ் ஹோட் ஹவுஸ்
தஞ்சை ... டவர் டாகீஸ்
மாயவரம் ... சுந்தரம் டாகீஸ்
திருநெல்வேலி ... பாலஸ் டி வேல்ஸ்
சீக்கிரம் கீழ்க்காணும் இடங்களில் எதிர்பாருங்கள்
சென்னை, பங்களூர், மைசூர், திருச்சி, சேலம்
மற்றும் இதர இடங்கள்
CHANDRALEKHA
Release...

கதிரவன் முகத்திலுள்ள பரு

நா. கி. நாகராஜன்

சில மாதங்களுக்குமுன், தவறாமல் பத்திரிகை படிப்போர், சர்வதேச அரசியற் குழப்பத்தையும், வரவிருக்கும் உணவுப் பஞ்சத்தையும் தவிர, வேறொரு சிறு குறிப்பையும் கண்டிருக்கக் கூடும். அதுதான் சூரிய பிம்பத்தில் பெரும் கரும்புள்ளிகள் (Sun-spots) தோன்றிய செய்தி. அவற்றைச் சிலர் நேரே கூடக் கண்டதாகச் சொல்லப்பட்டது. ஆனால் வான மண்டலத்தில் இதொன்றும் ஒரு புதிய நிகழ்ச்சியன்று. பதினோராம் நூற்றாண்டிலேயே, தொலைநோக்கி (Telescope) என்ற வான நூலின் அருந்துணையான கருவியைக் கண்டுபிடித்த, கலிலியோ (Galileo) என்ற இத்தாலிய அறிஞர், இவைகளைக் கண்டு ஆராய்ந்தார். அந்த நாளிலிருந்து ஞாயிற்றுப் பிழம்பில் களங்கங்கள் போலுள்ள இக் கரும் புள்ளிகளின் தோற்றமும், மறைவும் விடாது கவனிக்கப்பட்டுவந்து, அவற்றின் முழு விவரமும் இப்போது நமக்குக் கிடைத்துள்ளது.

மாலை நேரத்தில், அடிவானத்தில், கடுமை நீங்கிய பரிதி வட்டம், "அளப்பரிய விரைவினொடு சுழலக் காணும்" போது, கவிஞன் கண் அதன் வர்ண விசித்திரங்களில் ஈடுபட, அவன் மனதில் அளவற்ற கற்பனைகள் தோன்றி, அவை அழிவற்ற கவிதை யுருக் கொண்டு வெளிவருகின்றன. ஆனால் கதிரவன் மறைவைக் காணும் விஞ்ஞானியின் மனமோ அச் செந்நிற வடிவைத் துழாவி அதன் தன்மையை யறிய முயலுகிறது. அதனால்தான் கவிஞனின் கண்ணுக்குப் புலப்படாத கரும் புள்ளிகள் வான நூல் வல்லுநரின் கண்ணான தொலைக் கண்ணாடியில் தெற்றெனத் தெரிந்து, தம் கதையை அவருக்குக் கூறும்.

சூரிய பிம்பத்தில் பாரதியார் இரு வட்டங்களைக் கண்டு—

'பின்னே
அசைவுறுமோர் மின்செய்தவட்டு; முன்னே
சமையுமொரு பச்சைநிறவட்டங்காண்பாய்'

-என அக்காட்சியை நம்மிடமும் பகிர்ந்து கொள்கிறார். ஆனால் தற்கால வான நூலாராய்ச்சியின் பயனாய்ச் சூரிய பிம்பம் இரண்டல்ல, நான்கு வட்டங்களாகும் என அறிகிறோம். அதில் முதலாவது ஒளிக்கோளம் (Photospere) எனப்படும் சூடான வாயுக்கள் செறிந்துள்ள உருண்டை. இதுவே சூரியனிலிருந்து வரும் ஒளியிலும், வெப்பத்திலும் பெரும்பான்மையை அளிக்கிறது. இதைச் சூழ்ந்து சுமார் 500 மைல் வரை பரவியுள்ளது இதைவிடக் குளிர்ந்துள்ள ஒரு போர்வையாகும். இதில் நம் புவியிலுள்ள தாதுக்களில் பெரும்பான்மையானவை உண்டெனத் தெரிகிறது. இதைச் சூழ்ந்து சுமார் 5000 மைல் வரை பரவியுள்ள இன்னொரு அடுக்கு உள்ளது. இது நிறக்கோளம் (Chromosphere) எனப்படும். இதில் சில பொருள்களின் ஆவியே உள்ளது. இதன் செறிவும் மிகக் குறைவு. இதையும் சூழ்ந்து வெளியே உள்ளது சூரியனின் மகுடம் (Corona) எனப்படும். இது முழு மறைவின்போதுதான் (Total Solar Eclipse) தென்படும். வெண் முத்துப் போன்று, சொல்லொணா வனப்புடன் கூடிய இவ்வடுக்குச் சமீபகாலம்வரை தன் இரகசியத்தை நாம் அறிய முடியாமல் காப்பாற்றி வந்தது, 1941ஆம் ஆண்டில் டாக்டர் பெங்க்ட் (Dr. Beact) என்பவரால் இதன் தன்மை கண்டுபிடிக்கப்பட்டது. வெப்பத்தினால் சிதைந்து உருக் குலைந்த சில உலோக அணுக்களாலானதே இம்மகுடம் என அவரால் வெளியாயிற்று.

நிற்க, கரும் புள்ளிகள் முதற்கூறிய ஒளிக்கோளத்தில் காணும் ஒரு விளைவு. இவை வெள்ளிய ஞாயிற்றுப்பிழம்பில் அங்கங்கே தனியாகவும், தொகுதிகளாகவும், சிறியவும், பெரியவுமாய்க் காணப்படும். சூரிய வட்டத்தின்மேல் இவை கிழக்கு மேற்காக நகர்கின்றன. பிம்பத்தின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் செல்ல, இவைகளுக்குச் சுமார் 13 அல்லது 14 நாட்கள் செல்லும். முதலில் கரும் புள்ளிகளின் இயக்கத்தைக் கண்ட கலிலியோ, இதிலிருந்து இவை வெள்ளிபோன்ற சிறு கிரகங்களின் நிழலென்றும், அவற்றின் இயக்கத்தினால் இவை நகர்கின்றன எனவும் ஐயுற்றார்.

ஆனால் மேலும் தீர ஆராய்ந்த அவர், இவ்விருண்ட புள்ளிகள் ஞாயிற்றுப் பிழம்பிலேயே விளையும் ஒரு நிகழ்ச்சி என அறிந்தார். ஆகையால் இவைகள் நகர்வதிலி

ருந்து, சூரியன் தன்னைத்தானே சுமார் 27 நாட்களுக் கொருமுறை சுற்றிக்கொள் கிறது எனத் தீர்மானித்தார். இதிலிருந்து சூரியனின் இருசையும், அதன் நடு வரை யையும் (Equator) தீர்மானித்து, பிம்பத்தி லுள்ள புள்ளிகளின் குறுக்கை (latitude) யும் குறிப்பிட முடிந்தது.

இதற்குப் பிறகு பல ஆண்டுகள் வரை இவைகளைப்பற்றி மேலும் ஒன்றும் அறி யக் கூடவில்லை. ஆண்டுதோறும், நாள் தோறும் பரிதியின் புள்ளிகளில் பல மாறு தல்கள் இருந்தன. இவை சில சமயங் களில் அதிகமாகவும், வேறு சமயங்களில் குறைவாகவும் தென்பட்டன. சில வெகு நாட்கள்வரை நீடித்திருக்கும், சின்னாட் களிலேயே மறைந்துவிடும் புள்ளிகள் பல. இவ்வித மாறுதல்களில் ஒருவகைத் தொடர் பையும் எவராலும் ஊகிக்க முடியவில்லை. ஆனால் 1843ஆம் ஆண்டில் ஷ்வாப் (Schwabe) என்னும் ஒரு ஜெர்மானியர், இவைகளைப் பற்றிய ஆராய்ச்சியைப் பதி னெட்டு ஆண்டுகள் விடாது நடத்தி, ஒரு முக்கியமான உண்மையை யறிந்தார். இவர் பிழைப்புக்கு மருந்துக்கடை வைத் திருந்தாலும், வான நூலிலுள்ள ஆர்வத்தி னால், விடாமுயற்சியின் பயனாக வான நூலிற் புகழ்பெற்றார். இவர் சூரியனின் புள்ளிகளின் தோற்றமும், மறைவும் மிகச் சிராய் வானத்தில் நிகழ்கின்றன எனக் கண்டறிந்தார். இவைகள் அதிகரிப்பதும், குறைவதும் பதினொரு ஆண்டுகட்கொரு முறை மாறி மாறி நிகழ்கின்றன. கரும் புள்ளிகள் குறைவான சமயத்தில், பலவா ரங்கள் வரை தொடர்ச்சியாய், ஞாயிற்றுப் பிழம்பு களங்கமற்றுக் காணப்படலாம். பின்னர், சிறிது, சிறிதாய்ப் புள்ளிகள் தோன்ற வாரம்பித்து, ஏறக்குறைய $4\frac{1}{2}$ ஆண்டுகளுக்குப் பிறகு, புள்ளிகள் மிக அதிகமாய், மறுபடி குறையத் தொடங்கும். இதற்குப் பின் $6\frac{1}{2}$ ஆண்டுகளில் இவை பழைய நிலையை அடையும். இந்நிகழ்ச்சி கள் மறுபடியும் தொடங்கும், தவிர, இப் புள்ளிகள் சூரிய பிம்பத்தின் நடுவரையின ருகே எப்பொழுதும் தோன்றுவதேயில்லை. துருவங்களினருகேயும் இவை தோன்றா. இவற்றையெல்லாம் சென்ற நூற்றாண்டி லேயே அறிந்துங்கூட, இவைகளின் தன்மை யும், இவை தோன்றக் காரணமும் அறிய இயலவில்லை. இவைகள் சூரிய பிம்பத்தி லுள்ள பெருங்குழிகளென்றும், இவை பிம்பத்தின் மற்றப் பாகங்களைவிடக் குறை வான ஒளியையும், வெப்பத்தையும் அளிக் கின்றனவென்றும். இவை இருண்டிருப்ப தன் காரணம் இவைகளைச் சூழ்ந்துள்ள வாயுக்கள், இவற்றினின்றும் வரும் ஒளி யைத் தடுத்து விடுவதே என்றும் வில்ஸன் (Wilson) என்ற விஞ்ஞானி முடிவுகட்டி னார்.

இதற்குப்பின் சூரிய பிம்பத்தின் ஆராய்ச்சி இந்நூற்றாண்டில்தான் பெரிதும் முன்னேறியது. இதற்குக் காரணமாக விருந்தது சூரிய நிறமாலை மானி (Spectroheliograph) என்ற கருவி. இது ஞாயிற்றுப் பிழம்பைப் பலவர்ணங்களில் படம் பிடித்து அதன் தன்மையை நமக்கு அறிவிக்கிறது. இதை முதன் முதற் கண்டுபிடித்த ஹேல் (Hale) என்ற ஆங்கில வானநூலறிஞர், அதைக்கொண்டு. கரும்புள்ளிகளின் தன் மையை ஆராயப் புகுந்தார். இதன் பய னாய்க் கரும்புள்ளிகளில் திதேனியத் தீயதை (Titanuim Oxide) போன்ற பல கூட்டுப் பொருள்களும் இருப்பது தெரிந் தது. இப்பொருள் 3000° c சூட்டிற்கு மேல், இரு தாதுக்களாகப் பிரிந்து விடு மாகையால், அவ்விடத்தில் வெப்பம் இதை விடக் குறைவாகவே இருக்கவேண்டுமென் பது தெளிவு. இது சூரிய பிம்பத்தின் சராசரிச் சூட்டைவிடப் பலமடங்கு குளிர்ந் தது. ஒரு வாயுவின் பருமன் திடீரென அதிகரித்தால் அது மிகக் குளிர்ந்துவிடும். இதை அடிப்படையாகக்கொண்டே குளிர் எந்திரங்கள் (Refrigerators) அமைந்துள் ளன. ஆகையால் சூரியனின் வாயுக்கள் விரி வடைந்து, அ:தனால் குளிர்ந்து, இவ்வாறு கரும்புள்ளிகளாயின எனச் சிலர் கூறுகின்ற னர். இதைத் தவிர இவற்றின் படங்களி லிருந்து, கரும்புள்ளிகள் சுழல்வடிவங் கொண்டிருப்பது தெரிந்தது. ஆகையால் பிழம்பிலுள்ள குழைபோன்ற விளைவுக ளிவை யெனக் கூறலாம். சூரிய பிம்பத் திலிருந்து நெடுந்தூரம் எழும் வால்போன்ற தீச்சுடர்கள் (Prominences), சில சமயங் களில் கரும்புள்ளிகளினருகில் தோன்றி அவைகளுக்குள் மறைந்து விடுவது தொலை நோக்கியில் சிலர் பார்த்ததுண்டு. ஆற்று நீரில் சுழலிலகப்பட்ட பொருள் ஆழச் சென்று விடுவதைப்போல் இச்சுடரும் சூரிய பிம்பத்தின் சுழலினால் விழுங்கப் பட்டதோ என நினைக்க இது இடந்தரு கிறது.

ஆனால் சென்ற நூற்றாண்டிலிருந்தே, இதோடு கூடவே நிகழும் இன்னொரு நிகழ் வும், ஒருவராலும் விளக்க முடியாமலே இருந்து வந்தது. ஒரு காந்தமுள்ளைத் தன் வயமாகத் தொங்கவிட்டால் அது ஏறக் குறைய வடக்கு—தெற்காக நிற்பது எல் லோரும் அறிந்ததே. ஆனால் அதன் திசை

நாளுக்கு நாளும், மணிக்கு மணியும் சிறிதளவு மாறிக்கொண்டே இருக்கும். இவ்வித மாறுதல்கள் சில சமயங்களில் மிக அதிகமாய் விடுவதுண்டு. அப்போது இந்நிகழ்ச்சி காந்தப்புயல் (Magnetic Storm) எனப்படும். இது ரேடியோ ஒலி பரப்பில் பல கோளாறுகளை விளைவிக்கும். இவ்விதக் காந்த விளைவுகள் பலவும், கரும்புள்ளிகளைப் போலவே பதினோரு ஆண்டுகட்கொரு முறை நிகழ்வதும், இவ்விரு விளைவுகளுக்குள் எப்போதும் ஒருவகைத் தொடர்பிருப்பதும், பலராலும் அறியப்படினும், இதை விளக்க இயலவில்லை. சில நாட்களுக்கு முன் தென்பட்ட பெரும் புள்ளியின் விளைவாகக் காந்தப் புயல்களும் ஏற்பட்டிருக்கலாம்.

இத்தகைய தொடர்பிலிருந்து, கரும்புள்ளிகள் காந்த இயல்பு கொண்டவையாக இருக்கலாம் என ஊகிக்கப்பட்டது. இதற்குச் சான்றாக ஹேல் மற்றொரு உண்மையையும் கண்டார். ஒளி, அலைகளாகப் பரவுகிறதென்பதும், ஒவ்வொரு வர்ண ஒளியும் ஒரு அலைநீளம் உடையதென்பதும் எல்லோரும் அறிந்தவைகளே. ஒளியைப் பரப்பும் ஒரு பொருளை வலிவான காந்தங்களுக்கிடையே வைத்தால், அவ்வொளியின் தன்மையும், அதன் அலை நீளமும், சில விதிகளையொட்டி மாறும். இவ்விளைவு சீமான் விளைவு (Seeman Effect) எனப்படும். சூரியனின் களங்கத்திலிருந்து வரும் ஒளியை ஆராய்ந்த ஹேல், அதில் இவ்விளைவைக் கண்டார். ஆகையால் காந்த விளைவுகள் நிகழும் இடங்களே இக்கரும்புள்ளிகள் என்பது தெளிவாயிற்று. சூரியனில் உள்ள தாதுக்கள் பிரிந்து, அதனாலேற்படும் மின்னணுக்களினால் (Electrons) இந்நிகழ்ச்சியை நாம் காண்கிறோம் என இப்போது எண்ணுகின்றனர். இம்மின்னணுக்களில் பல்லாயிரக் கணக்கானவை ஒரு மையத்தை நோக்கிச் சுழல்கின்றன. மின்னணுக்கள் மின்சாரத் தன்மை கொண்டவையாதலின், இவ்விடங்களில் காந்த விளைவுகள் நேரிடும். கரும்புள்ளிகள் எப்போதும் ஜதையாகவே தோன்றுகின்றன. அத்தகைய ஜதைகள் ஒவ்வொன்றிலும், இரு புள்ளிகளும் இரு வகைக் காந்த இயல்பு கொண்டவை. ஆகையால் பெரும் லாடகாந்தமொன்று, சூரியனுட் புதைக்கப்பட்டு அதன் இருமுனைகளும் வெளியே நீட்டிக்கொண்டிருப்பது போல்இவை உள்ளன எனக் கூறலாம். இதைத் தவிர, புள்ளிகள் பதினோரு ஆண்டுகட்குப் பின் மறுபடியும் தோன்றும்போது, இவைகளின் காந்தத்தன்மை எதிராய்விடும். ஆகையால் அதே தன்மைகொண்ட புள்ளிகள் மறுபடியும் தோன்ற 22 ஆண்டுகள் பிடிக்கும். இதனால் சூரியகோளத்தில் 22 ஆண்டுகட்கொருமுறை நிகழும் மாறுபாடுகளினால் இவை தோன்றுகின்றனவோ என ஐயுறுகிறார்கள்.

சில ஆண்டுகட்குமுன், அமெரிக்க வான நிலையங்களில் செய்த ஆராய்ச்சிகளின் பயனாய், இவை வெறும் சூரிய பிம்பத்தின் மேற்பரப்பில் நிகழும் விளைவுகளல்ல, அதன் உட்புறத்தே வெப்பத்தினால் தாதுக்களின் அணுமூலங்கள் (Nuclei) சிதைந்து மாறி, இந்நிகழ்ச்சியைத் தோற்றுவிக்கின்றன எனத் தேர்ந்திருக்கிறார்கள். இவ்வித மாறுதல்கள் நிகழ்ந்து முடிந்து, மறுபடி பழைய அணுக்கள் தோன்ற 22 ஆண்டுகள் செல்லலாம். என்னவாயினும் இவைகள் மதியையொத்த களங்கமற்ற ஞாயிற்றுப் பிழம்பில் தோன்றி, மறைந்து, உலகில் ரேடியோ ஒலி பரப்பைப் பாதித்து, வட துருவத்தில் வர்ண விசித்திரமான ஒளிகளைத் தோற்றுவித்து, மனிதனின் அறிவுக்கு முன் இன்னும் முழுதும் அடிபணியா இரகசியமாகவே இருந்து வருகின்றன.

பண்டை நாட்களில் மொகலாய சக்கரவர்த்திகளின் கொலு மண்டப ஆரணங்குகள் காலைக் கதிரவனின் இளங்கதிரொளியில் ஆளிமார்கள் சூழ தங்களுக்கென்றேயுள்ள சிங்காரக் குளிர் பொய்கைகளில் நறுமணங் கமழும் தைலங்கள் தேய்த்து நீராடி வந்தனர். தங்களது அழகிய மேனியை சுத்தம் செய்வதற்கு அன்று அவர்கள் க்ஷாரமண்ணை உபயோகித்து வந்தார்கள்! ஏனெனில், அந்நாளில் ஸோப்புகளே கிடையாது.

இன்ருேவெனில், சகல சுக சௌகரியங்களும் பொருந்தியமைந்துள்ள ஹமாம் தானிருக்கிறதே! ஹமாமின் நுண்ணிய ஏராள நுரை தேகத்தை நன்கு சுத்தம் செய்வதோடு, பண்டைய ஜனங்கள் கனவிலும் அனுபவித்தறியாத ஓர் அலாதி இன்பத்தையுமளிக்கிறது.



ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

டாம்கோ விற்பனை இலாகா

19A, வாணியர் தெரு, த. பெ. நெ. 31, மதராஸ்.

இயற்கை வைத்தியம்

தி. சே. சௌ, ராஜன்

பலவித புதிய நிகழ்ச்சிகள். அவைகளைக் குறிப்பிடப்புதிய சொற்கள். நோய்க்கு வைத்தியம் உண்டு. நோயாளிக்குச் சிகிச்சை உண்டு. அதற்குப் பலவிதமுறைகளும் உண்டு. வைத்தியம் என்றால் நோயுற்ற நிலைமை ஏற்பட்டு விட்டதென்பது பொருள். இயற்கை வைத்தியமென்றாலோ, இயற்கை நோயுற்றதா எனக் கேள்வி பிறக்கலாம். இயற்கைக்குச் சிகிச்சையா என்றும் சிலர் கேட்கக்கூடும். இயற்கை வைத்தியம் என்பது ஆங்கிலச் சொல்லின் அடிமை வழியில் பிறந்தது. நேச்சர் கியூர் (nature cure) என்று தொடங்கின ஆங்கிலச் சொல்லிற்கு மொழிபெயர்ப்பு. "இயற்கை நிலை" என்பது பொருள்கொண்ட ஓர் உண்மை. இயற்கைநிலை கெட்டு விட்டால் நோய் உண்டாகும். அதற்குத் தகுந்த சிகிச்சை என்பதுதான் "இயற்கை வைத்தியம்" என்பதின் பொருள். சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்பது இயற்கை நிலை. அழியாத உண்மை. இம்மூன்று நிலைகளும், அதற்கான சலியாத உழைப்பும், மாறுபாடுகளும், தர்மநெறி வழுவாது, வெளிப்படையாகவும், ரகசியமாகவும், ஓயாது நடந்துவருகின்றன. இவை நடத்தும் சக்தி பல பெயர்களால் குறிப்பிடப்படுகிறது. இதன் நுட்பத்தை அறிந்தவர்கள் வெகு சிலர். இச் சிலரும்கூட இந்தச் சக்தியின் போக்கை ஒருவாறு ஊகித்து, நிர்ணயப்படுத்துவார்களே தவிர, அதை அடக்கி ஆள முடியாது. இயற்கையின் போக்கைக்கண்டு, அணுசக்தியான அட்டாமிக் குண்டை உண்டாக்கியவர்கள் அதை அடக்கி ஆள முடியுமா வென்பது சந்தேகம். இயற்கைச் சத்தியைக் கிளப்பிவிட்டு, உலகமே அழிந்துவிடுமோ என்கிற பயம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது.

இயற்கையின் ஜீவராசிகளில் சின்னஞ்சிறிய மனிதன் ஓர் அற்ப சிருஷ்டி. இச் சிறிய மனிதனிடத்து எவ்வளவு சக்தி! எவ்வளவு யுக்தி! மிகப்பெரிய சிருஷ்டியினை அடக்கி ஆளும் திறன்தான் எவ்வளவு! உலகத்தை ஒரு நொடியில் அழிக்கக் கூடிய சக்தியை அட்டாமிக் குண்டு மூலம் சிருஷ்டித்துவிட்டானல்லவா? சிருஷ்டியை நிர்மூலமாக்கக்கூடிய சக்தியை இயற்கையினின்றும் கிளப்பிவிட்டானல்லவா? இந்த யுகத்தில் மனிதசமூகம் எவ்விதம் முடியுமென்று சொல்லமுடியாது. இயற்கையின் ரகசியங்கள் பல. அவைகளுள் சிலவற்றையே மனிதன் கண்டுபிடித்திருக்கிறான். இயற்கை நீதி எப்படி என்பதை மனிதன் தெரிந்துகொள்ளவேண்டும். அதற்குக் கல்விவேண்டும்; ஆராய்ச்சி வேண்டும். அதை அறிந்த சிலர் தாம் கண்ட உண்மைக்கேற்றபடி சாத்திரங்களை உண்டாக்கி, பாமரமக்கள் பின்பற்றும் முறையைக் கற்பிக்கவேண்டும். பண்டைக்காலத்து ரிஷிகள், தீர்க்க தரிசிகள், உண்மையைச் சித்தாந்தப்படுத்தி, வாழ்விற்கு வரையறை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த உண்மை மரபிலே வந்தது தான் ஆயுள் வேதமும். ஆயுர்வேதம் இயற்கை முறையைப் பின்பற்றுவது.

தற்சமயம் இயற்கை வாழ்விற்கு ஒரு புதிய வேகம் ஏற்பட்டிருக்கிறது. மகாத்மா காந்தி சொல்லினாலும் செயலினாலும் அதற்கு ஆதரவு அளித்துப் பிரபலப்படுத்தி வருகிறார். உடல் நலத்தைப் பேணிச் சுகம்பெற வேண்டுமானால் இயற்கை வாழ்வின் நீதிகளை நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். நமக்கு இது புதிதல்ல. தலைமுறை தலைமுறையாக நடத்தி வந்ததுதான். எனினும் அறியாமை மேலோங்கி, உண்மை அறிவு மங்கிப் போய், பாவ புண்ணியங்கள் என்பதின் கருத்து மறந்துவிட்டு, சுலபமாக, தெய்வத்தையே ஏமாற்றி, புண்ணியம் சம்பாதித்து விடலாமென்கிற மதியீனம் காரணமாகப்பலவிதத்தில் சமூகஅநீதிகள் புரிந்துவந்த நம்மவர்க்கு, அற்ப ஆயுளும், வறுமையும் அதிகரித்துவிட்டன. இதினின்றும் விடுதலை அடையவேண்டுமானால், அரசியல் விடுதலை வந்துவிட்டால்

மாத்திரம் போதாது. பலதரப்பட்ட அடிமை வாழ்வில் ஒரு பகுதிக்கு மட்டிலும் விடுதலை ஏற்பட்டால் உண்மையான சுதந்திரம் கிடைக்காது. அறிவீனம், மூடப்பழக்கவழக்கங்கள், பொறுப்பற்ற தன்னலம், இவைகளும் கூடவே ஒழிந்தால் தான் உண்மைவிடுதலை நாட்டுமக்களுக்குக் கிடைக்கும். இயற்கை வைத்தியம் என்பதில் வியாதிக்கு மருந்து இயற்கையாகக் கிடைக்கக்கூடிய பொருள்களைக் கொண்டு சிகிச்சை செய்வது என்பது மட்டுமல்ல; இயற்கை முறைகளை அறிந்து அதன்படி வாழ்வை நடத்தித் தனக்கும், மற்றவர்களுக்கும் நோய் வராமல் தடுக்கும் முறை என்பது பொருள்.

இயற்கைப் பொருள்களில் பூமியிலிருக்கும் மண் ஒன்று என்பது எல்லோருக்கும் தெரியும். மண்ணை உபயோகிப்பதால் பலவித நோய்கள் தீர்ந்துவிடக்கூடும் என்பது இயற்கை வைத்தியம். ஆனால் எந்த மண்ணை உபயோகப்படுத்த வேண்டும், எப்படி உபயோகப்படுத்தவேண்டும், எந்தெந்த நோய்களுக்கு உபயோகப்படுத்த வேண்டும்? இவையெல்லாம் தெரிந்து கொள்ளவேண்டும். அப்படியில்லாமல் கண்ட இடத்திலுள்ள மண்ணைத் திரட்டி வாரி உடம்பில் பூசிக்கொண்டால் வியாதி தீர்ந்துவிடாது. மண் சுத்தமாகவிருக்க வேண்டும். களிப்புப் பசையுள்ள காய்ந்த மண்ணாகவிருக்கவேண்டும். எச்சில் மண்ணாகவிருக்கக்கூடாது. எச்சில் மண் என்றால் என்ன என்பது நமக்கு மறந்துபோய் விட்டது. மல மூத்திராதிகளினாலும், எச்சில், உமிழ்நீர், முதலியவைகளினாலும் பாழாக்கப்பட்ட மண்ணை உபயோகித்தால், வியாதி குணமடையாமல் போன போதிலும், மேற்கொண்டு பல்வேறு வியாதிகளும் உண்டாகலாம். களி மண்ணைக் குழைத்து உடலில் பூசிக்கொண்டால் சொறிசிரங்கு குணமாகிவிடுமென்று மகாத்மா காந்தி சொல்லுகிறார். ஆனால்

இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஹெட் ஆபீஸ்: மதராஸ்

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 5,50,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 4 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனாபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பேரியமேட், திருவல்லிக்கேணி

அமதலவால்லா	காரைக்குடி	சாலூர்	திருச்சினாப்பள்ளி
அனகாபள்ளி	கும்பகோணம்	சீயாழி	திருவாரூர்
சிதம்பரம்	மதுரை	தஞ்சாவூர்	வேலூர்
சித்தூர் (கொச்சி)	மருடேரு	தாடபள்ளிகூடம்	விழுப்புரம்
கட்லூர் N. T.	பாலக்காடு	திலாறு R. S.	விருதுநகர்
காஞ்சீவரம்	பார்வதிபுரம்	திருநெல்வேலி டவுன்	விஜயநகரம்
ஈரோடு	புதுக்கோட்டை	திருநெல்வேலி ஜங்ஷன்	நாகப்பட்டணம்
அம்பாசமுத்ரம்	தென்காசி	வேதாரண்யம்	ஆம்பூர்

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... $2\frac{3}{4}$% விதம்
இரண்டு „ „ ... ... 3% „
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/வாங்கக்கூடியது ரூ. 5000/வரை வட்டிவீதம் $2\frac{1}{2}$% „
கரண்ட் கணக்கு .. .. $\frac{1}{4}$% „
தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

அது எப்படிப்பட்ட மண்ணாயிருக்கவேண்டும்? நமக்கு அம்மாதிரி மண்ணைத்தெரிந்து எடுக்கத்தெரியுமா? தெரிந்து உபயோகிக்கும் முறை தெரிந்துகொண்டால் குணம் பெறலாம். முறை தெரியாமல் கையாண்டால் ஆபத்து. காவேரிக் கரையின் வண்டல் களிமண்ணைக்கொண்டு கை, கால், உடல் எல்லாப்பாகங்களையும் சுத்தம் செய்துகொள்ளலாம். புது நாகரிக முறையில், உயர்ந்த விலையில் விற்கக்கூடிய சுகந்தமான ஸோப்புகள் செய்யக்கூடிய சுத்தத்தைக் காட்டிலும், இம் மண்ணினால் ஏற்படும் சுத்தம் ஒரு விதத்திலும் குறைவாக இருக்காது. ஆனால் காவேரி நதியும், அதன் கரைகளும் சுத்தமாக இருந்தாலல்லவோ, அதினின்றும் கிடைக்கும் வண்டல் களிமண் சுத்தமாகவிருக்கும்! ஈரக் களிமண்ணைக்காட்டிலும், பலநாட்கள் வெய்யிலில் காய்ந்து. உலர்ந்திருக்கும் மண் நன்மை செய்யும். மண்ணின் பெருமை பல புராணக்கதைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் புராணங்களைப் படிப்பவர்கள் வெகு குறைவு. கேட்பவர்கள் அதிலும் குறைவு. உபயோகமற்ற கட்டுக்கதைகள் என்று நாட்டில் ஒரு சாரார் கூசாமல் பிரசாரம் செய்துவருகிறார்கள்.

துறவறம் பூண்டு, சந்நியாசிகளாக வாழ்வுநடத்தும் இனத்தினரில் ஒரு சாரார் வருஷா வருஷம் ஆடிமாதத்தில் ஓர் விரதம் மேற்கொள்ளுவது வழக்கம். இது இரண்டு மாதகாலம் நீடிக்கும். இரண்டு மாதமென்பது நான்கு பட்சங்கள். இதற்கு, "சாதுர்மாஸ்யசங்கல்பம்" என்று சொல்வது. இந்த விரதம் ஆரம்பிக்கும் முதல் தினத்தில் யதிகள் தங்களுக்குத் தேவையான இரண்டு மாதத்திய மண் சேகரித்து வைத்துக்கொள்வது ஒரு முறை. சந்நியாசிகள் தங்களைச் சுத்தம் செய்துகொள்வதற்கும், ஸ்நானம் முதலிய உபயோகங்களுக்கும், குறிப்பிட்ட இடங்களிலுள்ள மண்ணைத் திரட்டி, இரண்டுமாத உபயோகத்திற்குத் தாங்களிருக்கும் இடத்திற்குக் கொண்டு வந்து சேகரித்து வைப்பதற்கு "மிருத் சங்கிரஹணம்" என்று சொல்வது. யாதொரு செலவுமில்லாமல் இயற்கைப் பொருளை உபயோகப்படுத்தும் முறை இன்னும் பழக்கத்திலிருந்து வருகிறது. பித்தளை செம்பு பாத்திரங்களைக் களிமண் போட்டுத் தேய்ப்பதில் உள்ள சுத்தம் எல்லோருக்கும் தெரிந்தது. வீக்கங்களுக்கும், பலவித சொறி சிரங்குகளுக்கும் களிமண் பத்துப் போடுவது கிராமங்களில் வழக்கம். நவீனமுறையில், எள்ளளவும் பொருத்தமில்லாத உயர்ந்த விலையில், களிமண், மருந்தாக வெளியில் போடுவதற்கும், உள்ளுக்குச் சாப்பிடுவதற்கும் உபயோகப்படுகிறது. மண்ணின் நிறம் வெண்மையாகவிருந்த போதிலும் அவை மண்ணைத் தவிர வேறில்லை. ஆனால் நன்கு சுத்தம் செய்யப்பட்ட களிமண். கயோலின் (Kaolin) என்று சொல்லப்படும் மருந்து வெள்ளைக் களிமண் தான். வயிற்றுப்போக்கு, வயிற்று வலி இவைகளுக்கு ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகிறது. அண்டிபிளோஜிஸ்டின் (antiphlogestin) என்று தகர டப்பிகளில் அடைக்கப்பட்டு ஆங்கில மருந்துக் கடைகளில் விற்கப்படும் மருந்தும், வெள்ளைக் களிமண் தான். களிமண் கிடைக்கக் கூடாத இடத்திலுள்ள கடைகளில் இரவு பகல் எக்காலத்திலும் கிடைக்கக் கூடியது. ஆனால் அந்தச் சாதாரண களிமண்ணிற்கு என்ன விலை? பொருளுக்கும் விலைக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. இயற்கை வைத்தியத்திலும் ஒரு முறை, ஒழுங்கு, அளவு இவைகளுண்டு. தெருவிலிருக்கும் எந்த மண்ணையும் உபயோகப்படுத்த முடியாது. குறிப்பிட்ட இடங்களில் கிடைக்கும் மண்ணைச் சேகரித்து, தயாரித்து, சுத்தம் செய்து உபயோகப்படுத்தவேண்டும்.

மண் படர்ந்து கிடக்கும் பூமியில் எவ்வளவோ சக்தி மறைந்து கிடக்கின்றது. மனிதனால் உயர்ந்ததாகக் கருதப்படும் தங்கம், வெள்ளி முதலிய விலை பெற்ற உலோகங்களும், வைரம், சிகப்பு, பச்சை முதலிய நவரத்னங்களும் பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றன. நவீன ஆராய்ச்சிகளின் மூலமாக விஞ்ஞான முறைப்படி இவைகளை மனிதன் தயாரிக்க முயன்றும் முடியவில்லை. நாம் காணக் கூடிய சகல பொருள்களும், அசைவின்றி இருப்பதுபோலத் தோன்றினாலும், ஒவ்வொன்றிலும், சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்ற மூன்று இயக்கங்களும் ஓயாது

நடைபெற்றுவருகின்றன. இந்தச் சலனம் உயிர் இருப்பதற்கு அடையாளம். கடல் பொங்குகிறது. மலையும் வளர்கிறது; கரைந்து போகிறது. ஒவ்வொரு பொருளும் அதற்கு இன்றியமையாத முறைப்படி சதா வேலை நடத்திக்கொண்டு வருகிறது. ஜீவராசிகள் யாவும், மனித சிருஷ்டியும் இதே முறைப்படி உயிர் வாழ்ந்து வருகின்றன. தாயின் அண்ட கோசத்தில் கருத்தரிக்கும் காலத்தில் உயிர் ஒரே ஒரு சிறிய அணுவாகக் காணப்படுகிறது. பிறகு விநாடிக்கு விநாடி ஒரு சிறிய அணு இரண்டாகப் பிரிந்து, இந்த இரண்டும், விநாடிக்கு விநாடி நான்கு, பதினாறு, முப்பத்திரண்டாகப் பிரிந்து பெருகி உருக்கொள்ளுகிறது. இப்படி அதிகவேகமாகப் பெருகிக்கொண்டுபோகும் காலத்தில்கூட, பழைய அணுக்கள், தங்களுடைய சொற்பஜீவனுடைய வேலைமுடிந்தவுடனே இறந்துவிடுகின்றன. சிறு அணுக்களாகக் கோடானுகோடியாக உற்பத்தியாவதும், சிறிது காலம் செய்யவேண்டிய வேலைகளைச் செய்து உடனே மாள்வதும், பிரபஞ்சத்தின் இயற்கை. மனிதன் உடலிலும் உயிர் என்பது இருக்கும் வரையில் இதே காட்சி நடைபெற்று வருகிறது. ஆக்கல், காத்தல், அழித்தல் இம்மூன்றும் இயற்கையின் உயிர்த் தத்துவங்கள். இளம் வயதில் ஆக்கல் வேலை அதிகரிப்பதும், நடுவயதில் ஆக்கலும், அழிதலும் சமமாக நடைபெறுவதும், முதிர்ந்த வயதில் அழிதல் அதிகரித்தலும், கடைசியாக இவ் வியக்கம் நிற்பதிலிருந்து உயிர் போவதும் எல்லா ஜீவராசிகளிலும் நடந்து வருகின்றன.

மனிதன் உடலில் பெரும்பாகம் தண்ணீர்மயமானது. இரண்டு பாகம் தண்ணீரும், ஒரு பாகம் கனப் பொருளுமாகவே இருக்கிறது. ஆக்கல், காத்தல், அழித்தல் வேலைகள் எல்லாம் தண்ணீர் மயமான தாதுக்களால் நடைபெறுகின்றன. உயிரிருக்கும் உடலில், ஓயாது ஓடிக்கொண்டிருக்கும் தாதுப்பொருள் ரத்தம். இது பெரும்பாலும் நீர் மயமானது. ஆக்கப் பொருள்களை உணவின் மூலம் பெற்றுக்கொண்டு, உடலில் பற்பல இடங்களுக்கு எடுத்துச் சென்று, அங்கு வேலை செய்யும் உயிரணுக்களுக்கு உணவு கொடுத்து, காத்து, இறந்து கிடக்கும் அணுக்களைத் திரட்டி எடுத்துவந்து மல மூத்திராதிகளின் மூலம் வெளியேற்றுவது, சதா சஞ்சரித்துக் கொண்டிருக்கும் ரத்தத்தின் வேலை. மனிதன் உடலில் ரத்தம் சிவப்பாக இருந்தபோதிலும், பலவித ஜீவராசிகளில், அதன் சிருஷ்டிக்கேற்ப நிறம் மாறியிருக்கும். ஆனால் அதன் வேலையும் தத்துவமும் ஒன்றே. மனிதன் தண்ணீருக்குள் மூழ்கி இருக்காவிடினும், அவன் உடல் ரத்தத்தில் முழுகிக்கிடக்கிறது. அதிலுள்ள தண்ணீர்க் கலப்பினால் ரத்த ஓட்டமும், உணவு ஊட்டமும் நடக்கின்றன. மனிதன் உணவிலும் பெரும்பாகம் தண்ணீர் மயமானது. அப்படி உணவில் தண்ணீர் குறைந்தாலும், பலவிதமாகத் தண்ணீர் அருந்தி உயிர் வாழ்கிறான். எவ்வித உணவு உட்கொண்டபோதிலும், தண்ணீருடன் கலந்து அதில் உணவு கரைந்து பால்போல மாறிய பிறகுதான் ரத்தம் அதனின்று உடலிற்குத் தேவையான பொருள்களை எடுத்துக் கொள்ளுகிறது. இயற்கை உணவான பாலில் பெரும்பாகம் தண்ணீர். எனினும் அதைப்போன்ற சிறந்த உணவு சிருஷ்டியில் கிடையாது. சிறு குழந்தைகள் பாலால் எவ்வளவுவேகமாகவளருகின்றன. எந்த வயதிலும் பாலைமட்டும் குடித்து உயிர் வாழ முடியும். வயதிற்குத் தகுந்தபடி அதிக அளவு சாப்பிட வேண்டியிருக்கும். ஒளி, அப்பு, தேயு, வாய்வு, ஆகாசம் என்று சொல்லக்கூடிய பஞ்ச பூதங்களும் உயிரைத்தாங்கி நிற்பவை. அவைகள் பிரபஞ்சத்தில் பரவி நிற்கின்றன. அதில் ஆகாசம் என்று சொல்லப்பட்ட (ether) ஈதர் சர்வ வியாபகமுடையது. சூரிய மண்டலம், நக்ஷத்திர மண்டலம் எங்கும் வியாபித்திருக்கிறது. இவையெல்லாம் இயற்கையின் விநோதங்கள். இயற்கைச் சிகிச்சையை அறியவேண்டுமானால் இயற்கைத் தத்துவங்களின் அறிவும் நமக்கு அவசியம் வேண்டும். இல்லாவிடில் இயற்கை வைத்தியம் என்பதற்குப் பொருள் விளங்காது. எங்கே பார்த்தாலும் தண்ணீர் வியாபித்திருப்பதைக் காணலாம். பூமியை வெட்டினால் தண்ணீர். மழை பெய்தால் தண்ணீர். ஆறுகள், குளங்கள், ஏரிகள், கிணறுகள், கால்வாய்கள், சமுத்திரம், எல்லாவற்றிலும் தண்ணீர். பூமியைச் சுற்றிலும்

மேகம் சூழ்ந்துகொண்டு நீராவிப் போர்வையால் மூடி நிற்கிறது. இத்தகைய தண்ணீர் மயமான உலகில் வாழும் ஜீவராசிகள் தண்ணீரின்றி எவ்விதமிருக்க முடியும். தண்ணீரைக்கொண்டு ஜீவன். தண்ணீரைக்கொண்டு உணவு. தண்ணீரைக்கொண்டு சுத்தம். தண்ணீரைக் கொண்டு வாழ்வு. வாழ்வு முறை தவறின் நோய் உண்டாகிறது. இந்தத் தவறுதலைத் தண்ணீரைக்கொண்டு நீக்க முடியும். இயற்கை வைத்தியத்தின் ஒரு பாகமான தண்ணீர் வைத்தியம்(Hydropathy)இந்த வகையைச் சேர்ந்தது. தேகத்திற்குத் தேவையான அளவு தண்ணீர் இல்லாவிட்டால்,தாகம்முதலிய தேவைகள் ஏற்படுவதோடுகூட, மலச்சிக்கலும், மூத்திர ரோகங்களும், தோலைப் பற்றிய நோய்களும் உண்டாகும். இவைகளைக் குடி தண்ணீரைச் சரியான முறையில் உபயோகப்படுத்தி நீக்க முடியும்.

இரவில் ஒரு மண் பாண்டத்தில் குளிர்ந்த தண்ணீர் ஊற்றி, திறந்த வெளியில் மண் புகாமல் மூடிவைத்து, அதில் அரைக்கால் படியோ அல்லது கால் படியோ விடியற்காலை நேரத்தில் வெறும் வயிற்றில் படுக்கையிலிருந்து எழுந்து குடித்தால் மலச் சிக்கலை நீக்கும். இது மருந்து உண்டு மலத்தைக் கழிப்பதைக் காட்டிலும் மேலானது. யாதொரு உதவியில்லாமல் மலம் தானாகவே காலா காலத்தில் கழியவேண்டியது இயற்கை. சரியான உணவை, தேவைக்குத் தகுந்த படி காலத்தில் உண்டு, சுத்த தண்ணீர் குடித்து, உடலிற்குப் போதிய அளவு உழைப்புக் கொடுத்துவந்தால் மலச்சிக்கல் முதலிய நோய்கள் ஏற்படா. அப்படி ஏற்பட்டாலும் எந்தக் காரணத்தைக் கொண்டு ஏற்பட்டதென்பதைத் தெரிந்து நீக்கவேண்டும். நம்மில் அநேகர் தேவையான தண்ணீர் குடிப்பதில்லை என்பது எனது அபிப்பிராயம். பாட்டாளிகளுக்குப் போதிய உணவு இல்லாததால் மலச்சிக்கல். உடலினின்று பலவிதமாக நீர் சதா காலமும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது. வியர்வையின் மூலம் உஷ்ண தேசங்களிலும், அதிக மூத்திரத்தினால் குளிர்ந்த தேசங்களிலும் எந்த இடத்திலும் எக்காலத்திலும் மூச்சுவிடும்பொழுது ஆவி மயமாகவும் நீர் உடலினின்றும் வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது. இதனால் ஏற்படும் தண்ணீர்க் குறைவை நாம் எப்பொழுதும் தேவையான தண்ணீர் குடித்துச் சரிக்கட்டி வரவேண்டும். காலநிலைக்கேற்றவாறு தண்ணீர் குடித்துவரவேண்டும். இந்த இயற்கைத் தேவையை நன்குணர்ந்த நம் முன்னோர்கள், "தண்ணீர்ப் பந்தல்" ஏற்படுத்தி, சுத்த தண்ணீர் மக்களுக்கு இனாமாக அளிப்பதை ஒரு புனித கைங்கரியமாக நடத்தி, புண்ணியம் பெறுவதற்கு இதை ஒரு சாதனமாகக் கையாண்டு வந்தார்கள். சிலர் பணச் செருக்கினாலும், தற்பெருமையாலும் தாங்கள் செய்துவரும் தண்ணீர் தர்மத்தைப் பல வழிகளில் விளம்பரப்படுத்தி யிருக்கிறார்கள். பெரும்பாலோர் இந்தத் தர்மத்தைப் பிறர் அறியாமலே செய்துவருகிறார்கள். ஜனசந்தடியில்லாத காட்டுப் பாதைகளில் கூட உயர்ந்த பீடத்தில் பானை நிறையத் தண்ணீர் குடிப்பதற்காக வைத்திருக்கும் தர்ம சிந்தனையையும், கருணையையும் நம் நாட்டில்தான் காணலாம். தொன்று தொட்டு நம் நாட்டினர் இயற்கையின் குழந்தைகள் என்பதற்குப் பல அத்தாட்சிகள் உண்டு. அதில் விளம்பரமற்ற தண்ணீர் தர்மம் இணையற்றது.

அயோடிசால் IODISAL

(ரத்த சுத்தி மருந்து)

இது தேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனால் ஏற்படக்கூடிய வெட்டை, கிரந்தி, மொழி, முடக்கு, கண்டசூலைகள், வாதம், வாய்வு, மேக ரோகங்களையும், தோலைப்பற்றிய துர்நீர் சம்பந்தமான படை, சொரி, சிரங்கு, தேக அரிப்பு முதலியவைகளையும் குணப்படுத்தி, தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் கொடுக்கும். ரத்தத்தைச் சுத்திசெய்து மலப்பிரவர்த்தியை ஒழுங்காக்கி இரத்த விருத்தியை உண்டாக்கும்.

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

* * * *

சைபால்

- CIBOL -

முகப் பரு, சேத்துப் புண், சொறி சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்டபுண், முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து.

பேபி - கிரைப்

BABY - GRIPE

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப்போக்கு முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தைத் தரும் சிறந்த திராவகம்.

தயாரிப்பவர்கள்

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

மதராஸ் சிடி, நெல்லூர், சிட்ட் & விசாகபட்டினம் ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள்:

ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ், பி. டி. மதராஸ்.

குண்டூர், கிருஷ்ணா, கோதாவரி ஜில்லா & நைஸாம் சமஸ்தான ஏஜண்டுகள்:

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா.

மைசூர் சமஸ்தான ஏஜண்டுகள்:

சேஷமஹால் பார்மஸி, பெகங்ளூர் சிடி.

குழந்தையும் கொடுமையும்

கௌரி

"பால் மிட்டாய்", "பம்பாய் மிட்டாய்" சர்க்கரை மிட்டாய்" என்று கூவிக்கொண்டே மிட்டாய்க்காரன் தெருவில் குறுக்கும் நெடுக்குமாய் நாலு தடவை போய் வந்துவிட்டான். கூவுவதற்கு முன்பே கையில் காலணாவுடன் ஓடி வந்து நிற்கும் கண்ணனை அன்று இதுவரையில் காணாதது மிட்டாய்க்காரனுக்கே சற்று வியப்பாக இருந்தது.

அழுக்கில் தோய்த்தெடுத்த சாக்குப் போன்ற ஒரு வேஷ்டியும் அங்கங்கே கிழிந்த ஒரு சட்டையும் தலையில் பஞ்சு மிட்டாய்த் தகரம் ஒன்றுடன் அவன் தெருவில் நுழைந்தவுடன் குழந்தைகளிடையே உண்டாகும் அந்த உற்சாகமும் வேகமும் சொல்லி முடியாது. வரன் கிடந்து தெய்வத்தைக் கண்டவர்கள்போல் ஆநந்த வெள்ளத்தில் ஆழ்ந்துகொண்டு அவனை வந்து சூழ்ந்து கொள்வார்கள். தம்பிடிக்கு வாங்கும் குழந்தைகளும் காலணாவுக்கு வாங்கும் குழந்தைகளும் ஆகியஎல்லோருக்கும் எவ்வளவு மகிழ்ச்சியுடன் அவனும் கொடுத்துவந்தான்!

"டேய், அவுங்க வூட்டுலே புள்ளேங்க எப்பப்பார்த்தாலும் முட்டாய் தின்னுட்டே இருப்பாங்கடா" என்னும் ஒரு குழந்தை.

"எலே அவுங்க வூட்டுலேதான் பொரக்கணும்னு ஆசையாய் இருக்குதுடா" என்ன்று மற்றொன்று. இந்தப் பேச்சைக்கேட்டு,

"ஆமாண்டா, எப்போதும் பால் முட்டாய்தான் சாப்புட்டுக்கிட்டே இருப்பாங்க" என்று அவனும் பூரித்துப் போவான்.

தெருவில் அனேகமாய் எல்லோரையும் பார்த்தாய்விட்டது. கண்ணன் துள்ளிக்கொண்டு வருவானே! அவன் எங்கே காணவில்லை என்பது அவனுக்கே ஆச்சரியமாய் இருந்தது.

மிட்டாய்க்காரன் தெருவில் வந்து வியாபாரம் செய்பவன்தான் என்றாலும் அவனுக்கு ஒருவரும் அடையமுடியாத ஓர் இன்பத்தையும் உணர்ச்சியையும் உண்டாக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்தன. குழந்தைகளின் தூய உள்ளத்தைக் தொட்டுப்பார்க்கும் ஒரு பாக்கியத்தை அவன் பெற்றிருந்தான். குழந்தையுள்ளம் ஒரே தினுசாய்க் கபடமற்று அன்பு ததும்பிக் கொண்டிருந்தாலும் ஒவ்வொரு குழந்தையின் போக்கு ஒவ்வொரு விதமாய் இருப்பதை அவனால் கவனிக்காமல் இருக்கமுடியவில்லை. அத்தெருவில் எல்லாக் குழந்தைகளையும்விடக் கண்ணனிடம் அவனுக்கு அதிக பிரியம். அவனுடைய அன்புதான் இத்தெருவிற்கு முதலில் இழுத்து வருவது. எல்லோரும் வந்துபோன பிறகும் அவனைக் காணாதது சற்றே கவலையாகவே இருந்தது. வீட்டில் சென்று பார்க்கலாம் என்று நினைத்துக்கொண்டு வந்தவன் தெருவில் நின்றுகொண்டு, "கண்ணா" என்று இரண்டு குரல் கொடுத்தான்.

இவன் அழைப்பதற்கும் கண்ணன் வருவதற்கும் சரியாய் இருந்தது. தலைமயிரை எண்ணெய் தடவிச் சீவிக்கொண்டு பெரிய சொக்காய் ஒன்றைச் சற்று அழுக்கில்லாமல் முழங்கால் வரையிலும் தொங்கும்படி அணிந்து கொண்டிருந்தான். நெற்றியில் பொட்டுத் திட்டிக்கொண்டிருப்பதும் அவனுடைய நிறத்தில் தெரியவில்லை. மிட்டாய்க்காரனைக் கண்டதும் தேங்காய்க் கீறல்களைப்போல் பற்களைக் காட்டிக்கொண்டு "தாத்தா! தாத்தா!" நான் இப்போ எங்க ஆயாவோடு வெளியே போப்போறேன்" என்றான்.

மிட்டாயில்கூட நினைவில்லாமல் எங்குப் போகப்போகிறான் என்று நினைத்துக் கொண்டவன்,

"அடே ரொம்ப ஜோராய் இருக்கயே? எங்கே போப்போரே அப்படி? முட்டாய் வாணாமா ஒனக்கு?" என்றான் அவனைப் பிடித்து அணைத்துக்கொண்டே.

"எங்க அம்மாளைப் பாக்கப் போப்போரேன் தாத்தா. நீயும் வரயா என்னோடே? நான், ஆயா, அப்பா எல்லோரும் போப்போரம்" என்று கண்ணன் சொன்னதும் தான் மிட்டாய்க்காரனுக்கு நினைவு வந்தது.

"எங்கே உங்க ஆயா? அம்மா நல்லபடியா இருக்குதாமா?" என்று கேட்பதற்குள் கண்ணன் ஒரே துள்ளாய்த் துள்ளி

உள்ளே இருந்த தன் பாட்டியைப் பிடித்து இழுத்து வந்து அவன் முன் நிறுத்தினன்.

"ராணி புளி குடிச்சிடுச்சா? கண்ணன் சொல்லுதே" என்ருன் மிட்டாய்க்காரன்.

"என்னவோப்பா, தள்ளாமே இங்கே வச்சுகிட்டு நான் என்ன செய்வேன்? ஆசி பத்திரிக்கு நேத்து கூட்டிட்டுப் போனேன். நல்லபடியா புளி குடிச்சு வவுத்துலே பாலை வார்த்துச்சு" என்ருள் கிழவி.

"குளந்தை நல்லா இருக்குதா? என்ன குளந்தை?"

"பொண் குழந்தைதான். எல்லாம் இவன் கண்ணன் மாதிரிதான் இருக்குது. நேத்தே பிடிச்சு அம்மா, அம்மான்னு என்ன தொந் தரவு கொடுக்குது தெரியுமா இது? மத்தி யானம் பிடிச்சு குந்தலே. இட்டுக்கிட்டுப் போய் பார்த்துட்டு வரலாம்னு இருக்கேன். சாப்பிடக்கூட மாட்டேங்குது தம்பி" என்று கிழவி சொல்லும்பொழுது கண்ண னுடைய ஆனந்தம் பொங்கி வழிந்தது.

"எந்நேரம் ஆயா? அப்பவே பிடிச்சு தான் வாரேன், வாரேன் என்கிறே," என்று கிழவியின் கையைப் பிடித்துக்கொண்டு தொங்கினன்,

"ஆமாம், அங்கே எல்லாம் நல்லா பாத் துக்குவாங்களா? நேத்து இந்நேரம் நான் வரும்போதுகூட முட்டாய் வாங்கிச்சே?" என்ருன் கிழவன்.

"அதான் தம்பிங்கரேன். முட்டாய் வாங் கிச் சாப்பிடுச்சி பார், அதுவேதான். மேலே பச்சைத் தண்ணி வாயிலே ஊத்தலே. ஆமாங்கரேன். இந்த பஞ்ச காலத்திலே அங்கேதான் என்ன குடுத்துடராங்க. வாயிக்கும் வயித்துக்கும் ஒன்னும் எட்டலே. தம்பி எதோ ரொட்டி வாங்கி வாரேன் னுச்சி. கொஞ்சம் காப்பித் தண்ணியும் அதுவும் எடுத்துகிட்டுப் போவலாம்ன்னு பாக்கரேன். காலையிலேயே பசி காதடைக் குதுன்னுச்சு. பாவம் என்ன செய்யுதோ!"

மிட்டாய்க்காரன் கனிசமாய் மிட்டாயை எடுத்துப்போட்டு ஒரு பொட்டணம் கட்டிக் கண்ணன் கையில் கொடுத்து,

"அதுதான் ஐயா அவ்வளவு குசியிலே இருக்காரோ? போய் அம்மாளைப் பாத்து விட்டு வா தம்பி. என்ன செய்யப்போறே அங்கே போய்?" என்று கண்ணன் தலை யைத் தடவிக் கொடுத்தான்.

"எங்கம்மாளோடே பேசுவேன். எனக்கு எல்லாம் கொடுப்பாங்க. மடியில் குந்திக் குவேன். தங்கச்சியை எடுத்து வச்சுக்கு வேன்" என்று கண்ணன் அடுக்கிக் கொண்டே போக மிட்டாய்க்காரனும் கிழவியும் கலகலவென்று நகைத்தார்கள்.

"பாத்தாயா தம்பி, இந்த ஒழுங்கை?" என்ருள் கிழவி ஆச்சரியத்தோடு.

"நீயும் நானும் ஆயிரம் செய்தாலும் அவம்மாளைப்போல ஆவுமா? உம்......... நானும் போய்வாரேன். போய்ப் பாத்து விட்டுப் பேசிவிட்டு வாங்க" என்று சொல் லிக்கொண்டே மிட்டாய்த் தகரத்தைக் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு,

"போய்; வாரியா தம்பீ?" என்ருன் கிழவன்.

"நீ போ நான் ஆயாளோடு போரேன்" என்று அலக்ஷியமாய்ச் சொன்னன் குழந்தை கண்ணன்.

"பாத்தாயா அவனை? அம்மாளைப் பாக்கப் போகிற சந்தோசத்திலே ஒருத் தரும் வேண்டாங்கிரான். உம். உம், நாளைக்கு முட்டாய் கேளு சொல்ரேன்" என்று விரலைக் காட்டிக்கொண்டே மிட் டாய்க்காரன் தெருவைவிட்டு மறைந்தான்.

கண்ணனுக்கு வயது நான்கு இருக்கும். நிறம் கறுப்பாய் இருந்தாலும் நல்ல துறு துறுப்பான முகம், வெடுக்கென்ற பேச்சு. பேச்சிலும் கவனத்துடன் மற்றவர்களை அவன் பக்கம் இழுக்கும் பேச்சு. உணர்ச்சி நிரம்பிய அவனுடைய பார்வையிலேயே அவன் உள்ளத்தில் எவ்வளவு யோசனைகள் இருக்கின்றன என்பதைச் சொல்லிவிடு வான். மிட்டாய்க்காரனுக்கு அவனிடம் பிரியமென்ருல் அவன் கேட்கும் கேள்வி களும் அன்பும் அவனைக் கட்டிப் பிணைத்தன.

"தாத்தா உனக்கு ஊட்டுலே யார் இருக்கா? சாப்புட்டாயா? ஏன் இப்படி வெய்யலிலே நடக்கரே? உனக்கு அம்மா இல்லியா? எங்கம்மாவை உங்கம்மாவாக வைத்துக்கொள்ளேன்" என்று எவ்வளவோ விதமான கேள்விகள் கேட்பான்,

விளையாட்டிற்காக ஒரு நாள் "எனக்கு அம்மா இல்லையேடா கண்ணு உன்னைப் போல" என்று மிட்டாய்க்காரன் சொன் னதுதான். அவனுடைய சிறிய கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாய் வழிய ஆரம்பித்துவிட்டது. உள்ளே ஓடி அம் மாளை அழைத்து வந்தான்.

"அம்மா தாத்தாவுக்கும் நீ அம்மாவாய் இருக்கணும். பாவம் தாத்தா." என்று

"ஓ" என்று அழ ஆரம்பித்துவிட்டான். ராணியும் கிழவனும் சிரித்தார்களே ஒழிய அவனுக்குத் துக்கம் தாங்கவில்லை.

நுட்பமான விஷயங்களையும் முகத்திலேயே அறிந்துகொள்ளும் சக்தி அவனிடம் நிரம்பி இருந்தது. அதனால் அவன் பாட்டிக்கோ, ராணிக்கோ, தகப்பனுக்கோ எல்லோருக்கும் அவனிடம் அபாரமான அன்பு.

கிழவன் கிளம்பிப் போனானே இல்லையோ கண்ணன் ஆயாளைக் கிளம்பும்படி தொந்தரவு செய்ய ஆரம்பித்து விட்டான்.

"ஐயர் ஊட்டே போய் மணி என்ன பார்த்துவா, போவலாம்" என்றாள் கிழவி.

கண்ணன் ஒரே ஓட்டமாய் ஓடிப்போய் வந்து, "மணி மூணு அடிக்குதாம் ஆயா. நீ வரப்போரியா இல்லையா?" என்று வெறுத்துக் கொண்டான்.

"போவலாம்டா கண்ணு. இன்னும் தம்பி வரக்காணுமே" என்றாள் கிழவி.

கண்ணனுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. ஆயாளைப் பார்க்கவே பிடிக்கவில்லை. வழி தெரியுமானால் ஓடியே போயிருப்பான். முகத்தைத் தூக்கிக்கொண்டு வேகமாய் வாசலுக்கு ஓடினான்.

அப்பொழுது அவன் தகப்பன் கறுப்பன் துண்டில் ஏதோ சுற்றி எடுத்துக்கொண்டு வேகமாய் எதிரே வந்தான்.

"என்னாதுப்பா கையிலே?" என்று கண்ணன் அவன் கையிலிருந்த சிறு மூட்டையைப் பிடுங்கிக்கொண்டே கேட்டான்.

கறுப்பன் அதற்கு ஒன்றும் பதில் கூறவில்லை. துண்டை அவனிடம் கொடுத்து விட்டு,

'எங்கே, இன்னும் ஆயா கிளம்பலயா?" என்றான்.

"இப்பதான் அப்பா வெளியே போறாங்க. ஐயர் ஊட்டுலே போய்க் காப்பிதண்ணி வாங்கிவரப் போறாங்க. நீ வல்லையேன்னு இந்நேரம் தவிச்சுட்டுக் கிடந்தாங்க."

"வராமே எங்கே போய்டப் போறேன்? இந்தக் காப்பித்தண்ணியை வூட்டுலேயே

பொதுஜன ஆதரவுக்கு நமது முன்னேற்றமே சான்று

ஏராளமான பாலிஸிகள், இடைவிடாத மகத்தான முன்னேற்றம், அதிகரித்துக்கொண்டே வரும் புகழ், பொதுஜன ஆதரவு— இவைகளுக்குப் போதிய அத்தாட்சி அடியிற் காணப்படும் புள்ளிவிபரங்கள்:-

வருஷம்	புதிய பாலிஸிகள்	மொத்த ஆஸ்தி	நடைமுதலிலிருக்கும் பாலிஸிகள்
1941	1 கோடி 1 லக்ஷத்திற்குமேல்	1 கோடி 95 லக்ஷத்திற்குமேல்	8 கோடி 36 லக்ஷத்திற்குமேல்
1943	2 கோடி 20 லக்ஷத்திற்குமேல்	2 கோடி 50 லக்ஷத்திற்குமேல்	10 கோடி 53 லக்ஷத்திற்குமேல்
1945	3 கோடி 75 லக்ஷத்திற்குமேல்	3 கோடி 30 லக்ஷத்திற்குமேல்	14 கோடி 87 லக்ஷத்திற்குமேல்

1945ல் புதிய பாலிஸிகள் பெருக்கு:— 1 கோடி 15 லக்ஷத்திற்குமேல்

வருடா வருடம் இந்தப் பெரிய தேசீய ஸ்தாபனத்தில்

போது ஜனங்கள் பாலிஸி எடுக்கிறார்கள். அத்துடன் பெருவாரியான பழைய பாலிஸிதார்களும் மேலும் மேலும் புதிய பாலிஸிகள் எடுத்துக்கொள்கிறார்கள்.

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(தலைமை ஆபீஸ்— லாகூர்)

மதராஸ் பிராஞ்சு:-
4/105, அரண்மனைக்காரத்தெரு, ஜி. டி. சென்னை.

C. R. சேஷன், M. A.,
பிராஞ்சு மானேஜர்.

காச்சப்படாதா?'' என்று கறுப்பன் அலுத்துக்கொண்டான்.

காப்பிக்கு வேண்டிய பண்டங்களை வாங்கிவரவேண்டியவன் இவன் பேசாமல் இருந்தால் அவள் கிழவி வேறு என்ன செய்வாள்? கேட்டாவது வாங்கிக்கொண்டு வரலாமென்று ஓடி இருந்தாள் பாவம். கறுப்பன் கடுகடுவென்று ஏதோ பேசிக்கொண்டிருந்தானே ஒழியக் கண்ணனுக்கு இதெல்லாம் ஒன்றும் புரிந்துகொள்ள முடியவில்லையோ அல்லது அதை ஒன்றையும் கவனிக்க அவனுக்கு நேரம் இல்லையோ விளங்கவில்லை. அவனுடைய கவனமெல்லாம் கறுப்பன் கொண்டுவந்த சிறு மூட்டையிலேயே இருந்தது.

அவன் கையில் கொடுத்தவுடன் அதைப் பிரித்தான். அவனுடைய ஆச்சரியத்திற்கு அளவேயில்லை. நான்கு அழகிய வட்டமான சர்க்கரைப் பிஸ்கோத்துகளும் ஒரு சிறிய ரொட்டியும் இருந்தன. இவை யாருக்கு? ஒரு பிஸ்கோத்தை எடுத்துப் பிட்டு வாயில் போட்டுக்கொள்ளவேணும்போல் இருந்தது கண்ணனுக்கு. கறுப்பனைக் கேட்காமல் போட்டுக் கொள்ளவும் தைரியம் வரவில்லை. கோபமாய் இருக்கிறான். என்ன சொல்லுவானோ.

அப்படியே எல்லாவற்றையும் வைத்துவிட்டு எழுந்தான். ''அந்த பிஸ்கோத்து ரொட்டி எல்லாம் யாருக்கு அப்பா? எனக்கு ஒண்ணு தாரியா?'' என்றான் தந்திரம் நிறைந்த குரலில்.

''புட்டுத் துண்ணுப்புட்டயா எல்லாத்தையும்? பட்டி மவனே! குடுத்தா போருமே உன் கையிலே. ஒண்ணும் தொடப்படாது தெரியுமா? அம்மாளுக்குக் கொண்டுபோய்க் குடுக்கனும்'' என்று கத்திக்கொண்டே அந்தத் துண்டை எடுத்து எல்லாவற்றையும் சேர்த்து முடிந்தான்.

கிழவி ஒரு குப்பியில் காப்பியுடன் வந்தவள் ''என்ன தம்பி அது? அதுங்கையிலே தான் ஒன்னு குடேன். பச்சைப் புள்ளே தானே'' என்றாள்.

கறுப்பன் அதற்கும் ஒன்றும் கொடுப்பதாக இல்லை. ''உம்......உம்.........கிளம்பு. நேரமாச்சு'' என்று தெருவிற்கு வந்தான்.

ஒன்றும் தோன்றாமல் நின்றிருந்த கண்ணனுக்கு 'ஆயா இப்படிச் சொன்னாளே. கறுப்பன் ஒன்றும் கொடுக்கவில்லையே' என்ற வருத்தம் சிறிதும் உண்டாகவில்லை.

அவன் மனமெல்லாம் ராணியிடமே இருந்தது. நேற்றுவரையிலும் மடியில் வைத்துக்கொண்டு துரும்பானாலும் அவனுக்கு ஊட்டிய பிறகே வாயில் போட்டுக்கொண்ட அம்மாவை எப்படி நினைப்பதென்று அவனுக்குத் தெரியவில்லை. கறுப்பன் கொடுக்காமல் இருக்கட்டும், ஆயா கொடுக்காமல் இருக்கட்டும். ராணியிடம் கொண்டுபோய்க்கொடுத்தால் முதலில் கண்ணன் வாயில் போட்டுவிட்டுத்தானே அவள் போட்டுக்கொள்வாள்? அது அவனுக்குத் தெரியாதா? இந்த ஒரே தைரியத்தால் அவன் மனம் சற்றும் கலங்கவில்லை. கறுப்பனுக்கும் வேகமாய்த் தெருவை அடைந்தான்.

''ரொம்ப தொலவு தம்பீ. பச்சைப் புள்ளே நடக்குமா? தோளிலே தூக்கிக்கோ தம்பீ'' என்றாள் கிழவி.

''வாரியாலே?'' என்றான் கறுப்பன்.

எப்படியோ ராணியிடம் போகவேண்டுமே ஒழிய, கண்ணனுடைய கவனம் வேறு எதுவும் இல்லை. எது செய்யவும் தயாராய் இருந்தான். கறுப்பனிடம் தோன்றிய வெறுப்பைக்கூடக் காட்டாமல் அவன் தோளில் ஏறி உட்கார்ந்தான்.

வழியில் அறிமுகமானவர்கள் விசாரிக்கக் கண்ணனின் பெருமைக்கு ஒரு எல்லையே இல்லை. வழியில் வேடிக்கைகளை எல்லாம் பார்த்துக்கொண்டே வந்தான். கிழவி ஆயாளால் வேகமாய் நடக்கவே முடியவில்லை. அவளைக் கறுப்பன் விரட்டியது கண்ணனுக்கு மிகுந்த வருத்தத்தை உண்டாக்கியது. தன் தாயைப் பார்க்கும்பொழுது எவ்வளவு செய்திகள் சொல்ல வேண்டுமென்று வைத்திருந்தானோ அதற்குக் கணக்கு வழக்கே இல்லை.

ஆஸ்பத்திரியின் எல்லை வந்ததும் கறுப்பன் கண்ணனைக் கீழே இறக்கிவிட்டான். பூவும் காயுமாய் ஆஸ்பத்திரி கட்டடம் வெகு அழகாய் இருந்தது,

இதற்குள் அம்மா எங்கே படுத்துக்கொண்டிருப்பாளோ, என்ன செய்துகொண்டிருப்பாளோ என்றெல்லாம் அவன் மனம் வேலை செய்துகொண்டிருந்தது.

கூட்டமாய் இன்னும் எவ்வளவோ பேர்கள் உள்ளே நுழைந்துகொண்டிருந்தார்கள். இவ்வளவு பேரும் ராணியையா பார்க்க வருகிறார்கள்? என்பதுதான் கண்ணனுக்குப் புரியவில்லை. ''இம்மாம்பேர் என்னாத்துக்கு ஆயா போராங்க? நம்ப

அம்மாளை பாக்கவா?'' என்றான் கிழவியிடம்.

"என்னடா பயித்தியமா இருக்கியே? நம்ப அம்மா ஒண்டியா இங்கே படுத்திருக்கா? எம்மா ஜனங்க வந்து படுத்து இருப்பாங்க தெரியுமா? அவுங்க மனிசாள் எல்லாம் வர்ராங்க, அங்கே போய் ஒன்றும் சத்தம் கித்தம் போடப்படாது தெரிஞ்சுச்சா. அம்மாளைப் பார்த்துவிட்டு, கப்சுப்புன்று வந்துசேரணும்'' என்றாள் கிழவி. ஆஸ்பத்திரியின் கடுமை அப்பொழுதுதான் அவன் மனதில் முதல் முதலாய்ப் பதிந்தது. "அங்கே வேறே யார் இருப்பாங்க ஆயா?'' என்றான் மறுபடியும்.

"தொரசானிமாரெல்லாம் இருப்பாங்க. அவுங்கதானே நம்ப அம்மாளைப் பார்த்துக்கராங்க'' என்று கிழவி சொன்னபொழுது கண்ணனுக்குச் சிறிது யோசனை வந்துவிட்டது.

"இன்னும் எம்மாந்தூரம் போவணும் ஆயா? ஆனால் அம்மாளைப் பாக்க முடியாதா நம்ப?'' என்றான்.

குழந்தையும் குட்டியுமாய்த் தேர் திருநாள் போல் கூட்டத்தைப் பார்த்ததும் அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவன் உள்ளத்தில் துள்ளிக் குதித்த உற்சாகமும் ஆனந்தமும் சங்கோசப்பட்டுக்கொண்டு பதுங்கிக் கொண்டன. கிழவியும் கறுப்பனும் இரண்டு மூன்று தாழ்வாரங்களைத் தாண்டிச்சென்று ஒரு பெரிய கூடம் போன்ற அறைக்குள் நுழைந்தார்கள்.

இங்கு அம்மா இருப்பாளோ என்று கண்ணனின் கண்கள் சுற்றிச் சுற்றி வந்தன.

தலையில் கைக்குட்டையும், வெள்ளைப் பாவாடைகளையும் அணிந்த சிறுமிகள் அதிகாரத்துடன் இங்கும் அங்கும் போய்க் கொண்டும் வந்துகொண்டும் இருந்தார்கள்.

ராணியின் படுக்கைக்குச் சமீபத்தில் இவர்கள் சென்றதும், "என்ன கொண்டுட்டு வந்தே? ரொட்டி எதாச்சியும் கிடைச்சுச்சா?'' என்று கிழவியை ஒரு துரைசானி அதிகாரத்துடன் கேட்டுவிட்டு "இது யார்? ராணியம்மாபுள்ளையா?'' என்றாள்.

அப்பொழுதுதான் கண்ணன் ராணியின் முகத்தைப் பார்த்தான். இரண்டு நாட்களுக்கு முன்பு தான் பார்த்த அம்மாவா இது? என்று ஒரு கணம் அவனுக்கே சந்தேகமாய்ப் போய்விட்டது. இளைத்துக் கண்களில் ஒளி மங்கி ஒடுங்கிக் கிடக்கும் ராணியைப் பார்த்து அவன் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றுவிட்டான். அவள்தான் தன் தாய் ராணி என்று அவனால் நம்ப முடியவில்லை. தன்னைக் கண்டதும் குதூகலத்தோடு மலர்ந்த முகத்துடன் தன்னை அழைப்பாள் என்று அவன் கட்டிய கோட்டை எல்லாம் ஒரே நொடியில் இடிந்துவிட்டது. வேதனையும் வலியும் நிறைந்த கண்களால் கண்ணனை ஒரு முறை பார்த்தாளே ஒழிய அவன் வந்திருக்கிறான் என்ற மகிழ்ச்சியோ, குழந்தையை அழைக்கவேண்டுமென்ற ஆவலோ இருந்ததாகத் தெரியவில்லை. கண்ணன் தன்னை முதலில் அழைப்பாள் என்று வெகு ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான்.

முதலில் கறுப்பன் அவளிடம் சென்று தன் துண்டை அவிழ்த்துப் பிஸ்கோத்துகளையும் ரொட்டியையும் எடுத்து அவளிடம் கொடுத்தான். பிறகு கிழவி புட்டியிலிருந்த காப்பியை ஒரு தகரக்கோப்பையில் ஊற்றி அவள் முன் வைத்தாள்.

வெய்யிலில் வாடி ஆவலுடன் வந்த கண்ணனுடைய கால் இன்னும் முன் வரவில்லை. தன்னைக் கூப்பிட்டுக் கொஞ்சுவாள் ராணி என்று அவன் எண்ணியதெல்லாம் ஸ்வப்பனமாய்விட்டது. அவன் கண்ணை அவனாலேயே நம்ப முடியவில்லை, இளம் உள்ளத்தில் துக்கம் குமுறியது.

ராணி! அவனுடைய தெய்வம்! வேகம் வேகமாய் ரொட்டியையும் பிஸ்கோத்தையும் காப்பியில் ஊறவைத்து விழுங்கிக் கொண்டிருந்தாள். கிழவியும் ஒன்றும் பேசவில்லை. கண்ணன் நின்ற இடத்தை விட்டு நகரவில்லை. அப்படியே பதுமையைப்போல் சமைந்துபோய்விட்டான்.

கிழவியும் கறுப்பனும் ராணி சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். கண்ணனால் அவ்விடத்தில் நிற்க முடியவில்லை. சுற்று ஒரு முறை பார்த்தான். இதுவரையில் அவனுக்குச் சொர்க்கம்போல் தோன்றிய இடம் நரகமாய் மாறியது. ராணியைப் பார்த்தான். அவள் இவனைப் பார்க்கவில்லை.

ஒரு பிஸ்கோத்தைப் புட்டு வாயில் போட்டுக்கொண்டுவிட்டு "தண்ணி அம்மா. கொஞ்சம்'' என்றாள். ஒரு கோப்பைக் காப்பியை எடுத்துக் கிழவி அவளிடம் கொடுத்து "தண்ணி வேண்டாம், இதைச் சூடாச் சாப்பிடு'' என்றாள்.

மறுகணம் கோப்பை காலியாய்த் தரையை அடைந்தது. ராணிமுகத்தைத் துடைத்துக்கொண்டு ஒரு துண்டு பிஸ்கோத்தைக் காட்டிக் கண்ணனை முதல் தடவையாக

அப்பொழுதுதான் அழைத்தாள். கண்ணன் மனதில் துக்கம் பொங்கிக்கொண்டிருந்தது. எவ்வளவு ஆசைகளையும் அடக்கிக்கொண்டு வந்தான்?

அம்மா ஏன் இப்படி இருக்கிருள்? அவனுல் நினைக்க முடியவில்லை. அழைக்கிருளே வருவதா, வேண்டமா என்று புரியவில்லை.

அதற்குள் "வா கன்னு" என்ருள் ராணி மறுபடியும். அவனையும் அழைத்துவிட்டுப் பக்கத்தில் இருந்த குழந்தையை எடுத்து மடியில் வைத்துக்கொண்டாள்.

கண்ணனுக்கு இதயமே வெடித்துவிடும் போல் இருந்தது. அம்மா இவ்விதம் பராமுகமாய் இருப்பது அவனுல் தாங்க முடியவில்லை. எவ்வளவு ஆவலுடன் வந்த குழந்தை.

கண்ணும் கண்ணீருமாய் ஓடிவந்து கிழவியைக் கட்டிக்கொண்டான். ராணியைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் சகிக்கவில்லை.

"வா ஆயா, வூட்டுக்குப் போவலாம்" என்று ஒரே பிடியாய் அவளைப் பிடித்து உலுக்கினுன்.

"என்னடாலே கண்ணு. இம்மா நேரமாய் என் உயிரை வாங்கினே! அம்மாளைப் பாக்கக்கூடப் பிடிக்கல்லே, போவலாங்கரயே. அம்மா கூப்புடரா பாரு" என்று சமாதானம் சொன்னுள் அவள். ஆனுல் கண்ணன் அழும் அழுகை மேலும் அவனை அங்கு வைத்துக்கொண்டு இருக்க முடியவில்லை. கறுப்பனும் கிழவியும் வெகு சீக்கிரத்திலேயே வீடு திரும்ப வேண்டியதாய் விட்டது.

வரும்பொழுதும் கண்ணனுடைய அழுகையைத் தேற்றுவது மிகவும் சிரமமாய்ப் போய்விட்டது. கறுப்பனுக்கும் ஒன்றும் தோன்றவில்லை. "ஏண்டாலே, இப்படி அழுவரே. பிஸ்கோத்து வாங்கி வரலாம், பப்பரமுட்டாய் வாங்கிவரலாம்" என்று எவ்வளவோ சமாதானப் படுத்திப் பார்த்தான்.

"பாத்தியா தம்பீ, அது இன்னெண்ணு இருக்குது அவன் மடியிலேன்னு இவ்வளவு ரோசப்படுது" என்ருள் கிழவி.

மறுநாள் வேலைக்கு போகவே கறுப்பனுக்கும் மனம் வரவில்லை. குழந்தையை எவ்வளவோ விதமாய்த் தேற்றிவிட்டுப் போனுன். அவன் போனதும் கண்ணன் வீட்டிற்குள்ளேயே வரவில்லை. தெருவிலேயே ஏங்கி உட்கார்ந்து இருந்தான். கிழவி சாப்பாடோ கஞ்சியோ எல்லாம் அங்கேயே எடுத்துப்போய்க் கொடுத்தாள். ஒன்றையும் தொடமாட்டேன் என்று கண்ணும் கண்ணீருமாய் நின்றுகொண்டிருந்தான். பகல் மணி இரண்டும் அடிக்கப் போகிறது. தெருவார் எல்லோரும் "இப்படி ஒரு குழந்தையாடீ?" என்று அதிசயத்தோடு பார்த்துக்கொண்டு எவ்வளவோ சொன்னுர்கள். பாவம் கிழவிக்குத் தான் ஒன்றும் ஓடவில்லை. குழந்தை பட்டினி கிடக்கும்பொழுது அவளுக்கும் சோறு வேண்டி இருக்கவில்லை. ஓய்ந்து திண்ணையில் படுத்தாள்.

ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம். மிட்டாய்க்காரன் மணி "கண கண" வென்றுஒலித்தது.

"அப்பாடா அவனையாவது பார்க்கச் சொல்லலாம்" என்று நினைத்துக்கொண்டு எழுந்திருப்பதற்குள் கண்ணனே அலறிக்கொண்டு மிட்டாய்க்காரனுடைய கால்களைப் போய்க் கட்டிக்கொண்டான். தகரத்தைக் கீழே வைத்துவிட்டு "ஏண்டா ராசா!" என்று அவன் கேட்டதும் கண்ணனுடைய அழுகை இன்னும் அதிகரித்துவிட்டது.

விசித்துக்கொண்டே தன் மனதிலிருந்ததை எல்லாம் அவனிடம் அப்படியே கொட்டிவிட்டான். குழந்தை சுண்ணன் சொல்வதைக் கேட்டு எல்லோரும் அப்படியே அசந்துவிட்டார்கள்.

"பாத்தாயா தம்பீ! அந்தக் கொளந்தையைக் கண்டதும் இதுக்கு ரோசம் பொத்துக்குதுன்னு நெனச்சுக்கிட்டேன். இவ்வளவு இருக்குதே இது மனசிலே— அதுக்குதான் தோணிச்சா பாத்தாயா இதெல்லாம்? என்ன அதிசயம் தம்பீ!" என்று கன்னத்தில் கையை வைத்துக்கொண்டு அதிசயப்பட்டாள் கிழவி.

"அதாங்கரேன், உலகமே அப்படித்தான் இருக்குது. பசி வந்தக்கால் பத்தும் பறந்துடும்னு பின்னே சொம்மாவா சொல்லி இருக்காங்க பெரியவங்க. வவுறு காஞ்சாக்கா வவுத்துலே பொரந்தது கூடத்தான் மறந்துடுது. எல்லாம் இந்த வவுத்துக்குதானே இவ்வளவு பாடு. அது பாவம் காஞ்சு கிடக்குது. அதும் பசி அதுக்குத் தெரியும்" என்று வேதாந்தம் பேசினுன் மிட்டாய்க்காரக் கிழவன்.

ஆனுல் குழந்தைக்கு வேதாந்தமா படியும்? அவ்வளவு ஆவலுடன் நினைத்த தாயாரை கண்ணனுல் நினைக்க முடியவில்லை. தன்னை அவள் சரியாக வரவேற்கவில்லையே, தனக்கு அவள் கையால் ஒரு துண்டு ரொட்டி கொடுக்கவில்லையே என்று நினைத்து நினைத்து ஏங்கிக் கண்ணீர் வடித்தான். மிட்டாய்க்காரன் மடியில் உட்கார்ந்துகொண்டு "தாத்தா, இனிமேல் எனக்கு அந்த அம்மா வாணும். ஒரு நல்ல அம்மா கொணுந்து தரியா எனக்கு" என்று தொந்தரவு செய்துகொண்டிருந்தான்.

தொடர் கதை

சித்ரா

கே. சுந்தரம்மாள்

— 1 —

மாலை ஐந்து மணி ஆன பொழுதிலும் ஆனி மாதத்தின் ஆதவன் உக்ரம் அனலாக வீசிக்கொண்டிருந்தது. கல்லை வைத்துக் கரியேறிய வெண்கலப் பானையைத் தேய்த்த தூப்புக்காரியுடன் சண்டை போட்டுவிட்டு உள்ளே வந்த வீட்டின் எஜமானி இடது கையினால் நெற்றி வேர்வையை வழித்துவிட்டு, வலது கையினால் விசிறிக்கொண்டே கூடத்தில் தொங்கும் ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு "அப்பா! என்ன வெய்யில்; பொழுது சாய்ந்தும் வெப்பம் தணியவில்லையே" என்று ஊஞ்சலாடிக் கொண்டே முணுமுணுத்தாள்.

"மாலை நேர மிதுவே" என்று அடுத்த அறையில் பாட்டின் சப்தம் எழும்பவே "அடீ ஸௌதா! அப்புறம் பாடலாம்; இருட்டி ஏழு ஜாமமாகிறது; தலை பின்னிக் கொள்ள வா" என்று அதட்டினாள் யஜமானியம்மா ஸீதாலக்ஷ்மி.

"அம்மா! நீ எவ்விடமிருந்து கூப்பிடுகிறாய்? சாமான் அறையில் இருக்கிறாயா? சரிதான்! அதுதான் இருட்டிவிட்டது என்கிறாய். சற்று வெளியே வந்து பார், உலகம் எப்படி ஜோதிப் பிழம்பாக அனல் வீசுகிறது என்பது தெரியும்" என்றாள் ஸௌதா.

"போடீ அதிகப்பிரசங்கி! கத்த வித்தையைப் பெற்ற தாயிடமே காட்டு. அதிகப் படிப்பு ஏற ஏற, குதர்க்கம் பேச நன்றாக வருகிறது. எங்கேயோ லெக்சர் இக்சர் என்றாயே, இப்பொழுது பின்னிக்கொண்டு, கண்ணாடிமுன் நின்று பசையும், பொடியும் பூசத்துவக்கினால் லெக்சர் முடியுமட்டும் செல்லுமே வெளிவர என்று கூப்பிட்டால் எதிர்த்துப் பதில் சொல்லுகிறாய்."

"இதோ வந்துவிட்டேனம்மா, கோபித்துக் கொள்ளாதே" என்று சிப்புடன் தாயார் முன் உட்கார்ந்தாள் ஸௌதா.

தலையை வாரிக்கொண்டே "ஏண்டி காமூ! உன் பெண் எங்கேயடி? இன்று விடிந்து இதுவரை காணவேயில்லை" என்றாள்.

"இன்னிக்கு பரிக்ஷை முடிவு தெரியுமாம்; அவ டீச்சர் வரச்சொன்னாளாம்; போயிருக்காள்" என்றாள் சமையலுள்ளில் தோசைக்கு அரைத்துக் கொண்டிருந்த சமையல்காரி காமாக்ஷி.

"அங்கென்னபார்வை? அசக்காதே திரும்பு" என்று வாரிக்கொண்டிருந்த தலையைத் தன்பக்கமாக இழுத்தாள் ஸீதாலக்ஷ்மி.

"ஏதோ நிழல் தட்டினது, யாரென்று பார்த்தேன்" என்று சொல்லி முடிக்குமுன் சித்ரா அவ்விடம் வந்தாள்.

"வா சித்ரா! பரிக்ஷை தேறிவிட்டதா?" என்றாள் ஸீதாலக்ஷ்மி.

"என்னம்மா இப்படிக் கேட்கிறாய்? சித்ராவின் அகராதியில் அந்தப்பதமே கிடையாதே. பஸ்ட் கிளாஸா? ஸகிண்ட்கிளாஸா? என்றுகேள்" என்றாள் ஸௌதா.

"என்ன ஸௌதா! நீ மட்டும் என்னவாம். அப்படியொன்றும் பிரமாதமில்லை, இதைப்பார்த்துக்கொள்" என்று ஒரு கடிதத்தை நீட்டினாள். அதில்—

அன்புமிக்க சகோதரிக்கு வந்தனம்.

இவ்வருஷம் எட்டாம் வகுப்புப் பரிக்ஷையில் உங்கள் பெண் சித்திரலேகா ராஜதானிக்கே முதலாவதாகத் தேறிய சந்தோஷ விஷயத்தை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலே படிப்பதற்கும் நான் வேண்டிய உதவிசெய்யக் காத்திருக்கிறேன்.

இப்படிக்கு, தங்கள்
விதேயை
மாசிலாமணி.

என்று எழுதியிருந்ததை உரக்கப் படித்தாள் ஸௌதாமினி.

"யார்! நான் சொன்னதில் என்ன பிசகு? சித்ரா! பரிக்ஷை தேறியதற்குப் பரிசு என்ன கொடுக்கப்போகிறாய்?" என்றாள் ஸௌதா.

பிரபல டாக்டர்கள் இதை வைத்திய சாஸ்திரத்திற்கே ஒரு கன் கோடை யெனப் போற்றுகிறார்கள்.
எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது
ஜம்பி வேங்கட்ரமணய்யா அண் சன்ஸ்.
1/1, பிராட்வே ரோட், மைலாப்பூர், மதராஸ்.
மற்றும் பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபிஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

Liver Cure Branch Office
Parekh Mansion
Sandhur:t Road, (West)
BOMBAY 4.

"நான் எதைக் கொடுக்கப்போகிறேன். நீதான் எனக்குக் கொடுக்கவேண்டும்" என்றாள் சித்ரா.

"அடீ காமு! தோசைக்கு அரைக்கிறது அப்புறமாகட்டும், இங்கேவா, சித்ரா பஸ்ட் கிளாஸில் பாஸாகியிருக்கிறாள்" என்றாள் ஸீதாலக்ஷ்மி.

"எல்லாம் உங்கள் ஆசிர்வாதம்தான், உங்களுக்கில்லாமல் எனக்கென்ன பெருமை" என்று சொல்லியவண்ணம் மாவரைத்த கையுடன் அவ்விடம் வந்தாள் காமு.

"மாமீ! சித்ராவை மேலே படிக்கவையுங்கள். எங்கள் டீச்சர் உதவி செய்வதாகச் சொல்லியிருக்கிறாள்" என்றாள் சௌதா.

"இனிமேல் படிப்பென்னத்திற்கு? அவா என்ன உதவிசெய்தாலும் துணிமணிகள் மற்றும் முக்ய விஷயங்களுக்கு நாம் செலவழிக்காமல் முடியுமா? மேலும் இப்பொழுது கல்யாணம் செய்துகொடுக்காமல் போனால் உலகம் கண்டபடி சொல்லும். ஏதாவது என் நிலைமைக்குத் தகுந்தபடி ஒருவனைப்பார்த்து ஒப்படைக்க வேண்டியதுதான். அதுவும் நீங்கள் என்னை விட்டுக் கொடுக்காமல் செய்துவிடுவீர்கள்" என்றாள்.

"என்ன மாமி! கல்யாணத்திற்கு அவசரப்படுகிறீர்கள்? சித்ராவின் அழகிற்கு 'நான், நீ' யென்று வரமாட்டார்களா? எஸ். எஸ். எல். ஸி. வரையில் படிக்கட்டும்"

"அடியம்மா, அழகிருந்தால் போருமா? பணமும் அதிருஷ்டமும்தான் வேண்டும். உலகம் பணத்தில்தான் சகல விஷயத்தையும் காண்கிறது. என் நிலைமையே எங்கள் அதிருஷ்டத்தைத் தெரியப்படுத்துகிறதே. என்னமோ நல்லவர்களாகிய உங்களிடம் அடைக்கலம் கிடைத்ததே அதுதான் என்னுடைய நல்லதிருஷ்டம்" என்றாள் காமு.

"என்ன அதிருஷ்டம்? யாருக்கு? எப்பொழுது? எங்கே?" என்று கேட்ட வண்ணம் அவ்விடம் வந்தான் பிரபாகரன்.

"அண்ணா! இப்பொழுது, இங்கே, இன்று சித்ரா ராஜதானிக்கே முதன்மையாகப் பாஸ் பண்ணியிருக்கிறாள். மேலே படிக்கும்படி அவ டீச்சர் நாங்கள் எல்லோருமாக வற்புறுத்துகிறோம். மாமி அது கூடாது. எவன் கழுத்திலாவது கட்டிவிட வேண்டுமென்கிறாள்."

"கல்யாணமா? பேஷ்! பன்னிரண்டாம் வயதில் கல்யாணம் என்பது இந்நாளில் நடக்கக்கூடிய விஷயமா? அதிலும் நமது நாடு இருக்கும் நிலைமையில் வரதக்ஷிணைப் பேய் தலை விரித்தாடும் நம்மரபில், மூன்றாம் தாரமோ ஐந்தாவது தாரமாகவோதான் மாமி மாப்பிள்ளை தேர்ந்தெடுப்பாள். "மாமி! பேசாமல் படிக்கவையுங்கள். எதிர்கால வாலிபர்கள் வரதக்ஷிணைப் பேயின் வாயில் அகப்படமாட்டார்கள், அதனால் கல்யாணம் என்றால் அவ்விஷயம் தனது வாழ்க்கையில் எவ்வளவு தூரம் அவசியமானது என்பதுபற்றித் தெரிந்துகொள்ளும் நிலைமை வந்தபிறகு நல்ல வரனாகக் கிடைப்பான்; கலியாணம் செய்யலாம்" என்றான்.

"நன்னாத்தான் இருக்கிறது பிள்ளைகளின் பேச்சு. சித்ரா வயதில் நான் உன் அப்பாவுடன் குடும்பம் நடத்த வந்தாச்சு. ஸௌதா வயசில் ராஜூ மூன்று மாதக் குழந்தை. பதினெட்டு இருபது என்று வளர்ந்துவிட்டு, பிறகு அதற்குத் தகுந்த வரன் தேடப் படும் கஷ்டம் அளவில்லை? அதுகளுக்கும் ஆனைமேல் வருபவன் அந்துகாலன், குதிரைமேல் வருபவன் கொந்துகாலன் என்கிறதுகள். ஆகவே பாதி பாட்டியான பிற்பாடு கல்யாணம். யாருக்கு வேண்டியிருக்கு இந்தக் காலத்தின் கோலமெல்லாம்?" என்றாள் ஸீதாலக்ஷ்மி.

"இதைப் பாரம்மா! அந்தக்கால விஷயம் வேறு. இந்தக்கால விஷயம்வேறு. ஆதி காலத்தில் பெண்கள் படித்தார்கள். எக் கலையிலும் பாண்டித்யம்பெற்றார்கள். நடுவில் மூட நம்பிக்கையில் பெண்களைக் கல்வியறிவில்லாதவர்களாகச்செய்து, ஆண்களின் சுகஸௌக்யத்தின் இயந்திரமாக நடத்தி வந்து அதே மனப்பான்மை அவர்கள் உள்ளத்தில் உறைந்துபோக அதுவே தங்களின் வாழ்க்கையின் லக்ஷ்யம் என்று நடந்துவந்தார்கள். இப்பொழுது மறுபடியும் 'தாங்களும் அந்த விஷயத்திலும் ஆண்பிள்ளைகளுக்குக் குறைந்தவர்களாக இருக்கமாட்டோம்' என்ற மனப்பான்மையில் வளர்ந்து வருகிறது பெண்ணுலகம். காலத்தை அனுசரித்து நடப்பதே புத்திசாலித்தனம். தருமபுத்ராதிகள்கூடக் காலத்தை அனுசரிக்கவேண்டுமென்று சொன்னதாக நாம் படிக்கவில்லையா? அதற்காக வயது அதிகம் மீறிச்செய்யவேண்டும் என்று சொல்லவில்லை. சித்ரா கொஞ்சநாள் படிக்கட்டும். பதினைந்து பதினாறு வயதில் கல்யாணத்தைப்பற்றி யோசிக்கலாம். சித்ராவிற்கு மணியான வரன் நான் தேடிக்கொடுக்கிறேன், கவலைப்படாதேயுங்கள் மாமி" என்றான்

"அண்ணா, பேஷ்! பின்னால் செய்யப்போகும் பிரசங்கத்திற்கு இது விக்னேசுவரபூஜையா? ஒரு குட்டிப் பிரசங்கமே செய்துவிட்டாயே. சரி, இவையெல்லாமிருக்கட்டும். உன் பிரசங்கம் எத்தனை மணிக்கு?" என்றாள் ஸௌதா!

"சரியாக ஆறுமணிக்கு ஆரம்பம். நாம் ஐந்தரைக்கே கிளம்பவேண்டும்" இதோ நான் உடுத்திக்கொண்டு வந்துவிடுவேன். உனக்குத்தான் பௌடர் போடவே மூன்று மணிநேரமாகும். சீக்கிரம் தயாராக இரு. சித்ரா நீயும் வருகிறாயா?"

"வருகிறாயா, என்று கேள்வியா? ஒரு மாதமாக நாங்கள் இருவரும் வருவதாகத் திட்டம் போட்டிருக்கிறோம். அம்மா! சித்ராவிற்கும் பின்னிவிடு. சித்ரா! பின்னிக்கொண்டு என் அறைக்குவா" என்று எழுந்து சென்றாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் ஸௌதாவின் அறைவாயிற்படியில் வந்து நின்ற பிரபாகரன் "அடடா என்ன அதிசயம்! இன்று மழை நிச்சயம் வரத்தான் போகிறது. அதற்குள் அலங்காரம் முடிந்துவிட்டதே ஸௌதா. சித்ரா உடுத்தியிருப்பது உனது சிற்றாடைதானே! ஆஹா அவளுக்கு இது மிகவும் நன்றாக இருக்கிறது, ஆனால்......" என்று நிறுத்தினான்.

"ஆனால் என்ன?"

"அம்மா உன்னைக் கோபித்துக்கொண்டால்?"

"நான் சொல்லிக்கொள்ளுவேன்"

"ஸௌதா மிகவும் வற்புறுத்தினாள். கோபித்துக்கொண்டுவிடப் போகிறாளே என்று பயந்து உடுத்தினேன். நான் உடுத்தியிருந்த சிற்றாடைக்கு என்ன குறை?"

"அப்படியல்ல. இருவரும் ஏற்றத் தாழ்வில்லாமல் உடுத்திவருவதே நல்லது. என் ஸௌதாமினி என்னிடம் என்ன சண்டை போட்டாலும், சமமாகப் பார்க்கும் இக்குணம் அவளைப் போற்றத் தகுந்ததே" என்றான்.

மூவரும் கீழே வந்து தாயாரிடம் விடைபெறும்பொழுது, சித்ரா சமையலுள்ளில் தனது தாயிடம் சொல்லச் சென்றாள். அந்தச் சமயம்,

"ஏண்டி அவலங்கெட்டவளே, அவளுக்கு உன் புடவையை ஏன் கொடுத்தாய்? சமையல்காரி பெண்ணுடன் சம அந்தஸ்து கொண்டாடுகிறது பைத்தியம்" என்றாள் தாயார்.

"சமையல்காரி என்றால் அவளும் நம்மைப் போல ஒரு ஜீவராசிதான். இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவுவதே நமது கடமைகளின் முக்யத்வம்."

"கடமையும், மடமையுப்: அவளும் உடுத்தி நீயும் உடுத்துவதோ? லக்ஷணக் குறைவோ இரண்டு கண் பொட்டையோ?"

"அவளும் உடுத்தி நானும் உடுத்தினால் என்ன? அன்றையதினம் பெரியம்மா பெண் ஐயத்திற்குக் கொடுக்கவில்லையென்று திட்டினாயே. அவள் இடுப்பெல்லாம் பற்று. அதற்காக மாட்டேன் என்றேன். நீ கொடுக்கத்தான் வேண்டுமென்றாய். பணமிருந்தால், தன் மனிதரென்றால் ஒரு நியாயமா? சித்ராவின் உடம்பு எவ்வளவு பரிசுத்தமாக இருக்கும் தெரியுமா?"

அந்தச் சமயம் சித்ரா அவ்விடம் வரவே சம்பாஷணைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதாயிற்று. மூவரும் காரில் ஏறிச் சென்றுவிட்டார்கள். அவர்கள் வண்டியிலேறுவதைப் பார்த்துக்கொண்டிருந்த ஸீதாலக்ஷ்மி வண்டி சென்றதும் "விளக்கமாற்றுக்குப் பட்டுக் குஞ்சலம்" என்று தோளில் கன்னத்தை இடித்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

2

பந்தடி மைதானத்தில் பிரசங்கமேடையில் பந்தல்போட்டு, மின்சார கலர் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேடை மீது நின்று பார்க்கும்பொழுது ஜன சமுத்திரமாகவே காட்சியளித்தது. காலேஜ், ஹைஸ்கூல், எலிமெண்டரி ஸ்கூல் மாணவமாணவிகள், உபாத்தியாயர்கள், உபாத்தினிகள் மற்றும் மதபேத, ஜாதிபேதமில்லாமல், ஹிந்து முஸ்லிம் முதலிய வாலிபர்களும் கூடியிருந்தார்கள். வரவேற்பு, அக்கிராசனம் முதலிய மீட்டிங் தோரணைகள் நடைபெற்ற பின்பு மூன்று மாணவர்கள் கட்டாயக் கல்வியின் அவசியத்தைப் பற்றியும் பெண்களின் சுதந்திரத்தையும் தேச மக்களின் அடிமை மனப்பான்மையின் காரணத்தையும் பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள். நான்காவதாக, பிரபாகரன் மேடை மீது தோன்றினதும், கூட்டத்தில் பரபரப்பும் கைதட்டலும் ஏற்பட்டன. மாலை மரியாதை முடிந்தவுடன், சபை வணக்கம் செய்து, "சஹோதர சஹோதரிகளே" என்று கணீரென்று சொன்னதும் எங்கும் நிச்சப்தம் நிலவியது.

"நாம் இன்று இவ்விடம் கூடியிருப்பதின் நோக்கம் எதிர்காலச் சமூகச் சீர்திருத்தத்தின் முன்னணியில் நிற்கக்கூடிய வாலிபர்களாகிய நாம், எந்தெந்த விஷயங்களில் சமூகத்தை எதிர்த்துப் போராடி, தீவிரமாக நடந்து உன்னதலக்ஷ்யத்தை நிலைநாட்டுவது என்பதே.

முதலாவதாக 'ஏழை பணக்காரர், தாழ்ந்தவர் உயர்ந்தவர், கௌரவம் அகௌரவம், ஜாதித்துவேஷம் மதத்துவேஷம்' என்ற பாகுபாடுகள் ஒழியவேண்டும். அதற்காகத் தங்கள் தங்கள் மதாசாரங்களைக் கைவிடவேண்டுமென்று சொல்லவில்லை.

மதாசாரமென்று பழக்கத்தினால் வந்த வைகளைக் காலத்தின் தன்மையை உத்தேசித்து, மாற்றிக்கொள்ளவேண்டும். எந்த விஷயங்களிலும் ஒருவருக்கொருவர் வித்யாஸமின்றி ஒரே மனதுடன் உதவிக்கொள்ளவேண்டும். ஒற்றுமையை உறுதியாகக் கடைப்பிடிக்கவேண்டும். மனிதர்கள் என்றால் தவறுதல் இருப்பது ஸர்வஸகஜம். "குற்றம்பார்க்கில் சுற்றமில்லை" என்ற அமுத வாக்யத்தை நினைவுபடுத்திக்கொண்டு, வாலிபர்களாகிய நாம் நடக்க வேண்டும், 'பசிதாகம், தேகநிலைமை, உணர்ச்சிவேகம். இவையெல்லாம் யாவருக்கும் பொதுவான விஷயம். பணமும் பதவியுமுள்ளவர்களுக்குத்தான் இவைகள் ஏற்படும். தாழ்மை, ஏழ்மை பொருந்தியவர்களுக்கு இவை ஏற்படா' என்ற நினைப்பை அடியுடன் ஒழிக்கவேண்டும்.

இரண்டாவதாக, நம்மவர்களில் மிகக் கொடுமையான விஷயம் வரதக்ஷிணை. இது விஷயத்தில்தான் நாம் தீவிர முயற்சி எடுக்க வேண்டும். நமது பெற்றோர்களுடன் இது விஷயமாக எதிர்த்துப் போராடவேண்டும். பணமுள்ளவர்கள் ஏழைப் பெண்களையே தங்கள் செலவில் மணந்துகொள்ளவேண்டும். பணமுள்ள வீட்டுப்பெண்களை ஏழை மாணவருக்கே மணம்செய்து கொடுக்க வேண்டும். வரதக்ஷிணை ஒரு தம்படிகூட வாங்கக்கூடாது. அது மாம்ஸ விக்ரயமாகும். நாம் அவ்வளவு கேவலமா? சிந்தித்துப் பாருங்கள். இப்படி விவாகம் செய்துகொள்ளுவதற்கு, தானும் வருபவளும் சம்சாரம் நடத்தப் போதுமான வரும்படி ஏற்பட்ட பிறகே நாம் கல்யாணத்தைப்

பற்றி நினைக்கவேண்டும். ஒவ்வொருவரும் தன் தன் முயற்சியினுல் முன்னேறப் பிரயத்தனம் செய்யவேண்டும். உலகில் மனிதர்களுக்கு இன்றியமையாத விஷயங்களில் கல்யாணமே முக்யத்வம் பெறுகிறது. அந்த விஷயத்தில் நாம் தீவிர முயற்சி கொள்ளுவது மிக்க அவசியம். இங்கே கூடியிருக்கும் பிரும்மசாரிகளில், பணமுள்ளவர்கள், ஏழைக்குடும்பத்திலுள்ள பெண்களையே மணந்துகொள்ளவேண்டும்'' என்ருன். (அப்படியே செய்கிருேம்) என்ற சப்தம் வானளாவியது. சப்தம் நின்றதும் பேச்சைத் தொடங்கினுன்.

மூன்ருவதாகச் சுதந்திரம். இது ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவானதே. ''பெண்களுக்குச் சுதந்திரமளித்துவிட்டோம்'' என்று சாதாரணமாக உலாவச் செல்வதும், மேடையேறிப் பிரசங்கம் செய்வதும், காலேஜில் படிக்கும்படி செய்வதும் மட்டும் செய்தால் சுதந்திரமாகாது. இல்லற வண்டியின் இரு எருதுகளாகிய தம்பதிகள் ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்து நடப்பதே சுதந்திரச் சின்னமாகும். குடும்பத்தில் நமது இஷ்டத்தை எவ்விதம் எதிர்ப்பின்றி நிறைவேற்றிக் கொள்ளுகிருேமோ, அதேபோல் பெண்களும் தங்கள் இஷ்டப்படி சமயோசிதம் போல் நடந்துகொள்ள வசதியளிக்கவேண்டும். 'நாம் செய்யப்போகும் விஷயத்திற்கு இவளென்ன உதவி செய்யப் போகிருள்? இவளிடம் சொல்லாவிடில் மோசமோ' என்று நினைக்காமல் எந்த விஷயத்தையும் தாய், சகோதரி, மனைவி முதலியவர்களிடம் சொல்லி அவர்கள் ஆலோசனையும் கேட்டு இருதிறத்தாரும் கூடிச்செய்யும் காரியமானது மிக்க வெற்றிபெறும். குடும்பத்திலும் அமைதி நிலவும். காரணத்தை விபரமாக எடுத்துக் கூறினுல் எந்த ஸதியும் மறுப்புக் கூற மாட்டாள். அன்பை அளித்து அன்பைப் பெறவேண்டும். ஒரு சிறு உதாரணம் சிந்தனையில் விட்டுப் பார்ப்போம்; குடும்பத்தின் வரவு செலவுகளை ஸ்திரீகள் அறியாத நிலைமையில் செலவைப்பற்றிய சிந்தனையில்லாமல் குடும்பம் நடத்த ஏதுவாகும். 'நமக்கு வருமானமில்லை யென்பதை அறியக்கூடாது' என்று கடன் பட்டு அவர்கள் இஷ்டப்படி நடந்து வந்தால் பின் அதனுல் வரும் கஷ்ட நஷ்டங்களை அவர்களும்

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினுல் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்ருர்கள்.

சாதாரண கேஸ்களுக்கு	....	ரூ. 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு	....	ரூ. 5
கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு)		ரூ. 4

(வி. பி. அணு 12 கூட)

தயாரிப்பவர்கள்

Mrs. P. DEVEE F. D. S. (C. M.)
Tollygunge, CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும் :—

(1) ஹரி & ஸன், 93, சைனுபஜார் ரோடு, மதராஸ்.
(2) ராஜா மெடிகல் ஹால், 31, தர்மராஜா தெரு, பங்களூர் கண்டோன்மெண்ட்.
(3) L. M. முகர்ஜி & சன்ஸ் லிட்., 167, துரம்டோலா தெரு, கல்கத்தா.
(4) Miss. D. D. பாண்டே, ஹரிநிவாஸ், கிங்ஸ்வே, தாதர், பம்பாய்.

சேர்ந்து அனுபவிக்கும் பொழுது, தங்கள் அறியாமையையும், நமது கௌரவ மனப்பான்மையையும் நினைந்து வருந்தவேண்டி வருகிறது.

நம்மவர்களில் சிலர் குடும்பத்தைப்பற்றிய சிந்தனையில்லாமல், குடும்பம் விருத்தியாவதிற்கூட லக்ஷ்யமில்லாமல், சொற்ப வருமானத்தைக் குடும்பத்தலைவியிடம் கொடுத்துவிட்டு 'என்னவேண்டுமானாலும் செய்துகொள்' என்று சொல்லிவிட்டு, அவர்கள் படும் துன்பத்தையும், தேக சிரமத்தையும், வறுமையின் கோரதாண்டவத்தையும் கவனியாமல் தங்கள் சௌக்யத்தில் குறைவு ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும் வழக்கம் இன்னும் இருந்து வருகிறது. இது பெண்கள் சுதந்திரமாகுமா? வறுமையானாலும் துன்பமானாலும், மனமொத்த இன் சொல்லால் அரவணைக்கும் பக்ஷத்தில், வறுமை பெருமையாகவும் துன்பம் இன்பமாகவும் தோன்றும். வருங்காலத்தில் சமூகத்தின் துணையாளர்களாகும் நாம் இவ்விதமான விஷயங்களை நன்கு ஆலோசனை செய்து மனதில்வைத்து நடக்கவேண்டும்.

கடைசியாக மறுபடியும், பிரும்மசாரிகளையும் கன்னிப் பெண்களையும் நான் தாழ்மையுடன் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுவது, பணமுள்ள ஆண்கள் எளிய வீட்டுப் பெண்களையும், பணமுள்ள பெண்கள், எளிய வீட்டுப் பிள்ளைகளையுமே மணக்கவேண்டும்.

தாய்மார்களே! தந்தைமார்களே! நீங்கள் உங்கள் மக்களின் பிற்கால க்ஷேமத்தைக் குறித்து மனமொத்த மணங்களை, பணம், கௌரவம், குலம் இவைகளின் பெயரால் தடுக்காமல் நான் கேட்டுக்கொண்டபிரகாரம் நடத்திவைக்கும்படி மிகவும் தாழ்மையாக வேண்டிக்கொள்ளுகிறேன்.'' என்று முடித்ததும், சபையெங்கும் சபாஷ் என்ற சப்தமும் கரகோஷமுமாக வானைப் பிளந்துவிடும்போலிருந்தது.

''விதவா'' விவாகத்தைப் பற்றி உன் அபிப்பிராயமென்ன! என்றான் கூட்டத்திலிருந்த காலேஜ் மாணவன்.

''ஆதரிக்கிறேன்; ஆனால், அதுவிஷயமும் கட்டாயம் கட்டுப்பாடு, பணமுள்ளவர்கள், தாழ்மையுள்ளவர்கள் என்றபாகுபாடின்றி, நம்போன்ற வாலிபர்கள்மட்டுமன்றி, இரண்டாந்தாரம் ஏற்கும் பெரியோரும் முயற்சிசெய்ய வேண்டும், இரண்டாந்தாரமாகக் கன்னிப் பெண்களை ஏற்கக் கூடாது. அவ்விதம் நடந்தால் சமூகத்தின் உத்தமப் பெண்மணிகள் இரத்தக் கண்ணீர் சிந்த இடமில்லாமலிருக்கும்.

மேலும் அவர்கள் கல்யாணம் செய்துகொள்ளத்தான்வேண்டும் என்ற அவசியமில்லை. மனோதிடமிருந்தால், உணர்ச்சிகளைத் தன் வசமாக்கும், பொறுமையிருக்கும் பக்ஷத்தில், தனிவாழ்வினாலேயே அமைதிபெற முடியும். ஆடவர்களாகிய நாம் அவர்கள் தனி வாழ்க்கை நடத்துவதற்கு வசதியளிக்கவேண்டும். கல்விக்கு வசதியளித்து, உத்தியோக விஷயங்களில் விட்டுக்கொடுக்கவேண்டும். நேர்மையான முறையில், சகோதர உணர்ச்சியுடன் பழகவேண்டும். அதற்கு நம்மை, நாம் பழக்கிக்கொள்ளவேண்டும். இயற்கையின் வேகத்தை இருபாலரும் தடுத்து வெற்றிகொள்ளவேண்டும். ஆனாலும் சமயங்களில் யௌவனவேகத்தை தடுப்பதும் சற்று சிரமமே. அவ்விதமேற்படும் ஒரு தனி நிலைமையில் நேர்மையான முறையில் தாம் பத்ய வாழ்க்கையை மேற்கொள்ள ஆண் சமூகமே முன்னிற்கவேண்டும். பெண்கள் சுதந்திரம் என்ற பகுதியில் விதவைகளுக்கே அவை பறிமுதலாகின்றன. அடிமை மனப்பான்மையில் நடத்தப்பட்டு வரும் அவர்களின் மனதில் நிரந்தர அடிமையுணர்ச்சியே ஏற்பட்டு விடுகிறது. மீள வழியில்லாமல் துன்பத்திலுழன்று மனம் வெதும்பிச் சிந்தும் அவர்களின் கண்ணீரே சமூகம் முன்னேறுவதற்குச் சாபமாக அமைந்துவிடுகிறது. எந்த நிலைமையிலும் விதவைகளின் ஜீவியத்தைப்பற்றி நாம் சிந்தனைசெய்யக் கடமைப்பட்டுள்ளோம் என்பதைத்தவிர விதவா விவாகம், அவசியமென்றோ, அனாவசியமென்றோ, ஒருவரும் நிர்ணயம் செய்யமுடியாதென்பது எனது துணிபு. அவர்களுடைய சூழ்நிலைமையும், மனோதிடமுமே நிர்ணயிக்கும் பொறுப்பையேற்கும் சக்தி பெற்றது.

காலேஜ் படிப்பினாலும், நவ நாகரிகத் தோற்றத்தினாலும், சமத்துவமாகப் பழகியதினாலும் புதுமைப்பெண் மெருகுடன் தோன்றமாட்டாள். விஷயங்களை ஆழ்ந்து சிந்திக்கும் கல்வியறிவும், அனுபவமும் பெற்று, குடும்பப் பிரச்னையை எழுப்பாமல், அமைதியாக நடத்தும் ஆற்றல் பெறக் குடும்பத்தில் சிறிய வயதுமுதல் கொஞ்சம் பங்கெடுத்துக்கொண்டு நடந்துவந்தால் தேச சுதந்திரம், குடும்ப சுதந்திரம், மக்களின் பாதுகாப்பு இவைகளில் தேர்ச்சிபெற்று, புது மெருகுடன் தோற்றமளிப்பாள் புதுமைப் பெண். காதல் ராஜ்யத்தில் பிரவேசிக்குமுன் சமூகத்தில் நல்ல அனுபவம் பெற்றால் காதல் உலகிலும் ஜோதியாகத் திகழ்வாள் புதுமைப் பெண். காலேஜ் படிப்பினால் மட்டும் புதுமைப்பெண் தோன்றமுடியாது.

எந்த விஷயத்திற்கும் இருபாலாரும், ஒற்றுமையுடன் விட்டுக்கொடுப்பதினால்தான், பெண்கள் சுதந்திரம் முதல் உலக சுதந்திரம் வரை, பிரத்தியக்ஷமாக நடைபெறுவதை யாவரும் காணமுடியும்'' என்று முடித்தான்.

3

பரிதியின் பவனி முடிவுற்றது கண்டு, கைநீட்டி வரவேற்க வெளிவந்தாள் சந்தியா தேவி. அவனது குளிர்ச்சி பொருந்திய மந்தஹாஸ வதனத்தைக் கண்டு மகிழ்ந்த பறவையினங்கள் சப்தித்துக்கொண்டு கூட்டமாகத் திரிந்தன. பங்களாவிலிருந்து தாம்பிரவர்ணியின் படித்துறைவரை மரங்களும், புஷ்பக்கொடிகளும, செடிகளும், பத்திபத்தியாய் அலங்காரமாக வளர்க்கப்பட்டிருந்தன. அப்பங்களாவிற்கே சொந்தமான அப் படித்துறையின் பக்கமாக இருபுறமுமிருந்த மாமரத்தின் கிளைகள் பூர்ண ப்ரவாகத்துடன் செல்லும் தாம்பிரவர்ணியை ஸ்பரிசித்தவண்ணம் 'குலுங்கும் காயும் பழமும் என்னிடமிருக்கின்றன; எடுத்துச் செல்லு' என்பனபோன்று தென்றலில் அசைந்து ஒலித்தன.

பொதுப் படித்துறையல்லாததால் பங்களாவின் சொந்தக்காரர்களே அவ்விடம் வருவார்கள். அதனால் அவ்விடம் அனேகமாக நிச்சப்தமாகவே இருக்கும். காலை ஜலத்திற்குள் தொங்கவிட்டுக்கொண்டு சிறிய குடத்தை மடியில் வைத்து இரு கைகளினாலும் அதன் வாயைப் பிடித்த வண்ணம், பிரவாகத்தையே உற்றுநோக்கியபடி உட்கார்ந்திருந்த சித்திரா ''மாலை நேரமிதுவே'' என்ற பாட்டை மெல்லிய குரலில் பாடிக்கொண்டிருந்தாள்.

''காற்றில் மிதந்து வரும் கீதம்'' என்ற குரலைக் கேட்டதும், திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்த சித்ரா, ''ஓ நீங்களா?'' என்று எழுந்து நின்றாள்.

''ஆம் நானேதான். அதிருக்கட்டும், மாலை மங்கும் நேரத்தில் தனியாக இவ்விடம் வெகு உல்லாஸமாகப் பாடிக்கொண்டிருக்கிறாயே, எவனாவது வந்து கழுத்து காதிலுள்ளவைகளைப் பிடுங்கிக்கொண்டு, உன்னை வெள்ளத்தில் இழுத்துவிட்டாலும் கேள்வியில்லையே, என்ன தைரியம்?'' என்றான் பின் கையைக் கட்டிய வண்ணம் புன்சிரிப்புடன்.

''கோட்டையைப் போலிருக்கும், மதில் சுவரைத் தாண்டி எவனுக்கு இவ்விடம்வர, தைரியம் உண்டு என்ற நிம்மதியில் உட்கார்ந்தேன். அம்மா ஜலம் கொண்டு வரச் சொன்னாள், வந்தேன்; படித்துறையும் பிரவாகமும் மனதிற்கு மிக்க இன்பகரமாகத் தோன்றின, உட்கார்ந்தேன். அநேகமாக நீங்கள் வராவிட்டாலும் சற்று நேரத்தில் திரும்பி யிருப்பேன். தாங்கள்தான் சமய சஞ்சீவியாகக் காப்பாற்ற வந்துவிட்டீர்களே'' என்றாள் சித்ரா.

''உன்னைக் காப்பாற்றும் பொருட்டாகவா நான் இவ்விடம் வந்தேன் என்று நினைக்கிறாய்? அது தப்பு. சந்தி பண்ணும் பொருட்டு வந்தேன்.''

''எப்படி வந்தாலென்ன? எனக்குத் துணையகப்பட்டது. சரி, சௌதா ஒரு சமயம் கூப்பிட்டாலும் கூப்பிடுவாள்; நான் போய் வருகிறேன்'' என்றாள்.

''என்னைக்கண்ட பின்புதான் சௌதாவின் நினைவு வந்ததுபோலும்! இது வீண் சால்ஜாப்பு. என்னிடம் உள்ள பயமே இவ்விதம் சொல்லுகிறாய்''

''பயமா? அப்படி யொன்றுமில்லை. ஆனாலும் அம்மா, எனக்கு வயது பதிமூன்றாகிறது; இனிமேல் உங்களுடன் தனிமையில் பேசக்கூடாது என்று சொல்லியிருக்கிறாள். கண்டுவிட்டால் கோபித்துக்கொள்வாள்.''

''அம்மா கோபிப்பாளே என்ற பயம் தானே, உனக்குப் பயம் தோன்றவில்லையே?''

''எதற்காகப் பயம் தோன்றவேண்டும்? உங்கள் கேள்வியின் அர்த்தம் விளங்கவில்லையே?''

''மிகவும் நல்லது. என்னுடன் தனிமையில் பேசக்கூடாது என்பதற்கு என்ன காரணம் சொன்னாள்?''

''காரணமா? உலகம் கண்டபடி சொல்லிவிடும். நாம் பணமில்லாதவர்கள். மனிதக் கட்டும் கிடையாது. அதனால் நமது வாழ்க்கையே பாழாகிவிடுமென்றாள்.''

''உலகம் கண்டபடி சொல்லுமென்றால் என்னவென்பது உன் மனதிற்கு அர்த்தமாயிற்று?''

''ஐயோ! இதென்ன? இப்படிக் கேட்டுக்கொண்டேபோனால் எனக்குப் பதில்பேசச் சக்தியில்லை. நான் போகிறேன்'' என்று சொல்லியவாறு குடத்தில் ஜலத்தை எடுத்து இடுப்பில் வைத்தாள்.

"சித்ரா! சற்றுப் பொறு. கோபப் படாதே. நான் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டு போகலாம். வீண் கேள்விகள் கேட்கவில்லை. நீ சிறிய குழந்தையல்ல. கொஞ்சம் விஷயங்களைத் தெரிந்துகொள்ளக்கூடிய பருவம்தான். நேற்று மீட்டிங்கிற்கு வந்திருந்தாயல்லவா?"

"இதென்ன கேள்வி? உங்கள்கூடத்தானே வந்தேன். அதிருக்கட்டும், நான் ஒரு விஷயம் கேட்டால் கோபித்துக் கொள்ளமாட்டீர்களே?"

"கோபம் ஏன் வரவேண்டும்? தாராளமாகக் கேள்."

"நேற்று நீங்கள் சொன்னபடியெல்லாம் நடக்கமுடியுமா?"

"ஏன் முடியாது?"

"மற்ற விஷயங்கள் ஒருசமயம் காரியத்தில் நடத்த முடிந்தாலும் முடியும். ஏழைப் பெண்ணைப் பணக்காரர்கள் கல்யாணம் செய்துகொள்வார்களா? அது அவர்கள் கௌரவத்தைப் பாதிக்காதா?"

"அந்தக் கௌரவம் என்ற பதமே மனித அகராதியில் இருக்கக்கூடாது என்பது எனது துணிபு. பிறகு நடத்தமுடியாமலென்ன?"

"என்னமோ, உங்களைப்போலப் படிக்கும் பிள்ளைகள் வேண்டுமானால் சொல்லிக் கொண்டிருக்கலாம். அம்மா அப்பாக்கள் சம்மதிக்கவே மாட்டார்கள்"

"எதைக்கொண்டு இவ்விதம் தீர்மானிக்கிருய்?"

"சாதாரணமாக நான் பார்த்தமட்டிலும், அப்படி நடக்கவில்லை. அப்படிச் சொன்ன பெண்களோ, ஆண்களோ கடைசியில் அவர்கள் மனப்படி நடக்கமுடியாமல் பெற்றவர்களின் கடமைக்குக் கட்டுப்பட்டுத்தான் நடக்க வேண்டி இருக்கிறது. அம்மா முதலிய பெரியோர்கள் பேசிக் கொள்வதிலிருந்து தெரிந்துகொண்ட உண்மையும் இதுதான்"

"அதெல்லாம் பத்தாம்பசலியில். வருங்கால வாலிபர்கள் நாகரிகத்தில் முன்னேறுபவர்கள். உறுதியும் திறனும் படைத்தவர்களாகவே இருப்பார்கள். என்னுடைய தீவிர முயற்சியினால் யாவரையும் நெறியான முறையில் நடக்கும்படி செய்வேன். விஷயங்களைத் தெளிவாக அறிந்த எந்த இளைஞனும் இது விஷயங்களில் பங்கெடுத்துக்கொள்ளப் பின்வாங்கமாட்டான். இருந்தாலும், மற்றப்பேர்கள் எப்படியானாலும், நான் நிச்சயமாக என் கொள்கைப் படியே நடப்பேன். அம்மா அப்பாவிடமும் இதற்காக எதிர்த்துச் சண்டைபோடமாட்டேன். பணிந்து பொறுமையைக் கடைப் பிடித்து அவர்களே சம்மதிக்கும்படி நடந்து கொள்வேன்"

"அம்மாடி" உங்கம்மா எதற்கெடுத்தாலும் கௌரவம் கௌரவம் என்று சொல்லுகிருர்கள். உங்கள் இஷ்டம்போல் எப்படி நடக்கமுடியும்?"

"பார்த்துக்கொண்டே இரு. கௌரவமெல்லாம் காற்றில் பறந்துவிடும்படி செய்துவிடுகிறேன்."

"எல்லாம் வாய்ப்பேச்சில்தான் முடியும்."

"இல்லை காரியத்தில் நடைபெறும்."

"சரி ஒரு விஷயம், நீங்கள் ஸ்ரீமானின் புத்திரர். நான் சமையல்காரியின் பெண். உங்கள் அத்தைபெண் சுகன்யா, ஸ்ரீமானின் புதல்வி. அழகி. கல்வியில் கலைமகள். சங்கீதத்திலும், நாட்டியத்திலும் நோபல் பரிசு பெற்றவள். அவளை உங்களுக்குத் துணைவி யாக்கப் பெற்ருேர்கள் விருப்பம். அதைவிட்டு உங்கள் கொள்கைப்படி என்னைக் கல்யாணம் செய்துகொள்ளுவீர்களா?" என்று பேச்சில் எழுந்த மனவேகத்தில் கேட்டுவிட்டாள். ஆனால், மறுகணம், இயற்கையின் நாணம் மனதில் தோன்ற வலதுகையினால் முகத்தை மூடி, தலையைக் கவிழ்ந்துகொண்டாள்.

"இந்தக்கேள்வியை எதிர்பாராத நிலையில் சற்றுப் பிரமித்து நின்ருன். அவள் நாணத்தினால் தலையைக் கவிழ்ந்துகொண்டதும் ஏதோ உணர்ச்சியினால் தூண்டப்பட்டு, அருகில் சென்று, இடுப்பிலிருந்த குடத்தைச் சுமந்துகொண்டே ஏன் பேசவேண்டும்? நீ கேட்டதில் தப்பென்ன? பேச்சுப்போட்டியில் வெற்றிபெற்றவளல்லவா? உன் பேச்சுக் கேட்பதற்கு இன்பமாகவும், உன் கேள்வி அர்த்த புஷ்டியுள்ளதாகவுமிருக்கிறது. ஆனாலும் இயற்கையின் நாணம் மட்டும் யாவரிடத்திலும் ஒன்று போலவே வியாபிக்கும் போலும்! இப்படி உட்கார். நடக்கக் கூடியதைச் சொல்லுகிறேன்" என்று அவள் முகத்தில் மூடியிருந்த கையை எடுத்தான்.

சட்டென அவன் கையைத் திமிறி விடுவித்துக்கொண்டு வீட்டை நோக்கி ஓட்டமெடுத்தாள்.

லைப்பாய் பழக்கத்தையும் அவன் அறிந்திருக்கிறான்!

இப்பொழுது அவன் அதிக விஷயங்களைக் கற்றுக்கொள்கிறான். ஆனால் லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிக்கும் பழக்கம் தவிர, வாழ்க்கையில் அவனுக்கு வேறொன்றும் அதிக நன்மை செய்யப்போவதில்லை. பாதுகாப்பற்றவர்களை எல்லா இடங்களிலும் பீடிக்கிற அழுக்கு அபாயத்திலிருந்து தான் கற்பித்த புத்திமதிகள் அவனுக்குப் பாதுகாப்பளித்திருக்கிறதென்பதாக அவ்ன் தாய் சந்தோஷமும், பெருமையும் அடையக்கூடும்.



லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.

அது ஒரு நல்ல பழக்கம்.

LEVER BROTHERS (INDIA) LIMITED

L. 77-23 TM

"சித்ரா! சித்ரா! எதற்காக ஓடுகிருய்! நில்லு! நில்லு!" என்று சத்தமிட்டான். அவள் திரும்பிப் பாராமல் ஓடவே, பின்னுல் துரத்திச்சென்று அவள் பின்னலை எட்டிப் பிடித்து நிறுத்தினுன்.

"ஐயோ! விட்டுவிடுங்கள். எனக்குப் பயமாக இருக்கிறது. ஏதோ பேச்சுவாக்கில் கேட்டுவிட்டேன். மன்னித்துவிடுங்கள். யாராவது வந்துவிடப் போகிருர்கள். என் பின்னலை விடுங்கள்."

"இந்த நேரத்தில் ஒருவரும் வரமாட்டார்கள். எதற்காகப் பயப்படுகிருய்? நான் உன்னை ஒன்றும் செய்துவிடமாட்டேன். நீ நின்று நான் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டு போவதாஞல்தான் பின்னலைவிட முடியும். இப்படியே உள்ளே சென்ருல் குடம் எங்கே? என்ற கேள்விக்கு என்ன பதில் சொல்லுவாய்? நான் வந்து உன்னிடம் காலித்தனமாக நடந்துகொண்டதற்காகப் பயந்து ஓடிவந்ததாகச் சொல்லப் போகிருயா?" என்ருன்.

ஏதோ தோன்றிய நாணத்திஞல் ஓடிஞளே தவிர, குடமில்லாமல் போனுல் இவ்வளவு கேள்விகள் வரும் என்பதுபற்றி நினைக்காத நிலைமையில் பிரபாகரனின் சொற்கள் அவளைத் திடுக்கிடும்படி செய்தன. "ஐயோ, அப்படி எதற்காகச் சொல்ல வேண்டும். ஏதோ பேச்சின் சுவாரஸ்யத்தில் அவ்விதம் கேட்டுவிட்டேன். கேட்கும்பொழுது ஒன்றும் தோன்றவில்லை. பிறகு மிகவும் லஜ்ஜையாகவும் வேதனையாவுமிருந்தது. அதனுல் ஓடினேன். நீங்கள் சொன்ன பிறகுதான், குடத்தைப்பற்றின கேள்வி வரும் என்பது நினைவு வந்தது. பின்னலை விட்டுவிடுங்கள். நீங்கள் சொல்லப்போவதைக் கேட்டுவிட்டுக் குடத்தை எடுத்துச் செல்லுகிறேன்" என்ருள்.

"சரி. ஆனுல் படித்துறைக்கே செல்லுவோம் வா. இவ்விடம் வெளிச்சம் குறைந்து வருகிறது. ஏதாவது பூச்சி பொட்டு வந்தாலும்" என்று அவள் பின்னலை விட்டான். இருவரும் படித்துறைக்கு வந்தார்கள். வான முகட்டில் பௌர்ணமி சந்திரன் எட்டிப் பார்த்தான். "சித்ரா! இதுவரை இதுபற்றி என்மனதில் ஒன்றும் தோன்றினதில்லை. உன் கேள்வி மெச்சத் தகுந்ததே. உனக்கு என்மீது அன்பிருக்கும் பக்ஷத்தில், அதோ இப்பொழுதே தோன்றும் சந்திரன் சாக்ஷியாகவும், ஆகாயவாணி சாக்ஷியாகவும், எனது கல்வியின்மீது ஆணையாகவும், எந்த விதமான எதிர்ப்புவந்தாலும் பணிந்துகொடுத்து, சமூகத்தையே எதிர்த்துநின்று, உன்னையே எனது வாழ்க்கைத் துணைவியாகக் கொள்ளுவேன்".

"ஐ ஐயோ! ஆணையைக் கழித்துவிடுங்கள். நான் கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லை. எங்கள் டீச்சரின் உதவியிஞல் S. S. L. C. முடித்து டாக்டராகி உலகிற்கு உழைக்கப்போகிறேன். அல்லது உபாத்தினியாகப்போகிறேன். எங்கள் டீச்சர்மாதிரி கல்யாணமில்லாமலே காலம் கழிக்கப் போகிறேன். அதற்காக உங்கள் மீது அன்பில்லையென்று நினைத்துக்கொள்ளாதேயுங்கள். உங்கள் வீட்டில் எல்லாரிடத்திலும் எனக்கு அன்புதான். ஆனுலும் ஸௌதாவிடம்தான் அளவற்ற அன்பு தோன்றுகிறது."

கள்ளமற்ற குழந்தையுள்ளத்தின் பேச்சைக் கேட்டு மனதிற்குள் சிரித்துக்கொண்டான் பிரபாகரன். "சித்ரா! கல்யாணத்தின் அவசியத்தைப்பற்றி அறிய இன்னும் கொஞ்ச நாள் செல்லவேண்டும். அப்பொழுது என்னை ஏற்றுக்கொண்டால்போதும். தற்சமயம் உன்னிடம் இவ்விஷயத்தைப் பற்றிப் பேசினுல் உனக்கு ஒன்றும் விளங்காது என்பதை என் உணர்ச்சியில் மறந்துவிட்டேன். ஒன்று சொல்லுகிறேன் ஞாபகத்தில் வை. உங்கள் டீச்சரில் மாசிலாமணி உரம்பெற்ற மனம் படைத்தவள். அவளின் சூழ் நிலைமையும் அவளுக்கு உதவியளிக்கிறது. அதனுல் அவள் கல்யாணமில்லாமல் பரிசுத்தமான வாழ்க்கை நடத்துகிருள். அடுத்தாற்போல் காத்யாயினி விஷயம் உனக்குத் தெரியுமா?"

"அவளைப்பற்றி என்ன விஷயம்? அவளும் கல்யாணமில்லாமல்தான் எப்பொழுதுமிருக்கப்போவதாகச் சொல்லுகிருள். அடிமைத் தளையில் அகப்பட்டுக்கொள்ளாதிர்கள் என்று எங்களுக்கெல்லாம் புத்திமதி சொல்லுகிருள். நம்மை நாம் காப்பாற்றிக்கொள்ளும் திறமையில்லாவிடில்தான் ஆண்களுக்கு அடிமையாகி, சுதந்திரமற்று வாழவேண்டும், படித்து உத்தியோகம் பெற்று, நம்மை நாமே காப்பாற்றிக்கொள்ளும் சக்தி யேற்பட்டுவிட்டால் கல்யாணம் அவசியமே இல்லை. நமது ஜீவனத்தின் அவசியத்திற்குத்தான் கல்யாணம் என்று சொல்லுவாள். அப்படியிருக்க அவள்மீது என்ன குற்றம்?" என்ருள்.

"அவள் அபிப்பிராயத்தில் ஜீவனம் நடப்பதற்காகத்தான் கல்யாணம் என்பதோ? அப்படியாஞல் அவளுக்குத்தான் ஜீவனத்

தைப்பற்றிக் கவலையில்லையே. கல்யாணம் எதற்குச் செய்துகொள்ளப் போகிறாள்? இயற்கையில் ஏன் வசப்பட்டாள்? மனதை ஏன் அடக்கமுடியவில்லை?" என்றான்.

"காத்தியாயினிக்குக் கல்யாணமென்று சொன்னது யார்?"

"நாளை ஞாயிற்றுக்கிழமை திருநாங் கோவிலில், அவளுக்கும், புரொபஸர் கே. என். சர்மாவிற்கும் கல்யாணம். ரிஜிஸ்ட்டர் வேறு. இன்னும் ஏழுமாதத்தில் தாய்மை ஸ்தானம் பெறப்போகிறாள்.'

"என்ன நிஜமாவா?" உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"உன்னைப்போல் சிறிய வயதிலிருந்து கல்யாணம் செய்துகொள்ளப் போவதில்லையென்று மாசிலாமணியின் சிஷ்யை ஆனாள். இவ்வூருக்கு மாற்றிவந்து ஐந்துவருஷமாகிறதல்லவா? சர்மாவின் சம்சாரம் இறந்து நான்கு வருஷமாகிறதல்லவா? ஒரே குமாரியின் நிமித்தம் மறுமணம் செய்துகொள்ளவில்லை. குமாரிக்கு ட்யூஷனுக்கு அமர்ந்த காத்யாயினி, சர்மாவின் மனதை வாட்டினாள். காத்யாயினி எவ்வளவோ உறுதியுடன் அவருக்கு இடங்கொடுக்காமல் இரண்டு வருஷம் கழித்தாள். ஆனாலும் ஏதோ ஒரு சக்தி அவரை மறக்கமுடியாமல் செய்துவந்தது. மாசிலாமணிக்குக்கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற மிக்க அவஸ்தைப்பட்டாள். இருதலைக்கொள்ளி எறும்புபோல் தவித்தாள். குமாரி மாமா வீட்டிற்குச் சென்றது தெரியாமல் சர்மாவின் வீட்டிற்குச் சென்ற காத்தியாயினியைத் தனி அறையில் வரவேற்றார் சர்மா. ஜீவனத்திற்காகக் கல்யாணம் என்று எண்ணியிருந்த காத்தியாயினி இயற்கையின் வசமானாள். மற்ற விஷயங்களை உனக்குச் சொன்னால் புரியாது. தக்க வயது வந்தபின் அறிந்து கொள்ளுவாய். இரகசிய நட்புப் பகிரங்கமாகும் சின்னம் மூன்று மாதமாகிவிட்டது. விஷத்தைக் குடித்து இறக்கத் துணிந்தாள் காத்தியாயினி. அந்தச் சமயம் சர்மாவினால் ஒரு காரியமாக அவளிடம் சென்ற நான் விஷயத்தை அறிந்து டெலிபோன் செய்து சர்மாவை அழைத்தேன். அவர் வந்ததும் விஷயம் வெளியாயிற்று. உடனே மாசிலாமணி வரவழைக்கப்பட்டாள். திக்பிரமையுற்ற மாசிலாமணி "மனம் பேய்" என்பதை அறிந்து அவர்கள் விவாகத்திற்கு அனுமதி கொடுத்தாள். இஷ்டமிருந்தால் வேலை பார்ப்பதில் தனக்கு ஆக்ஷேபணையில்லையென்று சொன்னாள். மாணவிகள் முகத்தில் விழிக்க லஜ்ஜையாக இருப்பதினால் ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினாள். ஒத்துக்கொண்டாள். இனிமேல், கல்யாணம் வேண்டாம் என்று பாடம் கற்பிக்கக் காத்தியாயினி வரமாட்டாள், தெரிந்ததா?" என்றான்.

"அவளைப்போல் நானும் செய்வேன் என்பது உங்கள் அபிப்பிராயமா?"

"யார் கண்டது? கூடியமட்டும் முயற்சி செய்யலாம். இயற்கை ராஜ்யம் செலுத்தும்பொழுது அடிமையாக என்னை ஏற்றுக் கொள்ளு" என்றே சொல்லுகிறேன்.

"என்னவெல்லாமோ சொல்லுகிறீர்கள். ஒன்றுமே விளங்கவில்லை. எல்லாம் வீண் பேச்சு. உங்க அம்மா என்னைக் கல்யாணம் செய்துகொள்ள நிச்சயம் சம்மதிக்கமாட்டாள். ஒன்றுமட்டும் சொல்லுகிறேன். உங்கம்மா சம்மதம் பெற்றால் உங்களைக் கல்யாணம் செய்துகொள்ள ஆக்ஷேபணையில்லை. தாங்கள் சுகன்யாவின் கணவராகிவிட்டால் என்னிஷ்டப்படி கல்யாணமில்லாமலே காலம் கழிப்பேன். அதற்கு எங்கள் டீச்சர் மாசிலாமணி உதவிசெய்வாள்!"

"சுகன்யாவின் கணவன் ஓர் ஏழை மாணவனாகவே இருப்பான். என் கொள்கைகளை எங்கள் குடும்பத்திலேயே நடத்திக்காட்டுவேன். சௌதாவிற்கும் அவள் விருப்பப்படி ராகவனே கணவனாகும்படி செய்வேன். அதேபோல் எனக்கும் நீதான். எனக்காக நீ செய்யவேண்டுவது கொஞ்ச நாட்கள் பொறுக்கவேண்டும். வேறு கல்யாணத்திற்கு இடமில்லாமல் படித்துக் கொண்டிரு. உனக்கு வேண்டிய உதவி நான் செய்கிறேன்."

"சரி. உத்தரவுப்படி நடக்கச் சித்தமாக இருக்கிறேன், பிறகு விதி விட்டவழியாகட்டும்" என்றாள்.

"ரைட். அதுதான் புத்திசாலிக்கழகு. சித்ரா! பூர்ண நிலாவினில் நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய். உன் தோற்றம் என் மனதிற்கு மிக்க இன்பகரமாக இருக்கிறது" என்றான் யௌவனத்தை எட்டிப்பிடித்த மன விஹாரத்தில் ஒரு முத்திரைக்கு ஏங்கின பிரபாகரன்.

"அந்த நிலைமையை எட்டிக்கூடப் பார்க்காத குழந்தையுள்ளத்தில் இவன் கேள்வியின் அர்த்தமோ, உள்ளக் கிளர்ச்சியின் வேகமோ ஒன்றும் தோன்ற நிலைமையில்

புகழுரைக்கு வெட்கி, "போங்கள் என்னைப் பரிஹாஸம் செய்கிறீர்கள்" என்று முகத்தைத் திருப்பியவள் சற்றுத்தூரத்தில் ஓர் உருவம் தன்னை நோக்கி வருவது கண்டு, "ஐயோ! அம்மா வருகிருள்; என்னசெய்வது?" என்ருள் பதறி மெல்லிய குரலில்.

பிரபாஹரனும் திடுக்கிட்டான். இருந்தாலும் தைரியமாக, "சித்ரா, நீ ஒன்றும் பேசாதே; நான் பதில் சொல்லிக் கொள்ளுகிறேன்" என்ருன்.

"சித்ரா, என்ன செய்கிருய்? வெள்ளத்தில் விழுந்துவிட்டாயோ என்று பயந்து வந்தேன். நன்ருக இருக்கிறது. நான் சொன்னதென்ன? நீ செய்வதென்ன?" என்ருள் கடுமையாகத் தாயார்.

"மாமி! கோபப்படாதிர்கள். அவள் லோலாக்கு ஜலமெடுக்கும்பொழுது சங்கிலி விட்டு ஜலத்திற்குள் விழுந்துவிட்டது. அழுதவாறு தேடிக்கொண்டிருந்தாள். சந்தி பண்ண வந்த நான் தேடி எடுத்து, சங்கிலியை நெருக்கிக் கொடுத்தேன். காதில் போட்டுக்கொண்டு புறப்படும் சமயம் நீங்களும் வந்தீர்கள்" என்ருன்.

அவன் சமயோசித வார்த்தையைக் கேட்டு ஆச்சரிய மடைந்த சித்திரா "ஆமாம் அம்மா, நேற்றே உன்னிடம் தேய்ந்திருக்கிறது என்று சொன்னேனல்லவா?" என்ருள்.

"சித்ரா! லோலாக்குப்போனல், மறுபடி வாங்கலாம். மானம் போனல் திரும்ப வாங்க முடியாது. இன்னெரு தடவை இந்த நிலைமையில் நான் கண்டால், நிச்சயம் உன்னை இந்த ஆற்றில் தள்ளி, நானும் விழுந்துவிடுவேன். ஜாக்கிரதை" என்ருள்.

"என்ன மாமி! இப்படிப் பேசுகிறீர்கள்? நான் என்ன கடையனு? காவாலியா?" என்ருன்.

அவன் கேள்வி காமாக்ஷியின் மனதில் அம்பெனப் பாய்ந்தது. "பிரபாகரா! என்னை மன்னித்துவிடு. நீ உத்தம புத்திரன். என் நிலைமையின் வேதனை அப்படிப் பேசும்படி செய்துவிட்டது. உன்னைப்பற்றி இழிவாக நினைத்தால் கிடைக்கும் அன்னமும் போய் விடும். பாமர உலகம் வீண் வசைக்கு உள்ளாக்கும். உன் பெயரும் கெட்டுவிடும். அவள் வாழ்வும் பாழாகிவிடும். யாரும் தன் நிலையை அறிந்தே நடக்கவேண்டும். ஏதாவது வார்த்தை ஏற்பட்டுவிட்டால், அவள் கல்யாணமே தடைப்பட்டுவிடுமே. அது சிறிசு. அறியாமல் நீ இருக்குமிடம் வந்தாலும், நீ சற்று ஒதுங்கிப் போய்விடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சமூகத்தைச் சீர்திருத்தப் பிரசங்கம் செய்பவன். ஏழையின் துன்பம் களைபவன். சித்ராவைப் பழியில்லாமல் காப்பாற்றுவது உன் பொறுப்பு" என்ருள்.

"மாமீ! கவலைப்படாதேயுங்கள். பழியொன்றும் ஏற்படாது. மிஞ்சினுல் நானே அவளைக் கல்யாணம் செய்துகொள்ளுவேன்"

கட கட வெனச் சிரித்துவிட்டு, "ஐயோ! அப்பாவிப்பிள்ளையே. இளங்கன்று பயமறியாது என்பதுபோல் பேசுகிருய்! இது எங்காவது நடக்குமா? உன் அந்தஸ்தென்ன? சமையல்காரியின் பெண் எங்கே? சும்மா மேடையில் நின்று பேசலாம் தம்பி. காரியத்தில் ஒன்றும் நடவாது" என்ருள்.

"என் கொள்கையைக்காரியத்தில் காட்டுவேன். பார்த்துக்கொண்டே இருங்கள். சித்ராவைத்தான் நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்"

"ஐயோ! அசடே, வாயை அலம்பு. பேசாமல் உன் படிப்பைக் கவனி. சித்ராவின் கல்யாணம் ஆனபடியாகட்டும். உன் அம்மா காதில் விழுந்தால் என் பிழைப்பிற்கே மண் விழுந்துவிடும். என் பிழைப்பைக் காப்பாற்று. அதுவே பெரிய உபகாரம். சித்ராவிடம் தனிமையில் பேசாதே. உனக்குக் கோடி புண்ணியம் உண்டு. சித்ரா! வா போகலாம்" என்ருள்.

அவர்கள் சென்ற திசையைப் பார்த்த வண்ணம் சற்று நேரம் நின்றுகொண்டிருந்துவிட்டு, சந்திபண்ண ஜலத்தில் இறங்கினன். ஜபத்தில் மனம் செல்லவில்லை. "என்னைக் கல்யாணம் செய்து கொள்வீர்களா?" என்று கேட்ட சித்ராவின் உருவமும் ஒலியுமே முன்னின்றன. ஆம், இவ்வளவு நாள் இதைப்பற்றி நாம் நினைக்கவேயில்லை. சௌதாவைப் போல் சித்ரா என்று தோன்றிக் கொண்டிருந்தது. இன்று அவள் கேள்வி, கையில் வெண்ணெயிருக்கும்போது நெய்யைத் தேடிச் செல்வது போன்றிருந்த எனது மடமையை உணர்த்திற்று. இந்த விஷயத்தில் நாம் பின்வாங்கக்கூடாது. சித்ராவே என் இன்ப நிலயம் என்று எண்ணியவாறு வீட்டை நோக்கி நடந்தான்.

தியாகமா துரோகமா?

ஹரிணி

மானவனின் வாழ்க்கையே உல்லாச வாழ்க்கை. அதுவும் அவனுடைய முயற்சிக்குத் தகுந்த பலன் கிடைத்துவிட்டால்—முயற்சியில் வெற்றி யடைந்துவிட்டால்—உல்லாசத்திற்கும், உத்சாகத்திற்கும் கேட்கவேண்டுமா?

அன்றையதினம் சிவராமனுடைய மனம் கட்டுக்கடங்காத சந்தோஷத்தினால் துள்ளியது. காரணம், பரீக்ஷையின் முடிவுகள் அன்றுதான் வெளிவந்திருந்தன. சஸ்திர சிகித்சைத் தனிப் பரீக்ஷையில் சிவராமன் ராஜதானியில் முதலாவதாகத் தேறியிருந்தான். அவன் மனம் ஆனந்த உலகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது.

அச்சமயம் 'ஆஸ்பத்திரி ப்யூன்' முருகப்பன் கொண்டுவந்த அந்தக் கடிதம் அவனை வெறிகொள்ளச் செய்தது. சுமித்திராதேவி தன்னுடைய சந்தோஷத்தைத் தெரிவித்து எழுதியிருந்தாள். அழகிய முத்துக்கள் போன்ற எழுத்துக்கள். அன்பு ததும்பும் வாக்கியங்கள். அவன் மனம் இன்பமயமான கற்பனையில் ஈடுபட்டிருந்தது.

*   *   *

சுமித்திராதேவி அந்த ஊர் பெரிய ஆஸ்பத்திரியில் 'நர்ஸ்'. நல்ல அழகி, தந்தப் பதுமைபோன்ற சரீரம். சுறு சுறுப்பும், கருணையும் கலந்த பார்வை. புன்சிரிப்புத் தவழும் முகம். சாந்தமும், அடக்கமும் நிறைந்த அவளுடைய குணம் எல்லாருடைய மனதையும் கவர்ந்திருந்தது. அங்கே வேலை செய்யும் இளம் 'டாக்டர்'கள், அவள் பின்னால் வண்டுகளைப்போல் வட்டமிட்டுக் கொண்டேயிருப்பார்கள். ஆனால் அவள் மனம் சிவராமனைத்தான் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. அவள் கண்களில் தான் என்ன சக்தியிருந்ததோ தெரியவில்லை. அது சிவராமனை அடிமைகொண்டுவிட்டது.

"சுமித்ரூ!" என்று கூப்பிட்டவண்ணம் தட தடவென்று உள்ளே நுழைந்தான் சிவராமன். அன்று அவன் பேச்சில் ஒரு தனி வேகமும், நடையில் ஒரு சுறுசுறுப்பும் காணப்பட்டன.

"கங்கிராஜுலேஷன்ஸ்(   ) சிவராம்!" என்று கைகுலுக்கினாள் சுமித்ரா.

"மெனி தாங்க்ஸ் டியர்" (   ) என்று கூறி, அவள் கையை அழுத்திப் பிடித்தான்.

இன்பமயமான பேச்சில் ஈடுபட்டிருந்த அவர்களுக்குப் பொழுது போனதே தெரியவில்லை. கைக்கடியாரத்தைப் பார்த்த சிவராமன் துள்ளியெழுந்து, "சுமீ! ரொம்ப நாழியாகிவிட்டது, நான் போய் வரட்டுமா? 'டவுனு'க்குப் போய் கொஞ்சம் சாமான்கள் வாங்கவேண்டும். நாளைக்கு ஊருக்குப் போகலாமென்று உத்தேசம்" என்றான்.

"என்ன! ஊருக்கா?" என்று திடுக்கிட்டாள் சுமித்ரா.

"ஆமாம். தாத்தா வரச்சொல்லி எழுதியிருக்கிறார். சீக்கிரமே திரும்பிவிடுவேன். அதென்ன சுமித்ரா! அப்படிப் பார்க்கிறாய்? பயப்படாதே. ஜயத்துடன்தான் திரும்புவேன்." என்றான் வாழ்வில் அபஜயத்தையே அடையாத சிவராமன். ஆம், வாழ்க்கையில் எப்போதும் வெற்றியே அடைகிறவர்களுக்கு அபஜயத்தைப் பற்றி நினைக்கக்கூடத் தோன்றாதல்லவா?

"தாத்தாவும், அம்மாவும் சம்மதிக்காவிட்டால்?" என்றாள் தலைகுனிந்தவண்ணம்.

"அம்மாவா சம்மதிக்கமாட்டாள்? ஒருகாலும் இல்லை, அம்மாவுக்கு நான்தான் உயிர், தெரியுமா? என் சுகம்—என் சந்தோஷம் தான் அவளுக்கு லட்சியம். தாத்தாவை மெள்ளச் சரிப்படுத்திவிடுவேன். என்ன சுமீ! நான் வரட்டுமா?" என்று அன்பு ததும்பக் கூறியபடியே வாசலை நோக்கி நடந்தான்.

"சரி! போய்விட்டு வாருங்கள்" என்று கூறியபடியே அவளும் கூடவே வந்தாள்.

"இதோபார், சுமீ! தாத்தாவைப்பற்றிக் கவலை இல்லை. அம்மாவிடம் தான் உத்தரவு வாங்க வேண்டும். அவள் சம்மதமின்றி, உத்தரவின்றி எது செய்யவும் என் மனம் இடம் கொடுக்காது. பாவம். அவள் மனம் நொந்தவள். வாழ்க்கையில் சுகத்தையே அறியாதவள்" என்று சொல்லும்பொழுது அவன் குரலில் பரிவும் மதிப்பும் கலந்திருந்தன.

"சரி! உங்களிஷ்டம்; போனதும் கடிதம் எழுதுங்கள்."

"ஓ! கட்டாயம். வரட்டுமா? எல்லாம் சரியாக நடக்கும். பயப்படாதே." என்று கூறி 'மோட்டார்' சைக்கிளின் விசையை அழுத்தினான். அதுவும் உத்சாகத்துடன் கோஷமிட்டுக்கொண்டு கிளம்பியது. சுமித்ராதேவி வெகுநேரம் வரை— சைக்கிளின் சப்தம் காதைவிட்டு விலகும் வரை—வாசற்படியில் சாய்ந்தவண்ணம் நின்றுகொண்டிருந்தாள். அவள் மனம் யோசனையில் ஆழ்ந்திருந்தது.

* * *

சங்கரய்யர் சுயமுயற்சியினால் வாழ்வில் வெற்றி கண்டவர். நல்ல சொத்துக்காரர். உழைப்பாளி. ஆசார சீலர். அவருடைய மனைவி பார்வதியம்மாள் இறந்து வெகு நாட்களாகிவிட்டன. அவளுக்கு நான்கு பெண்களும், ஒரு பிள்ளையும். தன்னுடைய ஒரே பிள்ளையான மகாலிங்கத்தினிடம் அவருக்கு அபரிமிதமான வாஞ்சை. ஏன்? வீட்டிலுள்ள எல்லாருக்குமே அவனிடம் ஒரு தனி அன்புதான். அளவற்ற அருமையினால் அவன் சுயநலக்காரனாகிவிட்டதில் அதிசயமென்னவிருக்கிறது? அவன் கேட்டது உடனே கிடைத்துவிடும். கஷ்டமென்பதே தெரியாமல் வளர்த்துவிட்டனர். கடைசியில் அவன் பொறுப்பற்றவனாகவும், பொறுமையற்றவனாகவும் ஆகிவிட்டான்.

முரடனும், சுயநலக்காரனும், உல்லாச புருஷனுமான மகாலிங்கத்திற்கு, சாதுவாகவும், தியாக உருவமாகவும், உழைப்பாளியுமான மனைவி கிடைத்தாள்.

காமாக்ஷி நல்லபெண். கணவனுடைய பொறுப்பற்ற தன்மையை ஈடுபடுத்த நினைப்பவள்போல், சகலவிதமான பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு, பொறுமையுடன் குடித்தனத்தை அழகாக நடத்தினாள்.

வருஷங்கள் மறைந்தன. காமாக்ஷியும் ஆறு குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாள். நாத்தனார் குழந்தைகளின் படிப்பு, கல்யா

மெரீ"பிஸ்கோத்
Merry
BISCUITS. (ERODE)
மெரி பிஸ்கோத் கம்பெனி
உயர்தர பிஸ்கோத்துகள் தயாரிப்பவர்கள், ஈரோடு.

ணம், பிரசவம் எல்லாவற்றிற்கும் காமாக்ஷி தான் செய்யவேண்டும். இதனிடையில் தன் குழந்தைகளின் பராமரிப்பு.

வீடு நிறையப் பேரனும், பேத்தியுமாகக் கலகலப்புடன் விளங்கியது சங்கரய்யருடைய கிரகம். காமாக்ஷி அலுக்காமல், சலிக்காமல் குழந்தைகளுக்குச் செய்வாள். சிறு குழந்தைகளை மாற்றி மாற்றித் தூக்கி வைத்துக்கொண்டே இருப்பாள். எல்லாக் குழந்தைகளும் அவளிடம் ஒட்டிக்கொள்ளும். "என்னடீ இது! இடுக்கின குழந்தையையும், என்னையும் பாரு என்று, காமாக்ஷி யாட்டுமா நிக்கறயே," என்றுகூட அந்த ஊரில் சொல்லுவது வழக்கம்.

தன்னலமற்ற ஓயாத உழைப்பினுல் அவள் சரீரம், ஒட்டி உலர்ந்து, தேய்ந்து, அவள் செய்த உழைப்பிற்கு நிதரிசனமாக நின்றது. பொறுப்பற்ற மகாலிங்கம் கடைசியில் ஒருநாள் தன் குழந்தைகளையும் மனைவியையும், கிழவர் காலில் கட்டிவிட்டுப் போய்விட்டான்.

தாயற்ற குழந்தைகளைக் காப்பாற்றியாகி விட்டது. இப்பொழுது தகப்பனற்ற குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு கிழவர் தலையில் சுமந்தது. புத்திர சோகத்தினுல் வாடிய கிழவருக்கு, காமாக்ஷியின் ஒரே பிள்ளையான சிவராமன்தான் ஆறுதல் அளித்துவந்தான்.

* * *

பிற்பகல். ஒருமணி சமயம். சங்கரய்யர் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். காமாக்ஷி பரிமாறிக்கொண்டிருந்தாள். திடீரென்று கிழவர் "இந்தா, காமாக்ஷி! இந்தப்பிள்ளை என்னமோ, எந்தப் பெண் வந்தாலும், இது சொத்தை. அது சொள்ளை என்று சொல்லிக்கொண்டிருக்கிருனே. இப்படியே காலத்தை ஓட்டிக்கொண்டிருந்தால் கல்யாணம் எப்படி ஆகும்? நீயாவது சொல்லக் கூடாதா?" என்ருர். காமாக்ஷி பதில்பேசவில்லை.

"இதெல்லாம் நல்லத்துக்கில்லை, உருப்படாமல் போகத்தான் வழி. ஒத்தனேடெ பட்டாச்சு. இதுவும் தத்தாரியாகத்தான் வழி. ஒருநாளில்லாவிட்டால், ஒருநாள் எந்தப் பறச்சியையோ. சட்டைக்காரியையோ இழுத்துண்டு வந்து நிற்பான், அவ்வளவுதான்." என்ருர் ஆத்திரமாக.

"அப்படியெல்லாம் ஒருநாளும் செய்யமாட்டான் என்பிள்ளை. அவனைமாத்திரம் அப்படிச் சொல்லவேண்டாம். அவன் தங்கம்ஞ." என்று படபடப்பாகக் கூறிவிட்டாள். எதிரில் நின்று பேசியறியாத காமாக்ஷி எப்படித்தான் பதில் சொன்ஞளோ, அவளுக்கே தெரியவில்லை.

கிழவர் திடுக்கிட்டார். தலை நிமிர்ந்து காமாக்ஷியைப் பார்த்தார். "காமாக்ஷி!" என்ருர். அவர் குரலில் அதிகாரமும் ஆச்சர்யமும் தொனித்தன. கையில் கரண்டியுடன் குனிந்த தலை நிமிராமல் நின்ருள் காமாக்ஷி. அவள் கண்களில் கண்ணீர் ததும்பியது.

அதே சமயம் சமையலறையில் வாசற்படியில் காலை வைத்த சிவராமனும் திடுக்கிட்டு நின்றுவிட்டான். உரத்த குரலில்கூட பேசி யறியாத அம்மாவா இப்படிப் பதில் சொன்ஞள் என்று அதிசயப்பட்டான். தன்னிடமுள்ள அன்பினுல், தன் குழந்தையைப் பிறர் தூஷிப்பதைப் பொறுக்க முடியாமையினுல் அல்லவா துணிந்து பதில் சொல்லிவிட்டாள் என்று நினைக்கும்பொழுது அவன் மனம் கரைந்தது.

"அப்படி ஒருநாளும் செய்யமாட்டான் என் பிள்ளை" என்ற அந்த வாக்கியத்தைக் கேட்டதும் அவன் மனதில் ஏனே 'திக்' கென்றது. அவனுல் அங்கு நிற்கமுடியவில்லை, பலவித எண்ணங்கள் அவனைத் துரத்தின. "என்ன தீவிரமான நம்பிக்கை." என்று முணு முணுத்தபடியே திரும்பி, தன்னறைக்குச் சென்றுவிட்டான்.

* * *

"எவ்வளவு நம்பிக்கை. தன் குழந்தையின் நடத்தையில் எவ்வளவு திடமான நம்பிக்கை. நம்பிக்கை, பிரேமை என்பதுதான் தாயின் உருவமா?" என்று எண்ணமிட்டான் சிவராமன். "ஐயோ! அம்மா! உன் மடியில் படுத்துப் பால் குடித்த-பால் மணம் மாருத—பாலகன் என்று என்னை நினைத்திருக்கிருயா? உன் தோள்களைக் கட்டிக்கொண்டு கொஞ்சி விளையாடிய சின்னஞ்சிறு குழந்தை என்று என்னை நினைக்கிருயா? நான் வளரும்பொழுது எனது மனமும் வளர்ந்துவிடவில்லையா? அம்மா! உன் மகன் உன் நம்பிக்கைக்குத் தகுதி யற்றவன். உன் மனதைப் புண்படுத்தப் போகும் துரோகி. தாத்தா சொல்வது உண்மைதான். நான் என் மனதை ஒருத்திக்குப் பறிகொடுத்துவிட்டேன். அவள், ...அவள்.........என்று பிதற்றிய வண்ணம் அறையில் குறுக்கும், நெடுக்குமாக அலைந்தான்.

"வேறு ஜாதியில் கல்யாணம் செய்து கொண்டால் என்ன அம்மா?" என்று நான் கேட்டபோது "கூடாதப்பா, சிவு! அது தப்பு. நம் குலத்தில் வழக்கமில்லே. தாத் தாவுக்குக் கோபம் வரும்" என்று சொன் ஞயே அம்மா! அப்பொழுதே என் மனம் குழம்பியது. இனி என் சுமித்ராவின் கதி என்ன? அவள் மனம் தவிக்குமே. என் கதி என்ன?...... இல்லே! அம்மா! இல்லே. உன் மனம் நோக ஒரு நாளும் நடக்க மாட் டேன். ஆனுல், ஆனுல்...... என் சுமித்ரா. "ஐயோ! சுமீ! உன் முகத்தில் நான் எப்படி விழிப்பேன்? உன் நம்பிக்கையை நான் எப் படி அழிப்பேன்? என்னே நம்பியிருக்கும் உன்னே, உன் ஆசையை எப்படித் துறப் பேன்? நான் துரோகி, உன்னே ஏமாற்றப் போகிறேன்'—அம்மா! உன் மனம் புண்பட் டாலும், அவள் மனமாவது......... ஐயோ! அம்மா! என்ஞல் ஒன்றும் தீர்மானம் செய்ய முடியவில்லேயே. எனக்கு ஒன்றும் புரிய வில்லேயே" என்று தவித்தான். வெகு நேரம் படுக்கையில் படுத்தவண்ணம் யோசித்தான்.

திடீரென்று ஏதோ தீர்மானத்திற்கு வந் தவன்போல் நிமிர்ந்து உட்கார்ந்தான். தன் சுகமே பெரிதென நினைக்க மறுத்தது அவன் மனம். தன் தாயாரின் திவிர மதப்பற்றை, திட நம்பிக்கையை உடைக்க அவன் விரும்ப வில்லே. முகத்தைத் துடைத்து, தலேவாரிக் கொண்டு கீழே இறங்கிவந்தான்.

"அப்பா! சிவு! காபி ஆறிப்போகிறதே. இத்தனை நாழி எங்கேபோயிருந்தாய்?" என்ருள் மிருதுவாகக் காமாக்ஷி.

"இதோ வந்துவிட்டேன் அம்மா! எங்கே யும் போகவில்லே. மாடியில்தான் வாசித் துக்கொண்டிருந்தேன்." என்று சொல்லிக் கொண்டே தாயினருகில் உட்கார்ந்தான்.

* * *

காமாக்ஷி மெதுவாகப் பேச்சைத் தொடங் கினுள். ஏண்டாப்பா! தாத்தா ரொம்ப கோவிச்சுக்கிருரே, அந்த மாரமங் கலத்துப் பெண்ணைப் பார்த்துவிட்டுவா யேன்" என்ருள்.

"என்ன அம்மா! நீ கூட இப்படி ஆகிவிட் டாய். பெண்ணேயாவது, பார்க்கவாவது. எனக்கு இந்த வழக்கமே பிடிக்கவில்லே அம்மா. அது என்ன பொம்மையா! பொம் மைக் கொலுவா? அதிருக்கட்டும். நான் தான் சொன்னேனே, வேலேயாகட்டும், பிறகு பார்த்துக்கொள்ளலாமென்று."

"என்னமோப்பா. காலா காலத்திலே செய்ய வேண்டியதைச் செய்யணுமோல் லியோ? எனக்கும்தான் வர வரத் தள்ளவே இல்லே. இந்தக் குடும்ப பாரத்தை ஏத்துக் கொள்ள ஒரு நாட்டுப்பெண் வேண்டாமா? எனக்கும் ஆசையிருக்காதா?" என்ருள் சிரித்துக்கொண்டே.

"சரிதான். நீதான் பாரத்தைச் சுமந்து, சுமந்து இப்படி வளேந்துபோய்விட்டாய். உன்னேப்போலப் பொறுமையுடன் சுமக்க யாராலும் முடியாது. அதுவும் இந்தக் காலத்துப் பெண்களுக்கு, குடும்ப பாரத்தைச் சுமக்க உடம்பிலும் சக்தி கிடை யாது, மனதிலும் சக்தி கிடையாது. நீதான் தனிப் பிறவி." என்ருன்.

"என்னமோ! போ! எதையாவது சொல்லித் தட்டிக்கழித்து விடுகிருய்."

"இதெல்லாம் கிடக்கட்டும். அம்மா! நான் ஒன்று கேட்கப்போகிறேன், நீ தடுக் கப்படாது. தெரியுமா?"

காமாக்ஷியின் மனது அடிக்துக்கொண் டது. ஒருகால் சிவராமன் தன் மாமனுர் சொல்வதைப்போல் ஏதாவது செய்துவிட் டானே? அதற்குத்தான் இப்படி வளேத்து வளேத்துப் பேசுகிருனே! அப்படியிருந்தால் மாமனுர் முகத்தில் எப்படி விழிப்பது?" என்று யோசனேயிலாழ்ந்தாள்.

"என்னம்மா பதிலேயில்லே, பயப் படாதே. வேறே ஒன்றுமில்லே. வேலேக் குப் போகலாமென்று யோசனே. அவ்வ ளவுதான்."

"அதற்கென்ன போயேன். வேலேயா ஞல் சீக்கிரம் கல்யாணமும் ஆகிவிடும்."

"என்னம்மா! நீ! ஓயாமல் கல்யாணம், கல்யாணம் என்கிருய், அதிருக்கட்டும். இப்பொழுது யுத்தம் நடக்கிறதோல் லியோ? அதற்காக, அங்கே வேலேசெய்ய அநேக 'டாக்டர்'களே வேலேக்கு எடுக்கிருர் கள். நிறையச் சம்பளம், நல்ல உயர்ந்த வேலே. என்ன சொல்லுகிருய்?" தாயாரு க்குத் தூக்கி வாரிப்போட்டது. "சிவராமா! என்ன இது? அது ஒருநாளும்முடியாது. நான் இக்கே கவலேப்பட்டுக் கொண்டு கிடக்கவா? அந்தப் பணமும் வேண்டாம். எனக்கு வேதனேயும் வேண்டாம்." என்ருள் அழுத்தமாக.

"இல்லேயம்மா! ஒன்றும் பயமில்லே. உன் னுடைய ஆசீர்வாதத்தினுல் எனக்கு ஒரு

கெடுதலும் நேரிடாது. நீ எப்படியாவது உத்தரவு கொடுக்கத்தான்வேணும்.''

காமாக்ஷியின் கண்களில் கண்ணீர் பொங்கிவழிந்தது. அதைக் கண்ட சிவராமன் கலங்கிவிட்டான். அவன் மனம் நிலையில்லாமல் தவித்தது. ''அம்மா சம்மதிக்காவிட்டால், தாத்தாவும் சம்மதிக்கமாட்டாரே,'' என்று யோசனையிலாழ்ந்தான்.

கடைசியில் ''இங்கேயிருந்தால் உணர்ச்சிக்கு அடிமையாகிவிடுவோம். சொல்லாமல் கிளம்பவேண்டியதுதான்.'' என்று தீர்மானித்து, எழுதியும் போட்டுவிட்டான்.

* * *

ஒரு நாள். நடுநிசி, வானம் மப்பும் மந்தாரமுமாயிருந்தது. கறுப்புத் திரைசீலைக்குப்பின் ஏற்றிவைத்த விளக்கைப் போல், மங்கிய ஒளியுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தான் சந்திரன். வானமுகட்டில், சிறிதுநேரத்திற்கு ஒருமுறை கண்ணைச் சிமிட்டியது மின்னல். ஊரோசை அடங்கிவிட்டது. தூரத்தில் எங்கேயோ, செல்லும் போக்குவண்டியின் (இராவண்டி) கடக், கடக்கென்ற ஓசை கேட்டது. சிவராமன் மெதுவாக ஓசையின்றிக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தான். ஒரு நிமிஷம் தங்கின அவன் கால்கள், வயது சென்ற பாட்டனாரையும், அன்புமிகுந்த தாயாரையும், நினைத்துச் சற்றுத் தயங்கியது அவன் மனம். கண்ணீர் துளித்தது. ஆனால் மறு வினாடி அந்தப் பலஹீனம் மறைந்தது. சட்டெனக் கண்களைத் துடைத்துக் கொண்டு, வேகமாக நடந்தான். கூட்டில் தானியமும், தண்ணீரும், நிறைந்துதானிருந்தன. ஆனால் பக்ஷியென்னவோ ஒன்றையுமே லக்ஷ்யம் செய்யாமல் பறந்து சென்றுவிட்டது.

வீட்டிலே தாயின் வாத்சல்யம் ஒன்றையும் அறியாத நித்திரை மயக்கத்தில் ஆழ்ந்து கிடந்தது.

* * *

சாயங்காலம். பூனாவிலுள்ள 'லாலா பார்க்கில்' இரண்டு அழகிய குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தன, குழந்தைகளுக்கு அருகிலுள்ள திண்ணையின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தாள் சுமித்ரா. அவள் மனம் எங்கேயோ சுழன்றுகொண்டிருந்தது. ''யாரது சுமத்திராவா?'' என்ற ஆச்சர்யம் நிறைந்த குரலைக்கேட்டுத் திடுக்கிட்டு எழுந்து நின்றாள். அதே சமயம் தன் எதிரில் வந்துநின்ற சிவராமனைக் கண்டதும் சுமித்திரா, ''சிவராம்!'' என்றாள். அவள் குரலில், ஆச்சரியமும், அன்பும், துக்கமும் கலந்து தொனித்தன. அடுத்த நிமிஷம் அவள் கண்கள் கலங்கின. தொண்டையடைத்தது. தலை குனிந்து நின்றாள்.

''சுமீ! இதோ பார்! என்மேல் கோபமா? வருத்தப்படாதே. எல்லாம் சொல்கிறேன். இப்படி உட்கார்'' என்று உணர்ச்சியுடன் கூறியபடியே திண்ணையில் உட்கார்ந்துகொண்டான்.

சுமித்ராவும் ''எனக்கென்ன கோபம்? என் அதிர்ஷ்டத்தைத்தான் நான் நொந்து கொள்ளுகிறேன். அதிருக்கட்டும் சிவராம்! ஒரு லெட்டர்கூட போடக்கூடாதா?'' என்று கேட்டுக்கொண்டே அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

''போடாமலென்ன! ஏதோ சரியாயிருந்தது. நான் இங்கே வந்து ஒரு மாதம்தானாகிறது. நீ இங்கே ஏன் வந்தாய்? குழந்தைகள் யார்? உனக்குப் பந்துக்கள் யாராவது இங்கே யிருக்கிறார்களா?'' என்று கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனான்.

''என்ன சிவராம்! இவ்வுலகத்தில் எனக்குப் பந்துக்களே கிடையாது. நான் ஒரு அனாதை என்பது உனக்குத்தெரியாதா? நீ ஊருக்குப் போனபிறகு எனக்கு ஒன்றுமே ஓடவில்லை. உன்னிடமிருந்து ஒரு சமாசாரமும் தெரியவில்லை. எனக்கு நம்பிக்கையே போய்விட்டது. அந்த ஊரில் இருக்கவும் பிடிக்கவில்லை. அந்தச் சமயத்தில்தான் சிவபுரம் ஜமீன்தார், தம் பேரக் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ள ஒரு 'நர்ஸ்' தேவை என்று பத்திரிகையில் விளம்பரம் செய்திருந்தார். உடனே அங்கே சென்று வேலையை ஒப்புக்கொண்டேன். குழந்தைகளுடன் பொழுது போக்குவது என் மனதிற்குச் சற்று ஆறுதலாயிருக்கிறது. இப்பொழுது ஜமீன்தார் தம் குடும்பத்துடன் வடநாட்டைச் சுற்றிப்பார்க்க வந்திருக்கிறார், நாங்கள் இங்கே சிலநாள் தங்குவோம். நீதான் என்னை மறந்துவிட்டாய்'' என்றாள்.

''சுமித்திரு! உன்னை மறக்கமுடியுமா? அது ஒருநாளும் முடியாது. நான் என்ன செய்யட்டும்? நான் சொந்தமாக 'நர்ஸிங் ஹோம்' வைத்து நடத்துவதில் தாத்தாவுக்குச் சம்மதமில்லை, பணமும் தரமுடியாதென்று கூறிவிட்டார். வேலைக்குத்தான் போக வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். வேறு வழியில்லாமல் ஒப்புக்கொண்டேன். பிறகு 'மிலிடெரி' டாக்டராகப் போனால் சம்பளம் நிறையக்

கிடைக்குமே என்று நினைத்து அதில் சேர உத்தரவு கேட்டேன். அம்மா அதற்குச் சம்மதிக்கவில்லை. கடைசியில் ஒருநாள் சொல்லாமல் புறப்பட்டு விட்டேன். இங்கு வந்ததும் சௌக்கியமாயிருப்பதாகத் தந்தி கொடுத்தேன். நீயும் தடுத்துவிடுவாயோ, என்னவோ என்று பயந்துதான் உனக்கு எழுதவில்லை.'' என்று மழுப்பினான்,

சுமித்திரா அவனை வைத்த விழி வாங்காமல் பார்த்தாள். அவள் நெஞ்சில் எவ்வளவோ விஷயங்கள் குமுறிக்கொண்டிருந்தன. ஆனால் அவள் பேசவில்லை. பிறகு மெதுவாக அவன் கையைத் தன் கையுடன் சேர்த்துக்கொண்டு. ''போகட்டும். எப்படியோ இன்று என் நிதியைக் கண்டுவிட்டேன். நான் பாக்யசாலிதான்.'' என்று கூறும்போது அவள் குரல் மிதமீறிய அன்பினால் தழுதழுத்தது.

* * *

யௌவனத்தின் உணர்ச்சியே அக்னிஜ்வாலை. அதில் நெய்யை ஊற்றுவதைப்போல், அருகில் அழகிய மங்கையும் இருந்து விட்டால் கேட்கவேண்டுமா......? சிவராமனுடைய மனதில் பிரேமையின் ஜ்வாலை கொழுந்துவிட்டெரிந்தது. உலகத்திலுள்ள எல்லாவஸ்துக்களும் அவனுக்கு இனிமையாகத் தோன்றின. அவன் மனதில் உத்சாகமும் நிறைந்து பொங்கி வழிந்தது.

சுமித்திராவின் அன்பு ததும்பும் பேச்சும், அழகிய முகமும், மோகப் புன்சிரிப்பும், கள்ளைப்போல் அவனை வெறிகொள்ளச் செய்தன. ஆனால் தாயின்—தன் அருமைத் தாயாரின்—ஒட்டி உலர்ந்த முகம்—குடும்ப கஷ்டங்களில் உழன்று, சகித்துச் சகித்து வரண்டுபோன முகமும், வாத்சல்யம் நிறைந்த அவளுடைய மிருதுவான பேச்சும், அவனைத் தடைகட்டிய நாகம்போல் முன்செல்ல விடாமல் தடுத்தன.

பெண்களுக்கு இயற்கையான அடக்கமும், சாந்தமும், நிறைந்து விளங்கினாள் சுமித்திரா. அவள் மனம் அமைதியுடனிருந்தது. சிவராமனை அடிக்கடி சந்திப்பதினால் அவளுக்கு ஆறுதலும். ஆனந்தமும் ஏற்பட்டன.

காலம் ஓடிக்கொண்டிருந்தது. சிவராமனுடைய மனம் இங்கும் அங்குமாக ஊசலாடிக்கொண்டிருந்தது. ஒரு சமயம், ''காதல் அவ்வளவு அற்பமானதல்ல. அது தர்மத்திலிருந்து மீறிவிடச் செய்யாது. காதலின் உண்மைத் தத்துவம், தியாகமும், தன்

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சிவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

னடக்கமும்தான். நான் சுமித்திராவை விவாகம் செய்து கொள்ளாவிட்டால் என்ன? அன்பு என்பது விவாகத்தினால் தான் நிலை நிற்குமா? இல்லை. அது சுய நலம். தன் சுகமே பெரிதென்று நினைப்பது காதலல்ல. சுமித்திராவை, என் உயிருள்ள வரை மனக்கோயிலில் வைத்துப் பூஜிப்பேன். அவளை மறக்கவே முடியாது. அம்மாவினுடைய பூர்ண சம்மதமில்லாமல் அவளை மணக்கவும் முடியாது." என்று மனதைத் திடப்படுத்திக் கொள்ளுவான்.

"சீ! இதென்ன சமூகம்! ஜாதியாம், மதமாம்? வெறும் பைத்தியக்காரத்தனம். இவ்வுலகத்தில் அன்புதான் மதம். அன்புதான் அழியாத பொருள். மற்றவைகள் எல்லாம் நிலையற்றவை. இரண்டு இளம் உள்ளங்கள் அன்பினால் ஒன்றுசேரும்போது, அங்கே கடவுள் அன்பு வடிவமாக விளங்குகிறார் என்று சொல்லுகிறார்களே, அதுதான் உண்மை. அன்பினால் இணைக்கப்பட்ட இரண்டு உயிர்களுக்கு நடுவே நின்று தடை செய்ய ஒருவருக்கும் அதிகாரமில்லை." என்று ஆத்திரப்படுவான் ஒருசமயம்.

* * *

மனோகரமான மாலை வேளை. குளிர்ந்த காற்று மெல்லென வீசிக்கொண்டிருந்தது. சந்திரன் முழுக்கலையுடன் ஒளி வீசிக்கொண்டிருந்தான். சிவராமனும், சுமித்திராவும் மேல் மாடியில் உலாவிக்கொண்டிருந்தார்கள். அவளுடைய கலகலவென்ற சிரிப்பொலி, அவனுடைய உள்ளத்தில் உற்சாகத்தைத் தூண்டியது.

திடீரென்று சுமித்திரா, "சிவராம்! நான் இன்றையதினம் ஜமீந்தார் வீட்டு வேலையிலிருந்து விலகிக்கொண்டுவிட்டேன்."

"ஏன்? உனக்குப் பிடிக்க வில்லையா?" என்றான் தடுமாறியவண்ணம்.

"ஆமாம். எனக்கிஷ்டமில்லை. அவர்கள் எல்லோரும் நாளையதினம் புறப்பட்டு ஊருக்குப் போகிறார்கள். உன்னை விட்டுச் செல்ல மனமில்லை, ஆகையால் வேலையை விட்டுவிட்டேன். ஒரு 'ரூம்' எடுத்துக்கொண்டிருக்கிறேன். தனியாக 'பிராக்டீஸ்' செய்யலாமென உத்தேசம்."

"அப்படியா! ரொம்ப சந்தோஷம்." என்று கூறினான். ஆனால் அவன் வார்த்தையில் உற்சாகமில்லை.

"சிவராம்! ஏன் ஒருமாதிரி இருக்கிறாய்? என்ன உடம்பு?"

"ஒன்றுமில்லையே. எப்பொழுதும்போல் தானிருக்கிறேன்" என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

"இதோ பார். சிவராம்! நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. எனக்கு விஷயம் புரிந்துவிட்டது. நமக்கு நல்லகாலம் வரும். அதுவரை நாம் பொறுமையுடன் காத்திருக்கத்தான் வேண்டும். தெய்வசம்மதமிருந்தால் எல்லாம் சரியாக நடக்கும். நான் உன்னைக் குற்றம் சொல்லமாட்டேன். பயப்படாதே. வீணாகக் கவலைப்பட்டு ஏன் உடம்பைக் கெடுத்துக்கொள்ளுகிறாய்? காதலின் தத்துவம் கல்யாணம் தானா? நாம் இப்படியே காலம் தள்ளிவிடலாம். ஆனால்......ஆனால், சிவராம்! என்னை விட்டு விட்டு மாத்திரம் போய்விடாதே" என்று சொல்லும்போது அவள் குரல் கம்மியது.

"சுமத்திரா! இல்லை. உன்னைவிட்டுப் போகவில்லை. வருத்தப்படாதே. என் கண்ணே! நான் கோழை, துரோகி, உன் வாழ்க்கையை வீணாக்குகிறேன். உன் மனதில் ஆசைக் கனலைத் தூண்டிவிட்டு, நம்பிக்கையை ஊட்டிவிட்டு, உன்னை ஏமாற்றிவிட்டேன். என்னை மறந்துவிடு" என்று கண்ணீர் பொங்கிவரக் கூறினான்.

"சிவராம்! என்ன இது? இப்படி அதைர்யப்படுவதுதான் ஆண்மைக்கு அழகா? தைர்யம்தான் மனிதனுக்கு உற்ற நண்பன். இப்போது என்ன நேர்ந்துவிட்டது? காலம் எப்போதும் இப்படியே யிருந்துவிடாது. எழுந்திரு. சினிமாவுக்குப் போய்வரலாம்" என்று அவனை உற்சாகமூட்டினாள்.

* * *

ஆசையுடன் வந்து போய்க் கொண்டிருந்தன நாட்கள். சிவராமனும், சுமித்திராவும் அடிக்கடி சந்தித்து, ஆனந்தமாகக் காலத்தைக் கழித்துவந்தனர். அமைதியும் ஆனந்தமும் நிறைந்த சிவராமனுடைய மனக்கடலில், அன்றுவந்த கடிதம் புயலைக் கிளப்பிவிட்டது. காமாக்ஷி எழுதியிருந்தாள்.

"குழந்தை சிவராமனுக்கு, சர்வாபீஷ்டமும் உண்டாகட்டும். உன் சௌக்யத்தைக் கேட்டு ரொம்ப சந்தோஷம். உடம்பை ஜாக்கிரதையாகக் கவனித்துக்கொள்ள வேணும். வீண் அலைச்சல்கூடாது.

"சிவு! உன்னை ஒன்று கேட்கிறேன். உண்மையைச் சொல்லவேண்டும். நீ பொய் சொல்லமாட்டாய் என்று எனக்குத் தெரியும். இருந்தாலும் கேட்கிறேன். இங்கே உன்னைப்பற்றிப் பலர் பலவித

மாகப் பேசிக் கொள்ளுகிறுர்கள். அதைக் கேட்டு, தாத்தா ருத்ரமூர்த்தியாகவிருக்கிறுர். என் குழந்தை அப்படியிருக்கமாட்டான் என்று என் அந்தராத்மா நம்புகிறது. நான் கேட்கிறேனே என்று வருத்தப்படாதே. இது உண்மைதானு? உன்னுடன் இருக்கும் பெண் யார்?

"அப்பா! சிவு! சங்கமும், சந்தர்ப்பமும் தான் மனிதனை உருவாக்குகின்றன. மனம் ஒரு குரங்கு. பத்திரம். சந்தர்ப்பம் சில சமயம் மனிதனை விடுபடமுடியாத வலையில் சிக்கவைத்துவிடுகிறது.

இப்படிக்கு
உன் அன்புள்ள அம்மா."

இதைப் படித்த அவன் மனம் யோசனையிலாழ்ந்தது. என்ன பதில் எழுதுவதென்று புரியவில்லை. "ஆம், அம்மா கூறுவதுபோல் சங்கமும், சந்தர்ப்பமும் என்னைச் சிக்கவைத்துவிடுமோ? யௌவனத்தின் சக்தி என் கண்ணை மறைத்துவிட்டால்..." என்று எண்ணமிட்டான்.

இந்தப் போராட்டத்திலிருந்து விடுதலையடைய விரும்பினுன். மறுபடியும் வெகு தூரம், கண்காணுத நாட்டிற்கு ஓடிவிட விரும்பினுன். அதே சமயம் வெளி நாட்டிற்கு அனுப்பச் சில 'டாக்டர்' களின் பெயர்களைப் பதிவு செய்தனர். சிவராமனும் அதில் கையெழுத்திட்டான். அவன் எண்ணம் கை கூடியது.

புறப்படும் நாள் நெருங்கியது. அம்மாவுக்குப் பதில் எழுதினுன். அதில்:—

"அம்மா! உன் சரண கமலங்களில் நமஸ்கரிக்கிறேன். நீ எழுதிய கடிதம் வந்தது. கவலைப்படாதே. குடும்ப கௌரவத்தை அழிக்கமாட்டேன். ஊர் வதந்தியினுல் தாத்தா ரொம்ப கோபமாயிருப்பதாக எழுதியிருக்கிறுய். அவரிடம் சொல்லு. நான் திடமுள்ளவன். நெறி தவறிப் போகமாட்டேன். அப்படி ஏதாவது நடந்தாலும், உன் உத்தரவும், தாத்தாவின் சம்மதமும் இல்லாமல் அதிகப் பிரசங்கித்தனமாகச் செய்யமாட்டேன் என்று சொல்லு. பாவம்! தாத்தா, பலவிதத்திலும் கஷ்டப்பட்டார். எனக்காக எவ்வளவோ பாடுபட்டிருக்கிறுர். அவர் மனம் புண்படச் செய்யமாட்டேன்.

அம்மா! பொறுமையும், தியாகமும் நிறைந்த தாயினுடைய குழந்தை நான். சுய நலக்காரனல்ல. மன அடக்கத்தையும், சகிப்புத்தன்மையையும் தியாகபுத்தியையும், பாலுடன் கலந்து ஊட்டிய அம்மா! தந்தையின் சுகத்திற்காக, தன் சுகத்தைத் துறந்த பீஷ்மர் பிறந்த புனிதமான பாரத நாட்டில் தான் நானும் பிறந்திருக்கிறேன், பயப்படாதே. உன் மனதை உடைக்க மாட்டேன்.

ஆனுல் ஒன்று. உன்னிடம் மறைக்க இஷ்டமில்லை. என் மனதை ஒருத்திக்குப் பறிகொடுத்துவிட்டது உண்மைதான். ஆனுல் தர்மம் தவறமாட்டேன். என் இதயத்தில் இன்னெருத்திக்கு இடமில்லை. மன்னிக்கவும்.

என்னை வெளிநாட்டிற்கு மாற்றிவிட்டார்கள். இப்போது "லீவ்" கிடைக்காது. கூடிய சீக்கிரம் உன்னைப் பார்க்க வருவேன். கவலைப்படாதே. அங்கே அபாயம் ஒன்றுமில்லை. உன்னுடைய ஆசீர்வாதம் என்னைக் காத்து ரக்ஷிக்கும். வேறு விசேஷமில்லை. சகோதரிகள், குழந்தைகள் யாவரும் சௌக்யமா? அவர்களுக்கு என் அன்பு. தாத்தாவுக்கு என் வணக்கமுள்ள நமஸ்காரம். உனக்கு என்னுல் என்ன கொடுக்கமுடியும்? எதைக் கொடுத்தால் ஆழம் காண முடியாத சமுத்திரம் போன்ற உன் வாத்சல்யத்திற்கு ஈடாகவிருக்கும்?? அம்மா! பயப்படவேண்டாம். அடிக்கடி எழுதுகிறேன்.

இப்படிக்கு,
உன் அருமைக் குழந்தை,
சிவு

என்று எழுதியிருந்தான்.

* * *

"சுமித்ரு! என்ன இது? நீ கூடவா இப்படி இருப்பது? ஐயோ! கண்கள் சிவந்துவிட்டனவே. அழாதே! நான் சீக்கிரம் திரும்பி வந்துவிடுவேன். தைரியமாக இரு" என்று தேறுதல் கூறினுன் சிவராமன். சுமித்திரா அவன் மார்பில் முகத்தைப் புதைத்து விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள்.

"கடைசியில் என்னை விட்டு விட்டுத்தானே போகிறுய்?" என்ற சொற்கள் விம்மலுக்கிடையே வெளிவந்தன.

"என்ன செய்யலாம் சுமீ! நீ என்ன ஒன்றும் தெரியாதவளா? "மிலிடிரி ஆர்டர்" இல்லையா? மீற முடியுமா? நான் சீக்கிரம் வந்துவிடுகிறேன். பயப்படாதே! அதற்குள் எல்லாம் சரியாகிவிடும். பொறுத்துக் கொள். அடிக்கடி எழுதுகிறேன்" என்றுன்.

"ஆமாம், எவ்வளவு நாள்தான் பொறுப்பது. நானும் மனதை எவ்வளவோ திடப்படுத்திக்கொண்டுதானிருக்கிறேன், இன்று

என்னால் முடியவில்லையே,'' என்று மார்பை அழுத்திப் பிடித்துக்கொண்டாள். கண்ணீர் கன்னங்களின் வழியே பெருகியோடியது.

"தேற்றிக்கொள் சுமித்திரா! நாம் என்ன செய்யலாம்? உனக்கு நான் என்ன சொல்லப்போகிறேன்? உனக்குத்தான் சாந்தமாயிருக்கத் தெரியுமே. நாழிகையாகிவிட்டது. கண்ணைத் துடைத்துக்கொள். புறப்படு,'' என்று அவளைச் சமாதானம் செய்தான்.

ஏணி வழியே கப்பலுக்கு ஏறிச்செல்லும் சிவராமனைப் பார்த்துக்கொண்டே நின்றாள் சுமித்திரா. அவள் உயிரே பிரிந்து செல்வதுபோலிருந்தது. கண்ணீரை அடக்கமுடியவில்லை.

கப்பலின் மேல் தட்டில் நின்றுகொண்டிருந்தான் சிவராமன். சமுத்திர அலையும் அவன் மனமும் போட்டியிட்டுக்கொண்டு கொந்தளித்தன. "காகி' நிஜாரும், சட்டையும் அணிந்து கம்பீரமாக நிற்கும் தன் காதலனைக் கண்டு கைகூப்பினாள் சுமித்திரா. அவளுடைய கருவிழிகள் கண்ணீரில் மிதந்தன. கப்பல் தண்ணீரில் மிதந்து நகர்ந்தது.

வெகுநேரம் சென்றது. கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்த்தாள். கப்பலுக்கும் தனக்கும், தன் உயிர்க் காதலனுக்கும் தனக்கும், நடுவில் ஆழம் காணமுடியாத சமுத்திரம் கோஷமிட்டுக்கொண்டிருந்தது. பிரமை பிடித்தவள்போல் நின்றாள் சுமித்திரா.

"பகவானே! நான் செய்வது தியாகமா, அல்லது துரோகமா? தெரியவில்லையே. என்னை மன்னித்துவிடு. என் மனதிற்குச் சாந்தியைக்கொடு.'' என்று சொல்லிக்கொண்டே ஆகாயத்தை நோக்கிக் கைகூப்பி நின்றான் சிவராமன்.

* * *

விளக்கேற்றும் நேரம். காமாக்ஷி பூஜையறையில், கடிதத்துடன் கைகூப்பி நின்றாள். கண்ணீர் மாலை மாலையாக வழிந்தோடியது. மனதில் சொல்லமுடியாத வேதனை. சகித்துச் சகித்துப் பண்பட்ட அவள் உள்ளம் அதையும் சகிக்க முயன்றது. ஆனால் தாயின் பாசம் எல்லாவற்றையும் மீறியது. அச்சமயம் அங்குவந்த மாமனாரிடம் கடிதத்தைக் கொடுத்தாள். அதை வாங்கும்போது கிழவருடைய கை நடுங்கியது.

"கடைசியில் குழந்தை கண்காணாத தேசத்திற்குப் போய்விட்டான்.'' என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினாள். பொங்கிவரும் அழுகையை அடக்கியதினால் அவள் உதடுகள் துடித்தன.

ராமர் படத்தின் முன்னால் விளக்கேற்றி வைத்து நமஸ்கரித்தாள் காமாக்ஷி. தாயின் மனதில் தனயனுக்காக என்னென்ன பிரார்த்தனைகள் நிரம்பியிருந்தனவோ யாருக்குத் தெரியும்?''



மீரான் கோயில்

மானஸீகன்

போட்மெயில் வெகு விசையுடன் திருவிசை நல்லூர் ஸ்டேஷனைக் கடந்து சென்றது. தெற்கு நோக்கிச் சென்ற வண்டியாதலால் கிழக்குப் பக்கமும் மேற்குப் பக்கமும் ஜன்னல்புறமாக வெகு தெளிவாகத் தெரிந்தன. மேற்கில் ஒரே நெல் வயற் பரப்பு. முற்றியிருந்தவை பொன்னிறமாயும், சற்று இளமையாயிருந்தவை குளிர்பச்சையாயும் மாறி மாறிக் கண்களுக்கு விருந்து அளித்துக்கொண்டிருந்தன. கிழக்கேயும் புல் வெளிகள்தான். ஆனால் சற்றே தள்ளி, கிழக்குத் தொடர்ச்சி மலைகள் தொடங்கிவிட்டிருந்தன. பெரிதாயும், சிறிதாயும் மலைக்குன்றுகள் சங்கிலித் தொடர்போல் ரயில் பாதையை ஒட்டிச் சென்றன. அப்போது காலை வேளையாதலால், உதய சூரியனை மலைகள் மறைத்திருந்தன. அவனது பொற் கிரணங்கள் மட்டும் மலைகளின் நடுவிலிருந்த இடுக்கின் வழியாகத் தங்கப் பொடி தூவினதுபோல் பரவியிருந்தன. 'குளு குளு' வென்று எதிர்த்து வீசிய காற்றின் சுகத்தில் என்னையும் மறந்து இயற்கையின் இன்பத்தில் ஈடுபட்டிருந்தேன்.

என்னைக் கனவுலகிலிருந்து தட்டியெழுப்பினார் என் மாமா. "டேய், அதோ நான்கு மலைகள் தனியாக நிற்கின்றனவே தெரிகிறதா.?' என்று கேட்டார்.

கண்ணைக் கசக்கிக்கொண்டு "உம்" என்றேன்.

"அதன் நடுவில் சிம்மாசனம்போல், உயர்ந்த குன்று தெரிகின்றதா?."

"ஓ, தெரிகிறது."

"அதை நன்றாய்க் கவனித்துக்கொள்; அதைப்பற்றி ஒரு பெரிய கதை இருக்கிறது; அதன் பெயர் மீரான் கோவில்" என்று கூறிச் சோம்பல் முறித்தார்.

என் மாமா ஒரு பெரிய சரித்திர ஆராய்ச்சியாளர்; ஆகையினால் ஒரு பெரிய கதை நமக்கு இன்று இருக்கிறது என்று மனதில் சந்தோஷித்துக்கொண்டே கதைக்கு முத்தாய்ப்பாக இருக்க வேண்டுமென்று தெர்மாஸ் புட்டியை எடுத்து, திருச்சியில் நாங்கள் புறப்படுகையில் கொட்டி வைத்திருந்த காப்பியை ஊற்றினேன். அது சூடாகவே இருந்தது. சூடான கர்ப்பியைக் குடித்துவிட்டு ஒரு கனைப்புக் கனைத்துவிட்டுக் கதையைச் சொல்ல ஆரம்பித்தார் மாமா. நானும் ஒரு டப்ளர் குடித்து நோக்கினேன். ரயில் அதற்குள் ஒரு வளைவுகொடுக்கவே கோட் பொத்தானை அவிழ்த்து விட்டதுபோல், மலைகள் விலகி மீரான் கோவில் பளிச்சென்று தெரிந்தது.

"அதன் தென்மேற்குப் பகுதியில் ஒரு பெரிய குகை இருக்கிறதே அதைக் க்வனி" என்றார் மாமா.

"பெரிய ஆலமரத்தின் பக்கமாகத் தெரிகிறதே அதுவா?"

"ஆம் அதுவேதான்" என்றார்.

பின்பு கதையைச் சொல்ல ஆரம்பித்தார்.

* * *

இந்தச் சம்பவம் நடந்து சுமார் மூந்நூறு வருடங்களுக்கு மேலாகியிருக்கும். அதாவது ஔரங்கசிப் பட்டத்திற்கு வந்த காலம் அது. திருவிசை நல்லூருக்கு அருகில் பத்துமைல் தள்ளி, வீரகேசநல்லூர் என்ற கிராமம். அந்த ஊர் வீரகேசப் பெருமானின் கோயில் வெகு பிரசித்தமானது. தென்னிந்தியாவிலேயே, மிக உயர்ந்த சிற்பவேலைப்பாடுகளும் நவரத்ன ஜ்வலிப்பும் அந்தக் கோயிலிலேயேதான் காணலாம். அந்தக் கோயிலின் கர்ப்பக் கிருஹத்தில் நடன அமைப்பில் நின்ற கடவுளின் விரல்கள் அனைத்தும் நவரத்னங்களால் கடைந்தெடுக்கப்பட்டு, கோடி சூர்யப் பிரகாசத்தை அள்ளித் தெறித்தன. கிராமம் வெகு சிறியதுதான். மூன்று பிராமணத் தெருவுகளும் பத்துப் பதினைந்து வேளாளத் தெருக்களும் இருந்தன. அக்காலத்திலே அடிக்கடி முகமதியர் சூறையாடினதினால் கிராமத் தற்காப்புக்காக ஒரு சிறு தொண்டர் படை சேர்க்கப்பட்டு, ஊருக்கு எல்லைப் புறத்திலிருந்த தோப்புக்கள் கழனிகள் முதலியவைகளைப் பாரா பார்த்துக்கொண்டு, உளவுகள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். இவர்களுக்கெல்லாம் கொண்டலத் தேவர் என்பவர் தலைவராயிருந்து நடத்திவந்தார். அவர்

தஞ்சாவூர் மகாராஷ்டிரப் படைகளில் வேலைபார்த்துக் கொஞ்சம் சொத்துச் சேர்த்துக்கொண்டு ஊர் வந்தவராதலால், அவரையே தற்காப்புத் தலைவராக நியமித்திருந்தார்கள். வயது அஷ்டதசத்தை நெருங்கியிருப்பினும் ஆஜானுபாகுவும், கூறிய கண்களுமுடைய தேவருக்கு, தமிழ், தெலுங்கு, மராத்தி, உருது முதலிய பாஷைகளில் பேசவரும்.

ஐப்பசி மாதத்தில் ஒருநாள் மாலை. "தீபாவளி மூட்டம்" என்பதை நிரூபிக்க, கறுத்த மேகங்கள் வானத்தின் அடியில் குமுறிக்கொண்டு பலத்த மழையைத் தெரிவித்தன. இதை ஊர்ஜிதப்படுத்துவதுபோல் சுழல்காற்றும் விர்விர் என்று புழுதியைக் கிளப்பிக்கொண்டு வீசிக்கொண்டிருந்தது. கிராமவாசிகள் எல்லோரும் அப்போது தான் "முதல் அறுப்பு" அறுத்துவிட்டு நெல்லை உலர்த்தி யிருந்தார்கள். வரும் யமனைக்கண்டு வெகு அவசரமாக நெல்லையும் வைக்கோலையும் கொட்டகையினுள் அடுக்கிக்கொண்டிருந்தார்கள். அருகிலிருந்த மலைச் சாரலில் மேயப் போயிருந்த மாடுகளெல்லாம் அவசர அவசரமாக வீட்டை நாடிக்கொண்டிருந்தன. இந்த மாதிரி தருணத்தில் ஒருவன் தலை தெறிக்க ஓடி வந்தான். வந்தவன் நேராகத் தேவர் வீட்டை அடைந்து சமாசாரத்தைச் சொன்னான். ஊருக்கு ஒருகல் தூரத்தில் புறம்போக்கு மாந்தோப்பில் ஒரு மகமதிய வீரன், படை உடுப்புடன், ரத்தக்களரியாய் அடித்துப் போடபட்டுத் தன் நினைவின்றிக் கிடப்பதாகச் சமாசாரம் தெரியவந்தது. ஆனால் உயிர் இருப்பதாகக் கண்டுபிடித்தவன் சொன்னான்.

தேவர் முக்கியமானவர்களை வரவழைத்து ஆலோசித்தார். எதிரியின் ஒற்றனாக இருப்பானோ என்று சம்சயித்தார்கள். பயங் கொள்ளிகளில் சிறந்தவரான பட்டாச்சாரியார், இருக்கும் உயிரையும் போக்கிவிட்டு வந்துவிடவேண்டும் என்று யோசனை கூறினார்.

யுத்த முறை அறிந்த தேவர் அதெல்லாம் கூடாதென்றும் அவன் எதிரியின் ஒற்றன் என்று தெரிந்த பிறகு வேண்டுமானால் தண்டனை அளிக்கலாமென்றும் முடிவு கட்டினார். அவனைத் தூக்கிக் கொண்டுவர நான்கு ஆட்கள் சென்றனர். வரப்போகும் மனிதனைக் காணக் கிராமம் முழுவதுமே கூடிவிட்டது.

நான்கு ஆட்கள் சுமந்து வர முகமதிய வீரன் வந்து சேர்ந்தான். இன்னும் பிரக்ஞை யின்றிச் சுவாசம்மட்டும் வந்துகொண்டிருந்தது. கூர்ந்து பார்த்ததில் தலையில் பலத்த அடி. துப்பாக்கியின் முனையினாலோ அல்லது கடப்பாரையினாலோ, தாக்கியிருக்க வேண்டும். பின்புறம் ரத்தம் கசிந்து அவன் அணிந்திருந்த உடை கதகதவென்றிருந்தது. பார்வைக்கு அவன் நடுத்தர வயதினனாகக் காணப்பட்டான், வயது முப்பது அல்லது முப்பத்திரண்டு இருக்கும். சிவப்புக் கலந்த பொன்னிறமான நிறம். நல்ல கூர்மையான மூக்கு. கறுத்து அடர்ந்து வளர்ந்த தாடி. நாட்டு வைத்தியன் வந்து பச்சிலையை அரைத்துத் தலைக்குக் கட்டுக் கட்டினான். ஊரின் புறத்தே இருந்த மாட்டுக்கொட்டில் ஒன்று ஒழித்து விடப்பட்டு, அதில் அவனைப் படுக்கவைத்திருந்தார்கள்.

அன்றிரவு அவர்கள் எதிர்பார்த்தபடியே பலத்த மழை பெய்தது. தலை நொறுங்கும் படி இடி இடித்து மின்னல் கண்ணைப் பறித்தது. நள்ளிரவில் முகமதியன் கண்விழித்தான். உருதுபாஷையில் ஏதோ பேசினான். மாட்டுக்காரச் சிறுவர்களில் ஒருவன் தேவரிடம் ஓடி, அவரை அழைத்து வந்தான். தேவர் அவனைப் பயப்படாமல் இருக்கச் சொல்லி, மறுநாள் காலை வந்து பார்ப்பதாகச் சொல்லிவிட்டுப் போனார்.

மறுநாள் புயல் ஓய்ந்தது, தேவர் வந்து அடிபட்டவனைக் கவனித்தார். அவனுக்கு நல்ல நினைவு திரும்பி வந்தும் பேசச் சக்தியற்றுக் கிடந்தான், அப்போது அவர் எதிர்பார்த்தபடி கொடூரம் வஞ்சகத் தன்மை முதலியவை அவன் முகத்தில் இல்லாமல், சுத்தமாய் இருந்தது கண்டு தேவர் மனம் நிம்மதி யடைந்தது.

சின்னாளில் அவன் குணம் அடைந்தான். தேவரின் அன்பும் கனிவும் அவனைப் பரவசப் படுத்தின. தேவர் அவனுடன் பேசுகையில் தன் வரலாற்றை அவரிடம் தெரிவித்தான்.

அவன் பெயர் இஸ்மேயில் மீரான். அவன் முகலாய சக்ரவர்த்தி ஷாஜஹான் பீரங்கிப் படைகளில் நாயக் வேலை வகித்தவன். ஔரங்கசீப்பின் சூறையாடுங்கோஷ்டியில் சேர்ந்தவன், அவனுக்கும் குதிரைப் படைத் தலைவனான முபராக் அலிக்கும் ஒரு தாசி விஷயமாகத் தகராறு ஏற்பட்டுவிட்டது. தனது அதிருப்திக்குப் பாத்திரமான மீரானைத் தண்டிக்கும் சமயம் பார்த்திருந்தான் முபராக். ஒரு சமயம் தஞ்சாவூர் மகாராஷ்டிரர்களை அடக்க ஒரு குதிரைப் படை முபராக் தலைமையில் வந்தது. மீரா

சந்தனம்—
குளிர்ந்த மணம்
ஆதிகாலந்தொட்டு சந்தனத்தின் விலையற்ற குணங்களில் ஒன்று அதன் குளிர்ச்சியளிக்கும் தன்மையே. ஜுரத்தாலேற்படும் தாபத்தை தணிப்பதற்குரிய ஔஷதமாகவன்றி சோர்வுற்ற அவயவங்களுக்குப் புத்துயிர் அளிப்பதற்கும் உபயோகப்படுகின்றது. குறைவற்ற தன்மையை முன்னோர்கள் சந்தனத்திற்கு ஒப்பிடுவார்கள். அதே சந்தனம் இன்று மைசூர் சந்தன சோப் என்னும் நாகரீக உருவத்தில் சரீரத்தின் குளிர்ச்சிக்கும், சோர்வையகற்றுவதற்கும் பயன்பட்டு வருகிறது.
மைசூர்
சந்தன சோப்
சந்தனம் குறிப்பது குற்றமற்ற குணமே
★★ மைஸூர் கவர்மெண்டு தயாரிப்பு ★★

னும் ஒத்தாசைக்கு அனுப்பப்பட்டான். வீரகேசநல்லூரை அடுத்த ராஜபாட்டையில் போகும்போது அவனை எலும்பு நொறுங்க அடித்துப் போட்டுப் போய்விட்டார்கள் முபராக்கின் ஆட்கள்.

தேவர் அவன் விருப்பத்தை அறிய, அவன் தன் ஊர்போய்ச் சேரவேண்டுமா என்று கேட்டார்.

மீரான் ஸாஹேப் "எனக்குக் கொள்ளை அடிக்கும் கூட்டத்தில் சேர விருப்பமில்லை. நான் ஒரு சாத்வீக முகம்மதியன். உங்கள் அனுமதியிருந்தால் என் மீதியுள்ள வாழ்நாட்களை இங்கேயே கழித்துவிடுவேன்" என்று இழுத்தான்.

தேவர் அவனது சரித்திரத்தைக் கேட்டு இரங்கினார், ஆனால் ஊரார் பயம் அவரைத் தயங்கச் செய்தது.

"நீ முகலாயப் படையைச் சேர்ந்தவனாயிற்றே? ஊரார்கள் பயப்படுவார்களோ என்னமோ" என்றார்.

பலஹீனனாயிருந்த மீரான் கண்ணில் ஒரு பிரகாசம் தோன்றி மறைந்தது. "நீங்கள் மட்டும் எனக்கு உறைவிடம் தந்து என் உயிரைக் காப்பாற்றினால், அல்லாவின்மேல் ஆணையாக ஒரு துரும்புக்கும் சேதம் செய்ய மாட்டேன். ஒருவர் உப்பைத்தின்ற மீரான் அவருக்குத் தீங்கு விளைவிக்கமாட்டான்" என்று கூவினான். உற்சாகத்தில் கூறியதால் கண்களில் நீர் வந்துவிட்டது.

அவனது குரலில் தொனித்த நேர்மையும் மன உறுதியும் தேவரை மயக்கிவிட்டன. அவர், "சரி உன்னிஷ்டப்படியே எங்களுடன் வாழலாம். ஆனால் எங்களுக்கு நீ ஏதாவது மோசம் செய்ய நினைத்தால், கடவுளுக்குத் துரோகம் நினைத்தவனாவாய்" என்றார். அவர் குரலில் தயாளமும் கம்பீரமும் முழங்கின.

* * *

மீரான் வீரகேச நல்லூரிலேயே தங்கிவிட்டான். ஊரை அடுத்து ஒரு சிறு குடிசை கட்டிக் கொடுக்கப்பட்டது. கிராமத்திலே சிற்சில நிலங்களையும் அவன் மேற்பார்வையில் விட்டனர். முதலில் ஊரிலுள்ள பிராமணர் அவனை நெருங்குவதற்கு அஞ்சினர். காலம் போகப்போக அவனுடைய பணிவும் சாந்தமும் அவர்களை அவன்பால் இழுத்தன. மீரான் மாலை வேளையில் குடிசையின் முன்பு மண்டிபோட்டுக்கொண்டு, நமாஸ் படிக்கும் காட்சி, சிறுவர்களுக்குப் பெரியவேடிக்கை. சிற்சில குறும்புப் பையன்கள், மௌனமாய் அமர்ந்திருக்கும் அவனது தாடியைப் பிடித்திழுப்பார்கள், மீரான் புன்னகையுடன் இவற்றைச் சகித்துக்கொள்வான். கொஞ்ச காலத்தில் கொச்சைத் தமிழும் பேசக் கற்றுகொண்டுவிட்டான். அதனால் ஊரிலுள்ளோருடன் வம்பளக்க அவனுக்குச்சாத்யமாக இருந்தது. மேலும் ஊரில் சுளுக்கு விழுந்தவர்களுக்கும் தேள் கொட்டப்பட்டவருக்கும் மந்திரம் போடுவது மீரான் தான். நாளடைவில் மீரான் அவ்வூரின் நன்மதிப்பைப் பெற்றுவிட்டான் என்று சொல்லலாம். அவனுக்கு இவ்வுலகில் சொந்தமாயிருந்தவை இரண்டே இரண்டு பொருள்கள். ஒன்று அவனருகில் இருந்த துப்பாக்கி; மற்றொன்று நன்றாய்க் கனத்த ஒரு தோல் பை. அதில் என்ன இருந்ததென்று யாருக்கும் தெரியாது.

* * *

ஐந்து வருடங்கள் சென்றுவிட்டன. அப்போது வீரகேசநல்லூருக்கு ஒரு பெரிய ஆபத்து வந்து சேர்ந்தது. ஔரங்கசீப் சக்ரவர்த்தி ஆனவுடன் அவன் மகன் சுல்தான் முஸம் தக்ஷிண கவர்னர் ஆனான். அவன் நாட்டம் செழிப்புற்றிருந்த தென்னாட்டின் மேல் விழுந்தது. ஏரியின் மடை உடைந்ததுபோல் அவன் படைகள் தெற்குப் பக்கம் பரவ ஆரம்பித்தன. அவர்கள் வந்த இடமெல்லாம் ஒரே கொள்ளையும் கொலையுமாகக் காட்சியளித்தது. கொலைக்குப் பேர்போனவனாய் உல்டாஸ்கான் விளங்கினான். கேரள தேசம் சூறையாடப்பட்டது, பெங்களூர் சந்திரகிரி பிரதேசங்கள் கொலைக்களமாயின. பயங்கரச் செய்திகள் தெற்குக் கிராமங்களில் பரவின. பெண்மையினம் முழுவதும் ஒரே நடுக்கத்தில் ஆழ்ந்துவிட்டது.

கொஞ்ச காலத்திற்கெல்லாம் உல்டாஸ்கான் தெற்குப் பக்கம் வந்துவிட்டதாகத் தெரியவந்தது. ஜனங்கள் அல்லோல கல்லோலமாய் ஓடத் தலைப்பட்டனர். வீரகேசநல்லூர் வாசிகளுக்கு நடுக்கம் எடுத்துவிட்டது. உல்டாஸ்கான் பாதை அவர்கள் கிராமமாகச் சென்றது. வீரகேசர் ரத்தினங்கள் சும்மா விடுமா? கொண்டலத்தேவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பயத்தினால் அவர் புத்தி மழுங்கிப்போய் விட்டது. தினமும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தெற்கு நோக்கிச் செல்வது ஒற்றர் மூலம் அறிந்தார். வீரகேசர் காப்பாற்றப்படவேண்டும். எவ்விதம் என்று அவருக்குப் புரியவில்லை.

கிராமத்தில் கூட்டம் கூடியது. கிராமத்தைக் காக்க என்னென்னவோ வழிகள் சொன்னார்கள். பயங்கொள்ளிப் பட்டாச்சாரியார் பெருமாளை எடுத்துக்கொண்டு கூட்டத்தோடு கூட்டமாக ஓடிவிடுவதே நல்லதென்று பயத்தினால் காக்குமுறச் சொன்னார். தேவருக்கு ஒன்றும் புரியவில்லை. கடைசியில் மீரானுக்குச் சொல்லியனுப்பினார்.

கூட்டத்திற்கு மீரான் வந்து சேர்ந்தான். எல்லாக்கண்களும் பயத்துடன் தன்னையே நோக்குவதை அறிந்தான். தேவருக்கு ஒரு வணக்கம் செய்துவிட்டு அமர்ந்தான்.

தேவர் அவனை நோக்கி "மீரான் ஸாஹிப்! உனக்குத் தற்போது கிராமத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்துத் தெரியுமென்று நினைக்கிறேன்" என்று ஆரம்பித்தார்.

மீரான் "செய்திகள் மூலம் அறிந்து கொண்டேன். உல்டாஸ்கானை எனக்குத் தெரியும். கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றான்.

தேவர் "மீரான் நாங்கள் யோசித்துப் பார்த்தோம். கிராமத்தைக் காக்க எங்களுக்கு வழி ஒன்றும் தெரியவில்லை. எவ்வளவோ யோசித்துவிட்டோம். கடைசியில் மிஞ்சிப்போய் உன்னை யோசனை கேட்கத் தீர்மானித்தோம். இவ்வளவு நாட்களாக எங்களுடன் வளர்ந்த பாசத்திற்காக, நீ இதை உன் கிராமம்போல் நினைத்து, நாங்களெல்லோரும் உன் மனிதர்களாகவே பாவித்துக் காப்பாற்ற ஏதாவது வழி இருந்தால் சொல்வாய். இருப்பினும் நீ சொல்லித்தானாகவேண்டும் என்று நாங்கள் கட்டாயப் படுத்தவில்லை. ஏதாவது இருந்தால் சொல்வாய்" என்றார். சிறந்த வீரர் அவர் இவ்வாறு பேசிய தோரணையிலிருந்து ஆபத்தின் சுயஉரு தெரியவந்தது.

மீரான் யோசனையில் தலையைச் சாய்த்து விட்டான். வெகுநேரம் யோசித்துவிட்டு, "என் யோசனையைத் தெரிவிக்கச்சின்னாட்கள் அவகாசம் கொடுங்கள். எனக்குத் தெரிந்த வகையில் இப்போது ஒன்றும் தோன்றவில்லை" என்றான்.

அப்போது ஒரு ஒற்றன் வந்து "உல்டாஸ்கான் திருவிசைநல்லூருக்கு இருபது மைல்களுக்கு அப்பால் வந்து விட்டதாகத் தெரிகிறது. வடக்குப் பக்கம் ஒரே புகை மயமாய் இருக்கிறது. கிராமங்கள் பற்றி எரிகின்றன" என்று தெரிவித்தான்.

தேவர் "மீரான்! காலத்தின் போக்கைப் பார். சீக்கிரம் சொன்னால் நன்றாயிருக்கும். வழி ஒன்றும் தோன்றாவிடில், பட்டாசாரியார் விக்ரகத்துடன் ஓடிவிடுவார். நாங்களெல்லோரும் மடிவதாக உத்தேசம்" என்றார்.

"நாளைக்குச் சொல்லிவிடுகிறேன்" என்று கூறி எழுந்தான் மீரான். அவனது முகத்தில் ஆழ்ந்த யோசனைக் குறிகள் படர்ந்ததை யாவரும் கவனித்தனர்.

அன்று மாலை வழக்கம்போல் மீரான் நமாஸ் படிக்க அமரவில்லை. அவனைக் குடிசையிலேயே காணவில்லை. ஆலமரத்தடியில் உட்கார்ந்து தன்னை மறந்து யோசித்துக் கொண்டிருந்தான். அன்றிரவெல்லாம் அவன் குடிசையில் எரிந்த விளக்கு அவன் இரவு முழுவதும் தூங்கவில்லை என்பதைத் தெரிவித்தது.

மறுநாள் அதிகாலையிலேயே மீரான் கிளம்பிவிட்டான். கழனிகள் வழியாக, வீரகேசநல்லூரை அடுத்து இருந்த மலைத் தொடர்களை நோக்கிச் சென்றான். நடுப்பகல் வரைக்கும் அம்மலைகளையே சுற்றிச் சுற்றி வருவதை மாடுமேய்க்கும் சிறுவர்கள் பார்த்தார்கள். அம்மலைத் தொடர்களில் "வேடுவர் மலை" யென்று ஒரு குன்றுண்டு. அதனடி வாரத்தில் சுமார் ஐந்நூறு பேர் கொள்ளக் கூடிய குகையொன்றிருந்தது. ஆனால் அதன் முகத்துவாரம் வழியாய் ஒருவர் இருவர்தான் செல்லலாம். அவ்வளவு சிறியது. அக்குகையில் பேய்கள் வசித்து வந்தனவென்று ஊரார்கள் நம்பிவந்ததினால் இருட்டுக்குப் பின், ஏன் எப்பொழுதுமே, அணுகுவதில்லை. அப்பேர்ப்பட்ட குகையினுள் மீரான் புகுந்து புகுந்து வெளிப்படுவதையும், அதை அளந்து கொண்டிருப்பதையும் கண்டவுடன் உண்மையிலேயே பயம் வந்துவிட்டது மாட்டுக்காரச் சிறுவர்களுக்கு. ஓடிப்போய், தேவரிடம் சொன்னார்கள். தேவருக்கே புரியவில்லை குகைக்கும் தற்காப்புக்கும் என்ன சம்பந்தமென்று. இருக்கட்டும் வந்தவுடன் கேட்கலாம் என்றிருந்துவிட்டார்.

அன்று மாலை, சொன்னபடி கூட்டம் மீரானுக்காகக் காத்துக் கொண்டிருந்தது. அவனும் கிரமமாய் வந்துசேர்ந்தான். அவன் முகத்தில் நிலவிய அமைதியும் சாந்தியும் தேவரையே திடுக்கிடச் செய்துவிட்டன.

"என்ன மீரான் ஸாஹிப், யோசனை ஏதாவது உண்டா?" என்று கேட்டார்

"அல்லாவின் அருளால் நீங்களெல்லோரும்காப்பாற்றப் படுவீர்கள், ஒருவர் உப்பை தின்ற மீரான் அவர் உயிரைக் காப்பாற்ற

மனிதர்களே!..

சரும ஆரோக்கியத்திற்கு

ரெக்ஸோனுவை

உபயோகியுங்கள்



ஸ்திரீகளுக்குத்தான் முக வசீகரத்திற் கேற்றது ரெக்ஸோனு சோப்பென்று அவசரப்பட்டு எண்ணிவிடாதீர்கள். சரும-ஆரோக்கியத்தை உயர்வாகக் கருதும் ஒவ்வொருவருக்கும் அது ஒரு முக்கிய டாய்லட் சோப்பாகும். மனிதர்கள் சிறப்பாய் அனுபவிக்கிற நேர்த்தியான, மனதிற்குகந்த, உற்சாகத்தை அளிக்கும் சோப் அதுதான். இந்த நேர்த்தியான, பசுமைவாய்ந்த, விரைவில் நுரையை உண்டாக்கும் சோப்பின் ஒரு சிறந்த நன்மை என்னவென்றல், சுகத்தை யளித்து, சரும வியாதிகளைப் போக்கும் கிருமி நாசினியாகிய *கேடில் என்னும் மருந்து அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ரெக்ஸோனுவின் ஏராளமாய் விரைவிலேற்படும் நுரை வெகு சீக்கிரத்தில் ஆரோக்கியத்தை அளிக்கும் கேடில் என்னும் மருந்தை உங்கள் சருமத்தின் ஒவ்வொரு அடிப்பாகத்திலும் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. அங்கேதான் சரும உபத்திரவங்களும், சரும மாசு மறுக்களும் அதிகமாய் அடிக்கடி உண்டாகின்றன. இவ்விதமாக, உங்கள் சருமம் முழுவதும் சுகமடைந்து, சுத்திசெய்யப்பட்டுத் தூய்மையையும் அடைகிறது.

ரெக்ஸோனுவை ஒழுங்காக உபயோகித்தால், எவ்வளவு எளிதாக சரும-ஆரோக்கியம் விருத்தியாகுமென்றும், முழுச் சரும-ஆரோக்கியத்தைப் பாதுகாக்கக் கூடுமென்றும் நீங்கள் இதிலிருந்து அறியலாம். ஆகையால், இந்தப் பசுமை வாய்ந்த விரைவில் நுரையைத் தரும் மருந்திடப்பட்ட சோப்பை உபயோகிக்க இன்றே ஆரம்பியுங்கள். அதை உபயோகித்துக்கொண்டே இருங்கள்.

குறிப்பு:—சரும அழகிற்குச் சரும சுகமே அடிப்படையென்கிற விஷயம் ஞாபகத்தில் வைக்கக்கூடிய ஒரு உண்மையாகும். தன் சருமம் அதிக நேர்த்தியானதென்று ஒரு ஸ்திரீ எவ்வளவு பெருமை பாராட்டிக் கொள்ளுகிறுளோ அவ்வளவு உரிமை ஒரு மனிதனுக்கும் உண்டு.

★ரெக்ஸோனுவிலுள்ள கேடில் ஒப்பற்ற கிருமி நாசினியாகிய ஒரு கலப்பு மருந்து. சரும சுகத்திற்கு அதிக சக்தி வாய்ந்து, குணமளித்துப் போஷிக்கும் தைலம் சேர்ந்தது. சுகத்தைத்தந்து காப்பாற்றும் தன்மையுள்ள கேடில் யாவராலும் மதிக்கப்பட்டு விஞ்ஞானிகளால் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

ரெக்ஸோனு ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள். வெட்டுக்காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான், ரணங்கள், முகப்பருக்கள், அரிப்புகள், சனைப்புகள், கடிகள், மச்சமறுக்கள் முதலிய எல்லா சருமவியாதிகளுக்கும் ரெக்ஸோனு ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்

RP. 28-23-40 TM

REXONA PROPRIETARY LIMITED

மல் விடான். உயிர் போகுந் தருணத்தில் என்னைக் காத்து வளர்த்த உங்களுக்கு என் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றுவது என் கடமை. இதற்கு அல்லாவின் மேலாணை'' என்று கூவினன். போன நம்பிக்கை அமைதி எல்லாம் திரும்பின அங்கிருந்த கூட்டத்திற்கு.

''மீரான் நம்பலாமா? நாங்கள் ஓடிப்போக வேண்டியதில்லையே?'' என்று கேட்டார் பயங்கொள்ளிப் பட்டாசாரியார்.

"ஐந்து வருடங்கள் என்னைக் காப்பாற்றிய உங்களுக்கு நான் துரோகம் நினைத்தால் அல்லாவின் சாபம் என் தலைமீது இப்பொழுதே விழட்டும்" என்று கூவினன். அவன் மனஉறுதி கூட்டத்தை நடுங்கச் செய்தது.

தேவர் ''சரி, நாங்கள் தைரியமடைந்தோம். எங்கள் உயிர் மானம் எல்லாம் உன் கையிலிருக்கிறது. நீ போய் வரலாம்.........அதிருக்கட்டும்; எங்களை நீ காப்பாற்றப்போகும் விதம் சொல்லவில்லையே?'' என்ருர்.

மீரான் "அதைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. பிற்பாடு உங்களுக்கே அது புரியும்" என்று கூறிப் போய்விட்டான்.

இரண்டு நாட்கள் வெகு கஷ்டமாகக் கழிந்தன. அதற்குள் வெகு பயங்கரமான செய்தியும் வந்துகொண்டிருந்தது. சூறையாடும் படைகள் வீரகேசநல்லூரைத்தான் நெருங்கிவருகின்றன என்று தெரியவந்தது. பட்டாசாரியார் பயத்தினல் வாயடைத்துப் போய், குறுக்கே நெடுக்கே ஓடிக்கொண்டிருந்தார். தேவருக்கோ இன்னதுசெய்வதென்றே புரியவில்லை. மீரான் செய்யப்போகும் விஷயம் இன்னதென்றே புரியவில்லை. அதைப்பற்றிக் கேட்டும் அவன் பேசாமலிருந்தது அவருக்கே ஒரு பயத்தைக் கொடுத்தது. கடைசியில் கையை விரித்துவிட்டால் ஊரே அதோகதிதான். ஏண்டா இவனை நம்பினேம் என்று கூடத்தோன்றியது அவருக்கு ஒரு சமயம். மீரான் மட்டும் அடிக்கடி "வேடுவர் மலை"க்குப்போய் வந்துகொண்டிருந்தான். அவன் முகத்தில் நிலவிய அமைதி எல்லோர் மனதிலும் சம்சயத்தைக் கிளப்பியது.

மூன்ரும் நாள் பொழுது புலரும் சமயம், கிழக்கு சற்றே வெளுத்திருந்தது. காக்கைகளின் கரைதல் அப்போதுதான் ஆரம்பித்திருந்தது. பயத்தினல் தூக்கம் பிடிக்காதிருந்த கிராமவாசிகள் எல்லோரும் சீக்கிரமே எழுந்து நடமாடத் தலைப்பட்டுவிட்டனர். அவர்கள் எதிர்பார்த்திருந்த யமன் வந்துவிட்டான். ஒட்டமும் நடையுமாய் வந்த உளவாளி ஒருவன் பயங்கரச் செய்தியை அறிவித்தான். முகமதியக் குதிரைப் படைகள் வீரகேசநல்லூர் வரும் ராஜபாட்டையில் திரும்பிவிட்டதாகவும், இன்னும் இரண்டு மூன்று மணிகளில் பக்கத்துக் கிராமங்களைச் சூறையாடிவிட்டு வீரகேசநல்லூரை அடையலாமென்றும் தெரிவித்தான். தேவர் அலண்டுபோய்விட்டார். பயங்கொள்ளிப் பட்டாசாரியார் "ரங்கநாதா, வீரகேசப்பெருமானே, நீ தான் எங்களைக்காப்பாற்றவேண்டும்'' என்று அலறத் தொடங்கிவிட்டார்.

மீரான் வந்து சேர்ந்தான். தேவர் அவனை நோக்கி ''மீரான்—?'' என்று இழுத்தார்.

மீரான் "சகோதரரே! ஒன்றும் பயப்பட வேண்டாம். நான் பார்த்துக்கொள்ளுகிறேன். ஜனங்கள் எல்லோரையும் கோயிலில் பத்திரப் படுத்துங்கள்'' என்ருன்.

கோயிலின் மணி 'கணர் கணர்' என்று ஒலித்தது. அங்கே தப்படி. கிராமத்து ஜனங்கள் தங்கள் வேலையை அப்படியே போட்டுவிட்டு ஓடிவந்துவிட்டனர். அவர்கள் முகத்தில் பயமும் கைகால் நடுக்கமும் நடக்கவொட்டாமல் செய்தன. கிழத் தாய்மார்கள் குழந்தைகளைக் கட்டிக்கொண்டு "கோ'' வென்று கதறினர். பெரியவர்கள் கூடத் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டார்கள். தேவர் யாவரையும் சமாதானப்படுத்தி, கோயிலுக்குள் அனுப்பித்தார். ஒரு நிமிஷத்தில் ஊரே கோயிலினுள் அடங்கிவிட்டது. யாவரும்'' ரங்கநாதா, வீரகேசா, காப்பாற்று காப்பாற்று'' என்று போட்ட அபயக் குரல்கள் அழுகைச் சத்தத்தினூடே கேட்டன. மீரான் ஒரு சோகச் சிரிப்புடன் இவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் செய்யப்போகும் வேலையில் அவனுக்கே நம்பிக்கை இருந்தது.

கடைசியில் அங்கு நின்ற தேவரை ஒரே கட்டாகக் கட்டிக்கொண்டு ''சகோதரரே, ஐந்து வருடங்களுக்குமுன் அந்நியனை என்னை எடுத்துக் காப்பாற்றினீர்கள். அதற்கு இன்று நான் என் உயிரையே கொடுக்கப்போகிறேன். நான் இதில் உயிருடன் திரும்பிவருவது சந்தேகம். உயிரிழப்பின் மீரான் தன் கடமையைச் செய்தானென்பதை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நான் வரட்டுமா?'' என்று

புறப்பட்டான். அன்பின் பெருக்கால் கண்ணிலும் நீர் பெருகியது.

தேவர் திடுக்கிட்டார். "மீரான்! நீ இதில் உயிரிழக்கப் போகிருயா? வேண்டாம். நாமெல்லோரும் சேர்ந்து இறந்துவிடுவோம் மீரான், வேண்டாம்" என்று கூவினர். அவன் மேல்கொண்ட வாஞ்சை அவ்வளவு உச்ச நிலையில் இருந்தது அவருக்கு. அவர் பேசி முடிக்குமுன் மீரான் அங்கிருந்து போய்விட்டான். தேவர் மௌனமாகக் கோயிலை நோக்கிவந்தார்.

கோயிலில் ஏகபயத்துடன் உட்கார்ந்திருந்தனர் ஜனங்கள். அடுத்த கணம் என்ன நடக்குமோ என்ற கிலி அவர்களைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்தது. பச்சைக் குழந்தைகளின் தாய்மார்கள் அவைகளின் அழுகையைக்கூடக் கவனியாமல் நின்று கொண்டிருந்தனர். தேவரின் கட்டளையின் பேரில் ஓர் ஆள் கோபுரத்தின் உச்சியில் ஏறி நின்றுகொண்டு நடப்பவைகளை அறிவித்துக் கொண்டிருந்தான்.

"மீரான் குடிசையை விட்டு ராஜபாட்டையை நோக்கி நடந்துசெல்கிருன்" என்ற செய்தியை அறிவித்தான் முதலில்.

கால் மணி கழிந்தது.

திடீரென்று "ஐயோ படைகள் வந்து விட்டன." என்று அலறினன், கீழே கூட்டத்தில் "வீரகேசா! காப்பாற்று, காப்பாற்று" என்ற கூக்குரல்கள் எழுந்தன.

"மீரான் தலைவனுடன் பேசுகின்ருன்" என்ற அறிவிப்பு, கூட்டத்தில் கலவரத்தை உண்டாக்கியது.

"ஐயோ மோசம் போனேம்" என்று அலறினர்.

பயங்கொள்ளிப் பட்டாசாரியார் "அப்பவேதெரியும் எனக்கு அவனை நம்பக்கூடாதென்று" என்ருர்.

"மீரான் குதிரை மேலேறிக்கொண்டு படைகளுடன் மலைப்பக்கம் போகிருன் என்ற செய்தி சற்றே சமாதானம் அளித்தது.

"குகை! அதற்குத்தான் போகிருன்" என்ருர் தேவர்,

அரை மணிநேரம் மௌனம் நிலவியது. "மீரான் எல்லோரும் குதிரையை விட்டிறங்கிக் குகைக்குள் போகிருர்கள்" என்று அறிவித்தான் கோபுரத்தின் மேலிருப்பவன்.

இன்னும் ஐந்து நிமிஷங்கள் சென்றன. பின்பு திடீரென்று அவர்கள் கேட்டிராத பயங்கர வெடிச்சத்தம் கேட்டது. கையிலிருந்த குழந்தைகள் நழுவின. சத்தம் அவர்களைக் கிடுகிடுக்கச்செய்தது,

"ஐயோ! குகையண்டை ஒரேபுகை. குதிரைகள் அறுத்துக்கொண்டு ஓடுகின்றன" என்ருன் கோபுரவாசி.

அன்று மாலை வரை அவர்கள் அங்கேயே இருந்தனர். குகையினுள்ளிருந்து ஒருவரும் வெளியே வரவில்லை. பின்பு தைரியமாக வெளியில் வந்தார்கள்.

இரண்டுநாள் கழித்து இருவர் குகைப் பக்கம் போனர்கள். அங்கே அவர்கள் கண்டகாட்சி அவர்களை மூர்ச்சையடையச் செய்தது, பெரிய மலை ஒன்று புரண்டது போல் பெரியகற்கள் பெயர்ந்து விழுந்திருந்தன. உள்ளிருந்து இன்னும் புகைவந்து கொண்டிருந்தது. உருத்தெரியாத அநேக முண்டங்கள் வெளியே விழுந்திருந்தன. குகையைச் சுற்றி ஒரே காக்கை கழுகு கூட்டம்.

தேவர் மீரான் குடிசையைப் போய்ப் பார்த்தார். அங்கு அவன் தோல்பை திறந்து கிடந்தது. எடுத்துப் பார்த்ததில் கொஞ்சம் வெடிமருந்து மிச்சமிருந்தது. சேனையிலிருந்த தேவருக்கு விஷயம் விளங்கி விட்டது. குகையினுள் வெடிமருந்தை வைத்து, அனைவரும் உள்ளே சென்றபின் கொளுத்திவிட்டிருக்கின்ருன். குகைபெயர்ந்து அனைவரையும் நாசம் செய்துவிட்டது. கீழே தரையில் மீரான் கிறுக்கியிருந்த சொற்கள் அவர் கண்களில் பதிந்தன. "மீரான் இனி மீளான்!" என்றும் அழுதிராத தேவர் கண்களில் நீர் மல்கியது.

அவர் தலைமையில் குகையிலிருந்த கற்களை அப்புறப்படுத்தினர்கள். சிதைந்த பல உருவங்கள் கிடந்தன. அவற்றில் திப்பந்தம் ஒன்றைக் கையில் கெட்டியாய்ப் பிடித்திருந்த உருவமொன்றை மீரான் என்று அறிந்தார். அதை அங்கேயே வைத்துச் சமாதி கட்டினர். வருஷா வருஷம் ஐப்பசி மாதத்தில் அவன் வந்த தினத்தில், தங்களைக் காக்கவந்த தெய்வமென்று பூஜை நடத்தினர்கள். வழக்கப்படி இன்றும் அவர்கள் சந்ததி அப்பூஜையை நடத்தி வருகிறது. பிரபல வீரன் உல்டாஸ்கான் போனவழி முகலாயருக்குத் தெரியாது. வீரகேசநல்லூரில் சண்டை நடந்து மாண்டுபோனதாக அவர்கள் நினைத்தார்கள்.

மாமா கதையை முடித்தனர்.

கதை சுவாரஸ்யத்தில் அநேக ஸ்டேஷன் கடந்ததை நான் கவனிக்கவில்லை. மலைத் தொடர்களை நோக்கினேன். மீரான் கோயில் புகைப் படலம் போன்று கம்பீரமாய் நின்றுகொண்டிருந்தது.

மலையும் மடுவும்

ரா. ஸ்ரீ. தேசிகன்

கெட்ட கண் பார்வைகூட விழக்கூடா தென்று மிகவும் நன்றாய்ப் பாது காக்கப்பட்ட ஒரு மயிலைக்காளை சப்பை நழுவிப் போனதால், காலை இழுத்து இழுத்துக்கொண்டு தெருவிலே, அம்பலத்திற்கு வந்துவிட்டது. அதன் இடத்தை வேறு மாடு அழகு படுத்திற்று. நொண்டிக் காளைக்கு வேண்டிய உணவுகூடக் கிடைக்கவில்லை. வீதியிலுள்ள எச்சில் இலைகளை மேயத் தொடங்கிற்று. கழுத்தில் கணகணவென்று ஒலிக்கும் வெள்ளி மணிகள் மறைந்துவிட்டன. கொம்பிலுள்ள தங்கப் பூண்களைக் காணோம். அந்திப் பொழுதில் அதன் கழுத்தில் ஓர் அலங்கலைப் போட்டுச் சாம்பிராணிப் புகை அதற்குக் காட்டுகிற வழக்கம். மஞ்சணீர் சுற்றுவார்கள். இம் மங்கலச் சடங்குகள் புதிய மாட்டிற்குத் தான் நடந்தன. சப்பை நழுவிய மாட்டிற்கு ஒருவிதமான பணிவிடையும் நடக்கவில்லை. நாளுக்குநாள் அது இளைக்க ஆரம்பித்துவிட்டது. கொழுகொழுவென்றிருந்த காளை தேய்ந்து துரும்பாய்ப் போயிற்று, எலும்புகள் வெளியிலே தெரிந்தன, எத்தனை எலும்புகள் இருக்கின்றன என்று கணக்கிட்டுச் சொல்லிவிடலாம் வண்ணம், அது அத்தனை வாடி வதங்கி வற்றிப்போய் விட்டது. ஆனால் அதன் முகத்திலுள்ள பொலிவு மாறவில்லை. பண்டை வனப்பின் சின்னங்களையோ சுவடுகளையோ அதில் பார்க்கலாம்.

இம்மாடு காலை சுமார் ஒன்பது மணிக்குத் திருவல்லிக்கேணி தெளிசிங்கப் பெருமாள் கோயில்தெரு சுந்தரமையர் வீட்டுப் பக்கம் வரும். அதைப் பார்க்கிற பொழுதெல்லாம் அவர் மனதில் ஒரு காட்சி எழும். ஓர் இருண்ட இரவுக்கு அவர் சிந்தை ஓடும். மின்னல் ஒளிபாயும் வானவீதி தோன்றும். பலபேரிகைகளின் முழக்கங்காட்டும் முகிற் கூட்டங்கள் அவர் முன் விரியும். இடையறாது கொட்டும் மழையின் ஒலி அவர் செவியில்விழும். கொந்தளித்துச் சுழித்தோடுகின்ற ஆற்றின் நடுவே வண்டியை இழுத்து நீந்திய இக்காளையின் உரு அவர் கண்முன் உலாவும்.

இக்காளை இழுத்துச் செல்லாதுபோனால் தாமும் விச்வநாதையரும் நீர்ச்சமாதி அடைந்திருக்கக் கூடுமே என்றெண்ணுவார். உயிரைக் காப்பாற்றிய காளைக்குச் செய்நன்றி புரியவில்லையே என்று ஏங்குவார். நொண்டி நொண்டி வருகின்ற மாட்டிற்குப் பழைய சோற்றையோ கழுநீரையோ வைத்துக்கொண்டு காத்திருப்பார். ஒன்பது மணியானதும் அம்மாடு அவர் வீட்டிற்கு வரும். அம்மாடு அவர் அளிக்கும் உணவை அருந்திச் சென்றால் அவருக்கு அமைதி ஏற்படும். ஆனால் அன்று அம்மாட்டைக் காணோம்.

“மாடு வராததற்குக் காரணம் என்ன? மாடு தானே இறந்துவிட்டதா? அல்லது விச்வநாதையர் அதை ஊரைவிட்டு அடித்துத் துரத்திவிட்டாரா? ஒன்றும் விளங்கவில்லையே” என்று சிந்தையில் ஆழ்ந்திருக்கும் தருணம், சுந்தரமையர் நண்பர் கோபாலையர் அங்கே வந்து சேர்ந்தார்.

“என்ன முகம் வாடியிருக்கிறதே, என்ன செய்தி?” என்று கோபாலையர் கேட்டார்.

“ஒன்றுமில்லையே” என்றார் சுந்தரமையர்

“ஒன்றுமில்லையே என்றால் நான் சும்மா விடுவேனா? “அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம்–கடுத்தது காட்டும் முகம்”. என்று மொழிந்தார் கோபாலையர்.

“என் மனத்திலிருப்பதைச் சொல்லிவிடுகிறேனே. விச்வநாதய்யர் காளைமாடு அடிக்கடி இங்கே வரும். இன்று வரவில்லையே. என்ன காரணமோ? என்று சிந்தித்து உட்கார்ந்துகொண்டிருக்கிறேன்” என்று பதில் கூறினார்.

“அம்மாடு சக்கிலியனுக்குப் போய்விட்டது”

“சக்கிலியனுக்கா!” என்று பிரமித்துப் போனார் சுந்தரமையர்.

“அவர் உயிரைக் காப்பாற்றிய மாட்டிற்கா இந்நிலை வரவேண்டும்” என்று ஐந்து நிமிஷங்கழித்துப் பேச ஆரம்பித்தார். அந்த அதிர்ச்சியிலிருந்து கிளம்பிவர அந்நேரம் பிடித்தது.

“அனுதாபத்தினால் அதைச் செய்தாராம்” என்றார் கோபாலையர்.

"அனுதாபமா!"

"அது படுகிற துயரைக் கண்டு அவருக்குச் சகிக்கவில்லையாம். வெள்ளைக்காரர்கள் நொண்டிக் குதிரைகளைச் சுட்டுவிடுகிற வழக்கத்தைக் கேட்டிருக்கிறீர்களன்றோ?"

"ஆமாம், கேட்டிருக்கிறேன்"

"அதிக கருணை ஏற்பட்டால், கொடுமையான செயல் ஏற்படலாம்" என்றார் கோபாலையர்.

"அதென்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்"

"கன்று கஷ்டப்படுகிற பொழுது, அது படும் துயர் காணச் சகியாது விஷத்தை வைத்துக் கொன்ற மஹானைப் பற்றிக்கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" என்று மெதுவாகக் கோபாலையர் ஆரம்பித்தார்.

"ஆமாம், கேள்விப் பட்டிருக்கிறேன்" அப்படியானால் பிணியினால் வருந்துகிற ஜனங்களைக் கருணையினால் கொன்றுவிடலாமே. நம் தாய் தந்தையர்கள் மீளாத நோயில் உழலும் பொழுது அவர்களை மாய்த்துவிடலாமே என்றார்!" சுந்தரமையர்.

"அவர்களுக்கு இறக்க மனமிருக்குமா என்பதைக் கருத வேண்டாமா?"

"அவர்களுக்கு இறக்க எப்படி மனம் இருக்கும். தற்கொலை செய்யத் துணிந்தாலும் மறு கணத்தில் உயிரின்மேல் ஆசை வந்துவிடுகிறதை நாம் கண்ணாரக் கண்டிருக்கிறோமே."

"குஷ்டரோகி கிணற்றில் விழுந்ததைப் பற்றி நினைக்கிறீர்களா?" என்றார் கோபாலையர்.

"ஆமாம். அதில் ஒரு பெரிய உண்மை விளங்கவில்லையா?"

"ஆமாம், அதற்கென்ன சந்தேகம்?

"அவன் வெறுப்பிலே கிணற்றில் குதித்தாலும், தண்ணீரில் தத்தளித்து ஓலமிட்டதை நம் செவிகள் அறியுமே. நமக்குக் கருணை இருக்கலாம். அக்கருணையைத் துயருறும் பிராணி ஏற்றுக்கொள்ளாதவரையில் அதைக் கொல்லலாமா? உணர்ந்து பாருங்கள்" என்றார் சுந்தரமய்யர்.

"அதெப்படிக் கொல்லலாம்?"

லாக்ஸாமிண்ட்

இனிய தித்திக்கும் சுகபேதி பெப்பர்மிண்ட் மாத்திரைகள்

தயாரிப்பவர்கள்:- ஸெல்டோனு பார்மகல்ஸ்

ஏஜெண்டுகள்:— தாதா & கம்பெனி, சென்னை.

எங்கும் கிடைக்கும்

"படைக்கிறவனே அழிக்கலாம். நமக்கோர் அதிகாரமுமில்லே."

"இருப்பதைக் காப்பாற்றுவதே நம் கடனுகும்" என்ருர் கோபாலேயர்.

கோபாலேயர் அகன்றதும் சுந்தரமய்யர் மனேவியின் பெரிய அம்மை அங்கே வந்து சேர்ந்தாள். அவள் பாலியத்திலேயே நூல் இழந்தவள். அவளுக்கு வயது எழுபதிருக்கும். முதுகு கூனிப்போயிருந்தது. உடம்பிலோ எண்ணெய்ப் பிசுக்குப் பிடித்த உடை. கைகள் நடுங்குகின்ற கைகள், வாயோ சற்றுக் குழறும்.

"அடி பர்வதம், உன் வாயிக்குச் சக்கரைப் போடணும்" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தாள்.

"என்னே அடித்துத் துரத்திட்டாடி உன் தங்கை மீனு. பணமாய்க்கொண்டு சாச்சேன், காசாய்க்கொண்டு சாச்சேன். சரீரத்தைச் சாருய்ப்புழிஞ்சு உழைச்சேன். என் தோலேச் செருப்பாய்த் தைச்சுப்போட வேண்டியதுதான் பாக்கி. அப்பெல்லாம் வேண்டியிருந்தது. நான் ரொம்பக் கொட்டிக்கிறேனும். அதனுல் அவள் குடி அழிஞ்சு போயிடுத்தாம். நான் அவாத்துக்குப் போனுல், மீனு ஆத்துக்காரர் ஆத்தில் அடி வைக்கமாட்டாராம். குடி என்னுலே அழிஞ்சு போச்சாமே, உனக்குக் காலணு கொடுக்காதே அங்கே கொண்டு சாச்சதுக்கு இதுதானுடி பலன். நான் செத்துப் போனுல் முழுகமாட்டாளாம்; சக்கரைப் பொங்கல் சாப்பிடுவளாம். என்ன அதிசியம் பாத்தியாடி,

"நான் அப்பவே சொன்னதுதானே"

"ஆமாம், எனக்கு அப்பவே சொன்னே. அதை நம்பல்லே, இப்பொ அவஸ்தைப்படறேன். புடவை எத்தனே அள்ளுகந்தலாயிருக்குப் பாத்தியோ"

"அதைப்பற்றிக் கவலேப்படாதே. எங்காத்துக்காரரிடம் சொல்லி வாங்கித்தறேன்."

"நான் இனிமே மீனு முகத்தில் முழிக்க மாட்டேன். நான் இங்கே இரண்டுநாள் இருந்துட்டு ஸ்ரீரங்கம் போறேன். என் தம்பி, அதாண்டி உன் மாமா கிட்டே என் மண்டையைப் போடறேன். எல்லாம் கறக்கிற வரையில்தானே மாடு; மறத்துப்போனுல் அடிச்சுத் துரத்தவேண்டியதுதானே."

மாடென்ற சொல் கிளம்பின உடனே, விச்வநாதையர் காளே மாட்டின் கடைசி நிலே சுந்தரமய்யர் மனத்தகத்தே பாய்ந்தது.

"மீனு, பார்த்தசாரதியிடம்போய் அழுதுட்டுவறேன்" என்று கைகள் ஆட, கால்கள் தள்ளாட, பார்த்த சாரதி கோயிலுக்குப் போனுள் அக்கிழவி.

"என்ன பார்த்தகளா, என் பெரியம்மா கதியை"

"மீனுவுக்கு ஏத்த ஆத்துக்காரர்; ஆத்துக்காரருக்கு ஏத்த மீனுதான். இப்படித் தம்பதிகள் சேர்கிறது துர்லபம்" என்ருர் சுந்தரம் அய்யர்.

"இப்படித்தான் எல்லாம் நடக்கப்போறது" என்ருள் பர்வதம்.

"என்ன நடக்கப்போறது சொல்லேன்"

என் சித்தி பிள்ளேக்குக் கலியாணம் பண்ணிவைச்சகள். ஜவுளி வாங்கித் தந்தகள். பணங்கொடுக்க முடியாதபோது ஆத்தில் சாதத்தைப் போட்டு, ஹோட்டலுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைத் துணிமணிக்கு ஈடு பண்ணும்படி செய்தகள். பெண்ணுத்துக்காரர்களுக்கு, "ஏதுடா, கலியாணம் பண்ணிவைச்சானே ஒரு மனுஷ்யன்" என்று கடுகத்தனே விச்வாசம் உண்டா? இங்கே திரும்பிப் பார்க்கிருர்களா? இல்லே; என் சித்திபிள்ளே இங்கே வந்தால் எட்டி அடி வைக்கிறதில்லே. நாம் பண்ணின பாவம்; எது செய்யட்டும், அதுக்கு நேர் விரோதமான பலம் கிடைத்துவிடுகிறது. அதேமாதிரிதான் உங்கள் தமயனுர் பிள்ளேயும் பண்ணப்போருன். மூத்த பிள்ளேயைக் கொண்டுவைத்துக் கொண்டு வேணது செய்தகள். அவர் பெண்களுக்குக் குறைவில்லாது செய்தகள், இந்தப் பையன் வந்து இரண்டு வருஷமாகிறது. வேலேயோ பார்த்துவருகிருன். தனியாய்ப் போகச் சொல்லுங்கள். நிதம் ஆபீசுக்கு எட்டு மணிக்குச் சமையல் செய்ய என்னுல் முடியவில்லே. நீங்கள் சொல்லறகளா? நான் சொல்லட்டுமா!

"எப்படிச் சொல்றது. அவாளுக்கே தெரிய வேண்டும்"

"பண்டம்பாடி குறைஞ்சு போயிடறதேன்னு நான் சொல்லவில்லே, நாள் கிழமைக்கு வரட்டும். முன்னேப்போல உடம்பிலே வலிவில்லே. நான் படுத்துக்கொண்டால், என் குழந்தைகள் சந்தியில் நின்றுவிடும்"

மனேவி சொல்லுகிறது நியாயம் என்று மனத்தில் பட்டாலும், அதைத் தன் தமயன் பிள்ளேயிடம் சொல்லுவதற்கு வேண்

டிய தைரியமில்லை. உள்ளத்தே ஒரு போர் நிகழ்ந்தது. அந்தப் போர் முடிகிறதாய்த் தெரியவில்லை. ஆனால் அவர் மனைவி மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு அகத்தில் புகைந்து கொண்டிருந்த விஷயத்தை வெளிக்கிளப்பினாள். தமையன் பிள்ளை வேறு அறை பார்த்துக்கொண்டு அகன்று விட்டான். தன் சிறிய தகப்பனையும், அவர் மனைவியையும் வாய்க்கு வந்தபடி திட்டினான். சிறிய தகப்பனை வழியில் கண்டாலும் முகத்தை அப்புறம் திருப்பிக்கொண்டு போகத் தொடங்கினான். நாட் கிழமைகளுக்குச் சொல்லி அனுப்பினாலும் அப்பையன் வருகிறதில்லை. அவனுக்குப் பக்ஷணங்களைக்கொடுத்து அனுப்பினாலும், அவைகளைத் தெருவில் எறிந்தான். தமயனிடமிருந்து கடிதங்களுக்குமேல் கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. வசை மொழிகளுக்கோ எல்லை இல்லை.

வந்த கிழவியோ ஒரு வாரம் இருந்து விட்டுச் சீரங்கம் போய்விட்டாள். வீட்டிற்கு வந்த விருந்தினரும் அகன்றனர். சுந்தரமையர் வீட்டில் அவரும் அவர் மனைவியும் மக்களுந்தாம். ஒரு நிலவு தோய்ந்த இரவு; மனைவி மக்களும் துயின்று விட்டனர். ஊர் ஓசைகள் அவிந்து விட்டன. வான வீதியில் சந்திரன் ஒருவன்தான் தன்னந்தனியாய்த் துணையின்றித் திரிந்தான். சுந்தரமையர் மனமன்றில் அநேக எண்ணங்களும் உருவங்களும் நடனமாடின. நொண்டிக் காலையின் உருவம் வந்து மறைந்தது. கூனல் விழுந்த கிழவியின் சோகத்தோற்றம் எழுந்து, அவர் உள்ளத்தை வாட்டிற்று. தமையன் பிள்ளையின் தீயச்செயல்களுக்கு உள்ளம் நைந்தார். தன் மனைவியின் சித்தியின் பிள்ளையின் செய்நன்றி அறியாத இருள்சேர் உள்ளத்தை உன்னி, மனஞ் சோம்பினார். அமிருத கலசத்தில் கடுகளைய மாசு விழுந்தாலும், அத்தனையும் கெட்டு விடுகின்றதன்றோ! அநேக நன்மைகளை ஒரு நேரில்லாத சந்தர்ப்பம் சீர்குலையும்படி செய்கின்றதே! இஃதென்ன உலகியற்கை! 'அநேக இன்னல்கள் ஒரு நன்மை உன்னக்கெடும்' என்றாரே ஒரு பெரியவர். அநேக நன்மைகளை ஒரு கடுஞ்சொல் அழித்து விடுகின்றதே! இருக்கவேண்டும் என்றதற்கும், இருக்கிறதற்கும் எத்தனை வித்தியாசம்! வெய்யோன் விரிசோதியின் வனப்பில் தோய்ந்த மலைச் சிகரத்தில் உலாவும் மஹான் எங்கே, இருள்சேர் நரகமனைய மடுவில் புழுப்போல் நெளியும் நீச மாந்தர்களெங்கே! "மலையும் மடுவுந்தான், மலையும் மடுவுந்தான்" என்ற உண்மைக்குச் சுந்தரமையர் உள்ளம் எதிரொலி கொடுத்தது.

தலை நிறைந்த கூந்தலே முகத்தின் அழகை எடுத்துக்காட்டுவது. கூந்தலே முக அழகை ஆக்குவதும், அழிப்பதும். கூந்தலழகையும் முக அழகையும் இன்றே கேசவர்த்தினியைக் கொண்டு விருத்தி செய்யுங்கள்.

அற்ப கேசத்தைவிட அழகுக்கு ஹானி வேறில்லை. இதைப் பரிஹரிக்கக் கேசவர்த்தினியைவிடச் சிறந்த மருந்துமில்லை. இழந்த கூந்தலையும் இளமையையும் கேசவர்த்தினியைக் கொண்டு இன்றே பெறுங்கள்.

அழகுள்ளவர் ஒரு சிலரே. ஆனால் கூந்தலழகையோ கேசவர்த்தினி உபயோகத்தால் ஒவ்வொருவரும் பெறலாம். கேச சம்பத்து படைத்தவர் அதை இழக்காமல் கேசவர்த்தினியைக் கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியால் அதை அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயன சாலை

கோயமுத்தூர்.

போலிகளை வாங்கி மோசம் போகாதீர்கள். "கேசவர்த்தனி தென்னிந்திய ரஸாயன சாலை என்ற பெயர்களைக் கவனித்து வாங்குங்கள்."

ஸோஷலிஸத்தின் கதை

யோகி சுத்தானந்த பாரதியார்

இப்போது அரசியல் உலகில் இரண்டு சொற்கள் அடிபடுகின்றன; ஆம். அடித்துக்கொள்வதும் உண்டு. ஸோஷலிஸம்-கம்யூனிஸம். இவை என்ன, எதைக் குறிக்கின்றன, எப்படி வந்தன என்று நம்மவர் தெளிவாக அறியவேண்டும். ஏனென்றால் உலக அரசியலையே ஆட்டி வைப்பவை இச் சொற்கள். வெள்ளைக்கார நாடுகளிலெல்லாம் இப்போது இந்த இரண்டு சொற்களே சிலம்பமடித்துப் பொதுஜன வாழ்வைக் கலக்குகின்றன. கம்யூனிஸத்தைப் பற்றித்தான் சென்ற இரண்டு இதழ்களில் அறிந்தோம்; அதன் தாயே ஸோஷலிஸம்.

ஸோஷலிஸம் அல்லது சமதர்மம் ஸர் தாமஸ் மூர் எழுதிய யுடோபியாவிலிருந்து உருவானது. இப்பெரிய தியாகியைப்பற்றி நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

ஸர் தாமஸ் மூர் (1478—1638)

ஸர் தாமஸ் மூர் ஆங்கில மேதாவிகளில் முதலிடம் பெற்றவர்; தூய தியாகி; "அவர் உள்ளம் பனியைவிட வெண்மையானது" என்றார் ஏராஸ்மஸ். தாமஸ் மூரின் தகப்பனார் ஜான் மூர் நீதிபதி, அறிவாளி; மகனை அன்புடன் வளர்த்து, லண்டனில் படிக்கவைத்தார். மூர் காண்டர்பரி ஆர்சிபிஷப்பிடம் பிரியமாக வளர்ந்தான். அவன் அறிவும், பேச்சும், அன்பும், தெய்வ பக்தியும் அப்பெரியாரை வசீகரித்தன. அவர் அவனை ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலையில் சேர்த்து, அக்காலத்திற்குரிய எல்லாக் கலைகளையும் கற்கும்படி செய்தார். கிரீக்கு லத்தீனில் மூர் முதன்மை பெற்றான். சரித்திரம், பொருளாதாரம், பூகோளம், தத்துவம், இலக்கியம் ஆகிய அனைத்திலும் அவனை யாரும் மிஞ்ச முடியாது. ஒரு நொடிகூட வீணாக்காமல் அவன் அறிவை வளர்த்தான். அத்துடன் அவன் தனியே இருந்து, தன்னைப்பற்றியும், உலகைப்பற்றியும் நீண்டநேரம் சிந்திப்பதுண்டு. அவனது வாலிபச் சிந்தனையில் ஒரு புதிய உலகம் உருவானது. அந்த உலகை லத்தீனில் யுடோபியா என்ற நூலாக அவன் எழுதினான். அதைப் பார்த்தவர்கள் வியந்து போனார்கள். பைபிளுக்கு அடுத்தபடியாக அந்த நூலைக் கொண்டாடினார்கள். அதுதான் சமதர்ம பைபிள் என்னலாம். அதன்படியே சுதந்தரமாக, மனசாட்சிக்கு விரோதமில்லாமல், உள்ளும் புறமும் சுத்தமாகத் தாமஸ் மூர் வாழ்ந்தான். நமது நாட்டில் பிறந்திருந்தால் அவனை ஒரு ரிஷி என்னலாம்.

தாமஸ் மூர் சட்டம் படித்து வழக்கறிஞனானான். சட்டத் தொழிலில் அவன் ஏராளமாகச் சம்பாதித்தான்— நியாயமாக. அநியாய வழக்குகளை அவன் எடுப்பதில்லை. ஏழை எளியவர்கள் வழக்கைத் தானே இனாமாகத் தீர்த்து உதவுவான். தன் வரும்படியெல்லாம் அவன் பொது நலத்திற்கே தந்தான். பசித்த முகம் பார்த்துதவினான். உலகில் ஏழைகள் படும் பாடும், செல்வர் இடம்பமும் அவனைக் கலக்கின.

மூரின் கனவுகள் மிகப் பெரியவை. மனித சமுதாயத்தை அளாவியவை. அவன் தூய உணவு, தூய உடை, தூய சுற்றம், தூய வாழ்வு, தூய சிந்தனையுடைய தூயன். "மதுவுண்ணாத மனிசன்" என்று அவனை அக்காலம் கேலி செய்தது. நீண்ட காலம் அவன் பிரமசாரியாகவே இருந்தான்; பெண்—வாடையே இல்லை; அவனது நண்பன் ஏராஸ்மஸ் வற்புறுத்தி, நல்ல கன்னியும் அமைந்த பிறகே இல்லறத்தை மேற்கொண்டான். அவன் அன்பும் அறமும் அருளும் துலங்க இல்லறம் நடத்தினான். செல்ஸீயில் அவன் வீடு சமதர்மக் கலை—கோயிலாகவே விளங்கியது. புலவர்களுக்கெல்லாம் அதுவே கலைச் சங்கம். தாமஸ் மூர் பார்லிமெண்டிலும் அங்கம் வகித்து ஜனவுரிமைக்காகப் பாடுபட்டான். ஏழாவது ஹென்ரியின் சுயேச்சாதிகாரச் சட்டங்களை மட்டந் தட்டினான். இதனால் பொது ஜனங்கள் அவனைப் புகழ்ந்தனர்; குலாமிகள் இகழ்ந்தனர். அரசன் சினந்தாலும் மூர் அஞ்சுவதில்லை; நேர்மை, உரிமை, கருணை—இவையே அவன் பெருமை. மந்திரி கார்டினல் உல்ஸி ஒருவனே மூரை அறிந்து நேசித்தான். எட்டாவது ஹென்ரி காலத்தில் உல்ஸி முதல் மந்திரியானான். ஹென்றி VIII மூரின் லத்தீன் கவிகளைக் கேட்டு வியந்தான். அன்று முதல் சுக்கிர தசைதான். உல்ஸியும் மூரும், அரசன் புன்னகையில் மூத்துக் குளித்தனர்; செல்

வம் கொழித்தனர். ஆனால் மூர் அரசனுக்கு அடிமையாகவில்லை; செல்வமயக்கில் நேர்மையை மறக்கவில்லை. ஒரு வழக்கில் அரசனுக்கு எதிராகவே நியாயம் பேசி வென்றான். அரசனே மூரின் சட்டத்திறமையைக் கண்டு, தன் சொந்த விவகாரங்களைத் தீர்க்க அவனைச் சமஸ்தான வக்கிலாக்கினான். அரசன் மூரின் மாளிகைத் தோட்டத்திற்குச் சென்று அவனுடன் பேசிக் களிப்பதுண்டு; அவனுடன் கைகோத்து உலாவுவதுமுண்டு. ஏராஸ்மஸ் "நண்பா நீ அரசச்சலுகையின் உச்சியிலிருக்கிறாய்" என்பான். "நண்பா, உச்சியில் ஏற்றிவிட்டே சலுகை உருட்டித் தள்ளுவது வழக்கம்" என்பான் மூர்.

உல்ஸியுடன் மூர் அடிக்கடி அரசனுக்குத் தூதுத்தொண்டு செய்தான். ஆண்டுதோறும் அவன் பட்டம் பதவி உயர்ந்தன. ஸர் தாமஸ் மூரே அரசன் வலதுகை என்று நாடறிந்தது. ஸர் தாமஸ் மூர், கார்டினல் உல்ஸிக்குப் பிறகு லார்ட் சான்ஸலரானான். அரசர் சலுகையின் உச்சத்தில் இப்போது மூர் விளங்கினான்; என்றாலும் தலைநிமிர்ந்தே நின்றான்; தன்னுடன் எப்போதும் சிலுவையை வைத்திருந்தான்; அவன் அரசருடன் சர்ச்சுக்குப் போகும்போது சுவிசேஷ கீதங்கள்பாடி "இறைவா, நான் அரசன் சலுகையில் உயர்ந்தாலும், உன் சிலுவையை மறவேன்; சிலுவை சுமப்பதே இன்பம்" என்பான். இது பல பிரபுக்களுக்குப் பிடிக்கவில்லை. மூர் நேர்மையாகவே மெய்வழியில் தலைநிமிர்ந்து நடந்தான்.

ஹென்ரி VIII ஒரு கலியாணப்பித்தன். அவன் விரும்பினால் மணம்; வெறுத்தால் பிணம்! இன்று விரும்பிய நங்கையை நாளையே வாளால் பலிவைத்து இன்னொருத்தியைக் கட்டிக்கொள்வான். ஹென்ரி தான் மணந்த காதரைனை வெறுத்தான்; தனக்குப் பணிப்பெண்ணாயிருந்த ஆன் போலீனை மணம் புரியத் துள்ளினான்; அதற்காகப் போப்பின் உத்தரவை வற்புறுத்திக் கேட்டான். மூரைத் தன்பக்கம் பேசச் சொன்னான். "மூர், அரசரே, நான் மனச்சாட்சியை இந்தச் சான்ஸலர் பதவிக்காக விற்கமாட்டேன்; நீர் செய்வது அநீதி; ஒரு மனைவி இருக்க, மறுதாரம் கொள்வது கிறிஸ்து தர்மமில்லை" என்று துணிந்து கூறினான். அரசன் "நானே சரி; என்பக்கம் பேசுவாயா அல்லது" என்னுமுன்னே ஸர் தாமஸ் மூர், ராஜிநாமாவை நீட்டினான். சான்ஸலர் ஆடைகளைக் கழற்றியெறிந்தான். "இனி நான் உனக்கும் எனக்கும் மேலுள்ள சர்வ வல்லபனை விண்ணரசனுக்குத் தொண்டு செய்வேன்" என்று சிலுவையைத் தூக்கிக்கொண்டு விடுதலை முழக்கத்துடன் வீட்டிற்கு வந்தான்.

இதற்கு முன்பே அரசன் மூரின் மனைவிக்கு ஆள்விட்டு, கணவன் மனத்தை மாற்ற வேலை செய்தான். அதற்குள் மூர் வந்து "May it please your ladyship, my Lordship is gone' (சீமாட்டியே, என் சீமான் விருது ஒழிந்தது) என்று புன்னகைத்தான்.

அரசன் காமவெறி கோபவெறியானது; தன் கலியாணத்தை எதிர்த்த மூரைக் கொலை செய்யத் துணிந்தான். ஆனால் உலகம் மூரின் நேர்மையை அறியும். பொது ஜனங்களின் மதிப்பை அவன் அதிகமாகப் பெற்றான். அவன்மேல் என்ன குற்றம் சுமத்துவது? ஒரு சூழ்ச்சி ஜோடிக்கப்பட்டது. ஒரு பைத்தியக்காரி, "அரசன் ஆன் போலீனை மணப்பது பிசகு, அநீதி" என்று சொல்லித் திரிந்தாள்; மூரின் தூண்டுதல் மேலேதான் அவள் அப்படிச் சொல்லித் திரிவதாக ஒற்றர் பொய்கட்டி விட்டனர். அரசன் மிரட்டினான்; போப்பை மறுத்துத் தன் மணத்தையும் அதனால்பிறக்கும் சந்ததிகளையும் ஒப்பும்படி வற்புறுத்தினான். மூர் "அரசே, உன் அடிமையாயிருந்த போதே இந்த அநீதிக்கு இணங்காத நான், விடுதலை பெற்ற பிறகு அநீதி செய்வேனா? உன் வழி பிசகு; திருந்து" என்றான். அரசன் "சாவாய் உஷார்" என்றான்.

"அரசே நான் இன்று சாவேன், நீ நாளைச் சாவாய்" அவ்வளவுதானே என்றான் மூர்.

"இந்த ராஜத் துரோகியை அடை சிறையில்" என்றான். உடனே மூர் பயங்கரமான கோபுரச் சிறையில் (Dark Tower) வருந்தினான், நலிந்தான், மெலிந்தான்! அப்போதும் அவன் மனம் இறைவனிடமே சென்றது. வாய் தூய கீதம் பாடியது. அரசன் அழிவழக்குத் தொடுத்து, மூரைக் கொலைசெய்யும்படி தீர்மானித்தான். கொலையாளிகூட அஞ்சினான்; நாடோ நடுங்கியது.

"நண்பா, நீ உன் கடமையைச் செய்; இதோ நானே கண்ணைக் கட்டிக் கொள்ளுகிறேன். இரு என் தாடியை ஒதுக்கிக் கொள்கிறேன். அது உன் வாளைத் தடை செய்யாதிருக்கட்டும். இதோ தயார்; அப்பனே திட்டு; இந்தத் துன்பக் கொடுங்கோலில் உடல் வைத்திருப்பதைவிட இறைவன் திருவடியில் உயிர் வைத்திருப்பது நலம். இறைவா! வாள் முனையில் உடலை உதறி உன்னிடம் வருகிறேன். உலகே மகிழ்ந்திரு. உயிர்காள் அமைதி! இறைவா நீயே புகல். சாந்தி சாந்தி சாந்தி.!!!"

கொலைவாள் மூரின் உடலைப் பிரித்தது; அவன் உயிர் இன்று கோடி மக்களின் உள்ளத்தில் துடிக்கிறது. உலக சரித்திரத்திலேயே மூரின் கொலை பயங்கரமான அநீதி; அது இங்கிலாந்துக்கே வெட்கம்.

இத்தகைய தியாகியின் உள்ளத்திலே தான் சமதர்மம் உருவானது.

சமதர்மம் என்றால் என்ன?

வானம், மழை காற்று வெயில் தருகிறது. இவற்றால் பூமி செழிக்கிறது. இவை எல்லாருக்கும் சமமாக உரியவை. ஏழை பணக்காரன், வெள்ளை, கறுப்பு, இந்து, கிறிஸ்தவன், இஸ்லாமியன், பார்ஸி என்ற வேறுபாடில்லை. எல்லாருக்கும் சூரியன் ஒளிதரும், வானம் மழைதரும், யார் உழைத்தாலும் நிலம் பயிர்தரும், அதை உழைப்பால் அடைந்து உண்டு உலகில் சம உரிமையுடன் வாழ எல்லா மனிதருக்கும் தகுதியுண்டு. இதுதான் சமதருமத்தின் அடிப்படையான கொள்கை. மனிதனுக்கு மனிதன் அடிமையில்லை. சாதிமத சாத்திரகோத்திர நாடுநிற வேறுபாடில்லை. எல்லா மனிதர்களும் பஞ்சபூதக் கூண்டில் உயிர்க்கும் ஆன்மாக்களே. எல்லாரும் ஓரே குலம், ஓரே சமுதாயம், சரி நிகர் சமானம்.

எல்லாரும் ஓர்குலமென் றெண்ணி உலகினிலே
பொல்லாத வேற்றுமையைப் போக்கு

இதுதான் சமதர்மத்தின் தத்துவம். மனித சமுதாயம் முழுதும் சமதர்ம சங்கமே. இந்தச் சங்கத்தில் சேர்ந்தவர் எல்லாருக்கும் தொழில், உணவு, சுகாதாரம், அரசியல் சுதந்தரம், கல்வி ஆகிய எல்லாம் சம நோக்கத்துடன் கிடைக்கும்.

சமதர்மத்தின் வளர்ச்சி

1518-ஆம் ஆண்டு ஸர்தாமஸ் மூரின் யுடோபியாவிலிருந்து உதித்தது. 428 ஆண்டுகளாக உலகில் வளர்ச்சி பெற்று வருகிறது. பொதுவுடைமை சமதர்மத்திலிருந்தே காரல் மார்க்ஸ் என்பவரால் 1865-ஆம் ஆண்டு உருவானது. யுடோபியா உலகிற் சிறந்த நூல்களுள் ஒன்று. உலகம் எல்லாருக்கும் பொது. சாதிமத

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 **SUNADRI ELIXIR**
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 **PHOSPHORUS OIL**
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 **MASTANA PILLS**
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 **DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA**
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

வேறுபாடெல்லாம் பொய். எல்லாரும் உழைத்தே உண்ணவேண்டும். ஆறு மணி நேரம் பாடுபட்டே தினம் பிழைக்க வேண்டும். யாரும் சோம்பேறியாயிருக்கக் கூடாது. பிச்சை, கொள்ளை, பேராசை இவை ஒழியவேண்டும். வறுமை, மடமை அடிமைத்தனம் இவை மனிதரை நசுக்காமல் எல்லாரும் சம உரிமையுடன் வாழவேண்டும். ஆண், பெண் இருபாலாரும் தாராளமாகக் கல்வி கற்கவேண்டும். பிழைப்பிற்கு அவரவர் திறமைக்கேற்ற தொழில் பழகவேண்டும். கலைகளைக் கற்கவேண்டும். வாழ்வை அழகு செய்யவேண்டும். சுகாதார வழியில் எல்லாரும் நன்றாக நீடூழி வாழ வேண்டும். மதக்கட்டுப்பாடில்லை. அவரவர் மனச்சாட்சிக்கு உண்மையாகப் பிறருக்குத் தீமையில்லாமல் உலகுக்கு உபகாரமாக வாழவேண்டும். போட்டி பொறாமைப் போர்கள் சமதர்ம அரசியலில் இல்லை. எல்லாரும் அகமகிழ்வுடன் அமைதியாக வாழலாம்.........

> உழைத்து விளைத்துண்ண உவந்தால் உலகம்
> செழித்து வளரும் தினம்

என்பதை யுடோபியா இனிய கதையாக விளக்கியது. இக்கதை பல அறிவாளர் உள்ளத்தைக் கவர்ந்தது. இதை முதலில் சோதித்துப் பார்த்தவர் ஒரு பிரெஞ்சுக்காரர். அவர் பெயர், பூரியே (F.C. Fourier 1772—1837). இவர் சமதர்ம சமுதாய சங்கம் ஏற்படுத்தி, தொழில் முறை வகுத்து அரிய பொதுநலம் செய்தார். ராபெர்ட் ஓவன் என்பவர் (1771—1858). பெரிய துணி மில் ஏற்படுத்தித் தொழிலாளருக்கெல்லாம் சமவுரிமையும் லாபத்தில் நல்ல பங்கும், கல்வியும், சுகாதாரமும் அளித்து, சமதர்ம சங்கம் நடத்தினார். இவரே ஐக்கிய நாணயச் சங்கம், தொழிற் சங்கம், வணிகர் கூட்டுறவு முதலியவற்றை நாட்டி, ஏராளமான ஏழைகளுக்கு உதவி செய்தார், 1848-ஆம் ஆண்டுதான் சமதர்மம் அல்லது ஸோஷலிஸம் அரசியல் உருவம் பெற்றது. அதை உருவாக்கினவர் புருதன் (Proudhon) என்ற பிரெஞ்சு சமதர்மி. இவர் 'சொத்துச் சேர்ப்பதும் திருட்டுத்தனமே. எல்லாரும் நன்றாக உழைத்த பலனையே உண்ணவேண்டும். பணத்தை மூட்டை கட்டாமல் பண்டமாற்றினால் செம்மையாக வாழவேண்டும்' என்றார். இதற்காக இவர் ஐக்கிய பண்டகசாலைகள் நாட்டி அரிய தொண்டு செய்தார். லூயி ப்ளான் [Louis Blane) என்னும் பிரெஞ்சுக்காரர் தேசியத் தொழிற்சாலைகள் நாட்டித் தொழிலாளருக்கெல்லாம் சம உரிமை தந்தார்.

இந்தச் சமயமே காரல் மார்க்ஸும் ஏஞ்செல்ஸும் சமதர்மக் கொள்கைகளை ஐரோப்பா வெங்கும் பரப்பிவந்தனர். மார்க்ஸ் ஜெர்மன் புலவர்; பொருளாதார நிபுணர்; பிறவிச் சமதர்மி; கட்டென்பதை வெட்டும் வீரர்; வறுமையில் வாடியவர்; எத்தனையோ பத்திரிகைகள் தொடங்கி அரசாங்கச் சட்டத்தால் ஒடுங்கக் கண்டவர். இவர் முதலாளிகளின் பணத் திமிரை ஒழித்துத் தொழிலாளிகளுக்கு எல்லா உரிமையுந்தர, பிரான்ஸிலும், ஜெர்மனியிலும் புரட்சி நடத்தி, நாடு கடத்தப்பெற்று, லண்டனில் வசித்தார். அங்கே பதின்மூன்றாண்டுகள் ஆராய்ந்து, காபிடல் என்ற அரிய நூலை எழுதினார். பாட்டாளிகள் பலனைச் சமமாக உண்ண உரிமையுண்டு. முதலாளிகளின் சுரண்டல் கொடுமையை ஒழித்தால், பணச்செருக்கில்லாமல் எல்லாரும் உழைத்துப் பிழைக்கலாம். சாதி மதம் எல்லாம் மன மயக்கம். மனித சமுதாயமெல்லாம் ஒரே தொழிலாளர் கூட்டம். தொழில் செய்யாதவனுக்கு உண்ண உரிமையில்லை.

> பாடுபட் டோருக்குப் பாட்டின் பயனெய்தில்
> நாடுவிட் டோடும் நலிவு.

என்பதே மார்க்ஸியம். மார்க்ஸ் தமது கொள்கையை முதலில் சமதர்ம அறிவுடைமை (Scientific Socialism) என்றே அழைத்தார். சமதர்மம் என்ற பெயராலேதான் பிரசாரமும் நடத்தினார். 1865ல் அதற்கு கம்யூனிஸம் (பொதுவுடைமை) என்ற பெயரிட்டு மகாநாடு கூட்டினார். மார்க்ஸின் வழியைப் பின்பற்றியே லெனின் ரஷ்யாவைப் பொதுவுடைமைக் குடியரசாக்கிச் செங்கொடி நாட்டினார். அவருக்குச் சமதர்மமே மூச்சு. பூமி எல்லாருக்கும் பொது. அதைச் சமமாக அனுபவிக்க எல்லாருக்கும் சம வுரிமையுண்டு என்பதே அவர் கொள்கை. அவருக்குப் பிறகு ஸ்டாலின் பெரும்பாலும் சமதர்மக் கொள்கை கொண்டு தொழிலரசை நடத்துகிறார்.

இரண்டும் ஒன்றே

> புவிமகள் ஈந்தபயன் போதிய மட்டும்
> அவரவர் துய்த்தல் அறம்

என்பதுதான் இதுகாறும் சொன்ன பெரியார் கருத்தாகும். சமதர்மம் பொதுவுடைமை இரண்டும் அடிப்படையில் ஒன்றே. இரண்டும் மனிதரை ஒரே சரிநிகர் சமானமாக மதிக்கும். இரண்டும் சுரண்டல் தந்திரங்களை அடியோடொழித்து, எல்லாரும் உழைத்துண்ணச் செய்யும். இரண்டும் அக்காள் தங்கைபோல ஒட்டுறவாயிருப்பன.

இரண்டும் பொதுநலத்திற்கு இரண்டு கண்களும் கைகளும், மூச்சுப்பைகளும் போன்றவை. பொதுவுடைமை புரட்சியால் உரிமையை நாட்ட முயலும். சமதர்மம் அமைதியான, நிதானமான, பிரசாரத்தாலும், ஆக்கவேலைகளாலும் இரத்தம் சிந்தாமல் மனித சமுதாயத்தைச் சகோதரக் கூட்டமாகக் கருதி, ஒன்ருக்க முயலும். கொள்கையில் பேதமில்லை. இரண்டும் அபேதமான சமத்துவ வாதங்களே. பிரெஞ்சுக் குடியரசின் மூன்று நாடிகள் சமத்துவம் சுதந்தரம் சகோதரத்வம். அதே கொள்கையே பொதுவுடைமைக்கும் சமதர்மத்திற்கும் உரியதாகும். ஆதலால் இரண்டு கட்சியினரும் சேர்ந்திருந்தே அமைதியாக ஜனசேவை செய்யலாம்.

பிரான்ஸில்;

ஐரோப்பாவின் நாகரிகம் பிறந்தது பாரிஸ் நகரிலேதான். உலகிற்கே ருஸோவின் (Rousseau) சமுதாய ஒப்பந்தமே (contract social) சுதந்திர வழிகாட்டியது. அதன் கொள்கையே அமெரிக்காவைக் குடியரசாக்கியது. அதுவே பிரான்ஸை யும் குடியரசாக்கியது. உலக சுதந்தர இயக்கங்களுக்கெல்லாம் நடுநாயகமாகவும் தாயகமாகவும் விளங்கியது பிரான்ஸ். மார்க்சும் லெனினும் பிரான்ஸில் எழுச்சி பெற்றனர். பிரான்சுதான் சமதர்மத்திற்குச் சரியான உருத்தந்து போற்றியது. பிரான்சுக் குடியரசில் மூன்று கட்சிகள் உண்டு. ஒன்று வலது கட்சி (Rightists) இதில் பெரிய தொழில் வாணிகம் செய்யும் செல்வர் அமர்ந்திருப்பார்கள். இரண்டாவது நடுக்கட்சி (Parties of the centre). இதில் சமதர்மிகளும் குடியரசு வாதிகளும் அதிகம். மூன்ருவது மிகப்பெரிய இடது கட்சி (Leftists). இதிலேதான் சமதர்மிகளும் பொதுவுடைமைக்காரரும் அதிகம். இவர்களே ஹிட்லர் பூதம் விளங்கிய பிரான்ஸை இரகசியப்புரட்சியால் மீட்டு (Leftists) நான்காவது குடியரசை நாட்டியவர்கள். இன்று பிரான்ஸில் இந்த இரண்டு கட்சிகளும் சேர்ந்து பொதுநலம் புரிகின்றன. பிரான்ஸை விடுதலைசெய்த தளவாய் கோலேயே இக்கட்சிகள் பதம் பார்த்து மூலையில் ஒதுக்கிவிட்டன. இவற்றின் சக்தி மிகப் பெரிது. பாஸிஸத்தையும் நாசிசத்தையும் குப்புறத் தள்ளிக் குழிவெட்டிப் புதைத்தவை இக்கட்சிகளே. ஐரோப்பா எங்கும் இக்கட்சிகளுக்கே செல்வாக்கு. இங்கிலாந்தில் சமதர்மக் கட்சிக்கே செல்வாக்கு. அதுவே இன்று மந்திரி சபையை வகித்து சுயேச்சாதிகாரிகளையும் சுரண்டல் அணுத்தைகளையும் முதுகுக்கு மண்காட்டி ஓட்டியது. இந்தக் கட்சிதான் இன்று பெதிக்லாரென்ஸ் தலைமையில் காபினெட் தூதாக வந்து இந்தியாவுக்கு விடுதலை தர முயல்கிறது. இப்போது பிரான்ஸில் குடியரசுத் தலைவர் புவான் இந்தக் கட்சித் தலைவரே. உலகெங்கும் சமதர்ம சங்கங்கள் எழுந்து வேலை செய்கின்றன.

இச்சங்கத்தின் நோக்கம் என்ன?

1 சாதி மத பேதமில்லாமல் மனிதரை மனிதராகச் சமநோக்குடன் மதிப்பது.

2 அரசியலில் எல்லாருக்கும் தகுதிக்கேற்ற சம உரிமை தருவது. ஜனநாயகமே நாடாள்வது.

3 ஜனங்கள் வறுமையில்லாது பிழைக்கத் தொழில் முறைகளை வகுத்து, தொழிலாளருக்குப் போதிய உழைப்பும் பிழைப்பும் சௌகரியங்களும் தருவது.

4 நாட்டை வாட்டும் பஞ்சநிவாரணத்திற்காக உணவுப் பங்கீடு ஒழுங்காகச் செய்து, உள்ளதை எல்லாரும் உண்டு பிழைக்கச் செய்வது.

5 எல்லாருக்கும் நல்லமுறையில் காலத்திற்கேற்ற கல்விதருவது. எழுதப்படிக்கத் தெரியாத ஆண் பெண் இல்லையென்ருக்குவது.

6 ஊரில் தொத்துநோய்களும் அழுக்கு நோய்களும் இல்லாமல் சுகாதாரத்திற்காக எல்லா வழிகளும் செய்வது. ஊரில் நீர்ப்போக்கிற்குச் சாக்கடை கட்டி, மல அறைகள் கட்டிக் காற்றைச் சுத்தம் செய்வது. தெருக்களை ஆபாசமின்றிச் சுத்தமாக வைத்திருப்பது. சுகாதாரப் பிரசாரம் செய்வது.

7 எல்லாருக்கும் நல்ல முறையில் வைத்திய உதவி தருவது. துண்டுப்பிரசுரங்களால் நோயில்லாது வாழும் முறையைப் பரப்புவது.

8 ஏழைகள் கண்ணீரைத் துடைத்துப் பிச்சைக்காரர் தொல்லையை நீக்கி, ஒவ்வொருவரையும் பாடுபட்டுண்ணச் செய்வது சமதர்மத்தின் மூலாதாரக்கொள்கையாகும். இதற்காக ஏழையில்லம் (Poor Home) அமைப்பது. அதில் ஊர் அனாதைகளும் பிச்சைக்காரரும் மானமாகத் தொழில் செய்து உண்டு பிழைக்க ஏற்பாடு நடக்கும்.

9 சமதர்மம் தீவிரமான புரட்சியியக்க மன்று; அமைதியான சீர்திருத்த இயக்கம். மனிதசமுதாயத்தில் நஞ்சுபோலப் படர்ந்து பிரிவினையாக்கும் சாதி மதத்திமிர், பெண்ணடிமை, தீண்டாமை, இனவேற்றுமை மனவேற்றுமைகளைப் போக்கி, எல்லாரும் சரிசமானராக வாழச் சமதர்ம சங்கம் பிரசாரம் செய்யும்.

10 பொதுஜனங்களுக்கு ஆடைஉணவுச் சௌகரியங்கள் எளிதாகக் கிடைக்க ஐக்கிய நாணயச் சங்கம் நடத்துவது இச்சங்கத்தின் பணியாகும். ஐக்கிய நாணயச் சங்கம் விவசாயிகளுக்கும் தொழிலாளருக்கும் சிக்கன வாழ்வைப் போதிக்கும். நன்ருகப் பாடுபடும் தொழிலாளருக்கு முதல் உதவும். சிறு வட்டிக்குக் கடன் தந்து சிறுகச் சிறுகப் பெறும். ஐக்கிய பண்டகசாலை நடத்தி உப்பு முதல் கற்பூரம் வரையில் கோதுமை அரிசி பருப்பு விறகு எல்லாம் பொதுஜனங்களுக்குப் பங்கிட்டு விற்கும். ஊரில் கிடைக்காததை வெளியிலிருந்து வாங்கியுதவும். இன்னும் பொதுஜன நன்மைக்கான எல்லாத் தொண்டுகளையும் சமதர்ம இயக்கம் செய்துவருகிறது. இன்று அரசியலில் சமதர்மமே மிகச் சிறந்த தத்துவமாகும்.

நமது பிறப்புரிமை காத்திடும்—மிக
நல்ல புதியசக்தி பூத்திடும்
சமதர்ம சங்கத்திற் சேருவோம்—அதில்
சகலர்க்கும் இன்பத்தைக் கோருவோம்.

"ஸித்தாந்தத்தின் முடிவு"

டாக்டர் வே. ராகவன்

"**வா**ன்னா, திரும்பிப் போயிடுவோம்; எத்தனை நாழி காத்துண்டுருக்கிறது; பிளாட்பாரத்திலேயே ரெப்ரஷ்மண்ட் ரூமுலே எதயாவது இத்தனை தின்னுட்டு ரயில் ஏறுவோம்" என்றான் அவஸர ஸுப்பு.

"ஏன் இப்படி இருப்புக் கொள்ளாம தவிக்கிறே? அதான் தப்பு; வாழ்க்கேலே நிதானமாப் போகனும்; வந்துருக்கே, புது இடம், புது மனுஷன்; பலதைப்பாத்துண்டு. கண்டதைக் கேட்டதை ஸாவகாசமா அசை போட்டுண்டு, உலக ரஸத்தை அனுபவிக்கனும். லீவுதானே, இப்ப என்ன ஆகனும் ஊருக்கு ஓடி?" என்றேன் நான்.

"ஸரியாப் போச்சு போ? லீவுனா எங்கயாவது போய் ஹாய்யா குளுந்த இடத்தலே இருப்பா? இந்த 115° கொதிக்கர அனல்லே நன்னா என்னை இந்த குண்டூருக்கு இழுத்துண்டு வந்தே! எள்ளுதான் எண்ணைக்குக் காயனும். எலிப் புழுக்கை எதுக்குக் காயனும்?" என்றான் ஸுப்பு மேலும்.

"வா, இப்படி கொஞ்சம் உலாவி ஊரைப் பார்த்துட்டு வந்தூடலாம்; அதுக்குள்ள நம்ப ஸ்னேகிதனும் வந்தூடுவன்" என்றேன்.

"போரும் ஊரைப் பார்த்தது; ஒரு நிமிஷத்துக்கொரு ஸோடா பாட்டில் ஒடை படரதும், தாகசாந்திப் பண்ணிக்கரதும் தான் இந்த ஊர்லே காக்ஷி; குண்டூரின் ப்ரபல வியாபாரமோ தொழிலோ என்னானு பரீக்ஷைலே கேள்வி கேட்டா 'ஸோடா'னு தாராளமா எழுதலாம்" என்று சுப்பு முறையிட்டுக் கொண்டிருக்கும்போதே, நான் சற்று உட்பக்கம் நோக்கி, ஒரு புறமாய் உள்ளேயே காரியமாயிருக்கும் நண்பன் மனைவியிடம் "அம்மா, ஸூர்யநாராயணா வந்ததும் பட்டணத்திலேந்து............ வந்திருக்கான்; வெளியே கொஞ்சம் சுத்திட்டு திரும்பி வரேன்னு சொல்லிட்டுப் போனான்னு சொல்லுங்கோ" என்று சொன்னேன்.

என் பெயர் காதில் விழுந்ததும் சட்டென்று எழுந்திருந்தாள் என் நண்பனின் மனைவி. காம்ராவுள் கதவைத் திறந்துவிட்டாள்; உள்ளே வந்து உட்காரச் சொன்னாள்; ஒரு வெள்ளிக் கூஜாவில் ஜில் என்று பானையில் போட்ட 'மஞ்சி நீடு' கொண்டு வந்து வைத்துவிட்டு, பளிச்சென்று ஏதோ ஒலி ஒன்று பாய்ந்த முகத்தோடு, கொஞ்சம் உட்கார்ந்திருந்தால் தன் கணவர் வந்து விடுவார் என்று தெரிவித்துக்கொண்டாள்.

குளிர்ந்த தீர்த்தத்தைக் குடித்துக் கொண்டு நாங்கள் இருவரும் உள்ளே உட்கார்ந்து களைப்பாறினோம். ஸுப்பு ரஹஸ்யமாய் "என்ன பேரைச் சொன்னதும் மந்த்ரம் போல வேலை செய்ரதே?" என்று கேட்டான். இதற்குப் பதிலுரைக்காமல் நான் போவதற்கு ஆதுரப்பட்டுக்கொண்டிருந்த ஸுப்புவைப் புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருக்கும்போதே என் நண்பன் ஸித்தாந்தம் ஸூர்யநாராயணா வந்துவிட்டான்.

"..........னா! என்ன ஆச்சர்யம்! எதிர்பாராத ஸந்தோஷ ஸம்பவம் இது! ரொம்ப நாழியாச்சோ வந்து? மன்னிச்சுக்கனம், கொஞ்சம் வேலையாப் போயிருந்தேன்; ஒரு கடிதாசு போடப்படாதோ வரேன்னு; தந்திக் கொடுத்திருந்தா ஸ்டேஷனுக்கு வந்திருப்பேனே? இதோ வந்தூட்டேன், கொஞ்சம் காபி கொண்டரேன்" என்று விடாமல் தனக்கிருந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டு, ஒரே உபசாரமாய் என் நண்பன் ஸூர்யநாராயணா என்னை வரவேற்றான்.

"இதோ, காபி; நான் வரத்துக்கு முன்னாடியே என் பத்னி காபி தயார் செய்துவிட்டா; மொதல்லே சட்டுனு அடையாளம் புரியவில்லையாம் அவளுக்கு; ரொம்ப வருஷமாச்சோல்யோ; பேர் சொன்னதும் அவளுக்கு ஆனந்தம் தாங்கவே இல்லே" என்று மேலும் மூச்சுவிடாமல் ஸூர்ய நாராயணா பேசிக்கொண்டே இருந்தான். என்னுடன் மற்றொரு நண்பன் வந்திருக்கிறான், அவன் யார் என்று அறிமுகப் படுத்திக்கொள்ள வேண்டுமென்றுகூட அவனுக்குத் தோன்றவில்லை. நான் அறிமுகப்படுத்தின பிறகும் முன்போல் தன் உபசாரத்தையும் மகிழ்ச்சியையும் பெருக்கிக் கொண்டே போனான். ஸுப்புவுக்கு ப்ரமிப்பாய் இருந்தது.

"போரும் ஸூர்ய நாராயணா உபசாரங்கள்ளாம்; நமக்குள்ளே என்ன வேண்டி

லக்ஸ்
டாய்லட் சோப்பினால்
அழகுபடுத்தும்
சுலபமானமுறையை
ராஜகுமாரி
சொல்கிறார்
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின் மேல் தடவுகிறேன்...
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்..
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினால் முகத்தை துடைக்கிறேன்
LUX TOILET SOAP
LUX
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்
மேனியை அழகுபடுத்திக் கொள்வதில் தேர்ச்சிபெற்ற எல்லா சினிமா நட்சத்திரங்களும், மென்மலரின் இதழ் போல் மிருதுவானதும் களங்கமின்றி பளபளப்பானதுமான சருமம் ஏற்பட லக்ஸையே நம்பலாம் என்றறிவார்கள். அதன் சுகமளிக்கும் வீரியம் வாய்ந்த நுரை சருமத்திற்குள் புகுந்து தீங்கை விளைவிக்கும் மாசு மறுக்களை சுலபமாக சுத்தம் செய்து விடுகிறது. ராஜகுமாரியின் அழகு முறையை நீங்களும் 30 நாட்கள் கையாளுங்கள்—பிறகு அதன் சுகமாக சுத்தம் செய்யும் தன்மையை கண்டு மகிழ்வீர்கள்.
LTS. 136-23-40 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

ருக்கு? நாங்க அவஸர காரியமா ராஜ மஹேந்த்ரம் போயிட்டு மதராஸ் திரும்பிப் போயிண்டுருக்கம்; ரயில்ல வரபோது யாரோ ஒத்தர் பெஜவாடாவுக்கு பக்கத்துலே 'பானக நரஸிம்மன்'னு ஒரு மூர்த்தி இருக்கிறது; அந்த மூர்த்தியின் முகத்துலே சொன்ன அளவுக்கு பாதி பானகத்தை விட்டவுடனேயே ரொம்பிப் போயிடும்னு ரொம்ப அதிசயமா வர்ணிச்சுண்டு இருந்தார். அதுஎன்ன அத்புதம் என்றுபாத்துட்டு போகலாமேனு நாங்க ரெண்டுபேருமா மங்களகிரி வந்தோம். மங்களகிரிவரைக்கும் வந்ததும், நீ இங்க இருக்கரது நெனவு வந்தது; ஒன்னைப் பாக்காம போகப்படாதுன்னு வந்தேன்; இன்னிராத்திரிக்கே மெயில்லே தெனாலி வழியா மதராஸ் போகணும்," என்று திடீரென நான் வந்ததின் வரலாற்றை ஸூர்ய நாராயணாவுக்குச் சொன்னேன்'

'இப்படி அவஸரமா வந்துட்டுப் போகலாமா? நாளை ராத்திரி மெயில்லே போய்க்கலாம்; ஸரியா நாலு வருஷமாச்சு பாத்து" என்றான் ஸூர்ய நாராயணா.

"ஸரிதான்; போன ஜனவரி மாஸம் போட்ட கடுதாசுக்கு பதிலே இல்லே; நேரே கண்டதும் நல்ல உபசாரமிது?" என்று சற்று குத்திக்காண்பித்தேன்.

"என்ன நீயே இப்படி குத்திக் காண்பிச்சா நான் என்னபண்றது? இங்க நான் இருக்கர நிலமையே ஒனக்குத் தெரியாது; அண்ணாவுக்கு ஊர்லே உடம்பு ஸரியால்லேனு ரிடயர் ஆயிட்டார்; அவர் புள்ளையைப் படிக்கவச்சு, பூணூல் போட்டேன்; தங்கைக்கு வைத்யம்; தம்பிக்கு காலேஜ் படிப்பு, என் ஆபீஸ் தொல்லை தொந்தரவுகள்—ஏன் கேக்கரை போ? இந்த சண்டை காலத்துலே சம்பளமே போரல்லே; ஒரே கடன்; இவ்வளவு கஷ்டத்துலே ஒண்ணே ஒண்ணுதான் என்னையும் இந்த வீட்டையும் தாங்கிண்டு வரது—என் பத்னி; "க்ஷிதி க்ஷமா" என்று வால்மீகி சொன்னதுபோல அவளுடைய பொறுமையும், குணமும், ஒழைப்பும் இல்லேணா என் கதி அதோகதியாப் போயிருக்கும். அவளுடைய பெருமையை முழுதும் இப்பதான் தெரிஞ்சுண்டேன்; அதுக்கு மூலகாரணமாயிருந்து, என் புத்தியை ஸரிப்படுத்தினதுக்கு ஒனக்குத்தான் என் நன்றியை மொதல்ல செலுத்தனம்" என்று கன்னத்தில் இரண்டு போட்டுக்கொண்டான்; கண்ணில் நீர் ததும்பிற்று. ஸூர்ய நாராயணா எழுந்து நமஸ்காரமும் செய்துவிடுவான் போலிருந்தது. உடனே நான் பேச்சை மாற்றினேன்.

"ஸரி, உபசாரத்தை சமயல்லே காண்பிக்கச்சொல்லாதே உன் அகமுடையாளை. ஆந்த்ர சமையலின் காரம் நமக்குத் தாங்காது" என்றேன் நான்.

"அது எனக்குத் தெரியாது; எல்லாம் அவளிஷ்டம்; உன் ஸம்பந்தமாய் ஏதாவது பேச்சு வந்தால் அவள் தேவதா விசுவாஸமாய் இருப்பாள்," என்றான் ஸூர்ய நாராயணா.

சற்றுநேரத்திற்கெல்லாம் நாங்கள் சாப்பாட்டை முடித்துக் கொண்டோம். அவர்களுடைய சட்னி, பச்சிடி, ஆவக்காய், காரமில்லை என்று போட்ட கூட்டு—ஒன்றின் காரமும் எனக்குத் தாங்கவே இல்லை; ஆவக்காயைப் பார்த்ததுமே கண்ணில் ஜலம் வந்துவிட்டது. ஸுப்பு மட்டும் ஒரு திட்டுத் திட்டி விட்டான். ஸூர்ய நாராயணா தெனாலிவரைக்கும் வந்து மெயிலில் எங்களை ஏற்றிவிட்டான்.

* * *

ரயில் கொஞ்சதூரம் சென்றதும் அதுவரைக்கும் நானும் ஸூர்ய நாராயணாவும் பழகினதையும், பேசியதையும் கண்டும் கேட்டும் மலைத்து, மௌனமாய் இருந்த ஸுப்பு கேட்டான்:

"ஏன்பா, நீ என்ன ஆசாரிய புருஷனாயிட்டயா என்ன? ஒன்னைக்கண்டா இவன் இப்படிப் பழகரான்?" என்று.

"ஆசாரிய புருஷனாவது, சிஷ்யனாவது; ஒன்னைப்போல அவன் ஒரு ஸ்நேகிதன்" என்றேன் நான்.

"யார் இவன்? எல்லாம் ஒன்னாலேதான் இங்கரான்; அகமுடையாளை ஸ்தோத்ரம் பண்ரான்; திடீர்னு ஒன்னைப் பாத்து கன்னத்துலே போட்டுணுட்டானே!" என்று வியந்தான் ஸுப்பு.

"ஒண்ணுமில்லேடா, கொஞ்சம் வெகுளி, மனோபாவம் ஜாஸ்தி; தோணினத்தை அப்படியே செஞ்சுடுவான்; emotional type" என்றேன்.

"யார், என்னனு சொல்லுனா, மறைக்கரையே?" என்று நிர்ப்பந்தித்தான் ஸுப்பு.

"ஸரி, பித்ரகுண்டா வரைக்கும் தூக்கங் கடையாது; சொல்ரேன் அவன் கதையை; நல்ல மனஸோடமட்டும் sympathetic ஆக் கேட்டுண்டு வா" என்றேன்.

நாங்கள் மானிடப் போக்கை விட்டு விலங்கினம்போல் ஜன்னல் வழியே குதித்தேறிய 'இண்டர் கம்பார்ட்டுமெண்டில்' நுழைந்ததும் சற்று கலவரம்போல் வாக்குவாதம் ஏற்பட்டு, சிறிது நேரத்திற்கெல்லாம் அடங்கிப்போயிற்று. நடுநிசி; பற்பல விகாரக் கோலங்களில் கோணலும் மாணலுமாய், வாய் பிளந்தவரும், குரட்டை விடுபவருமாய் ப்ரயாணிகள் தூங்கினர். எதையும் பொறுத்து, எந்த நெருக்கடியிலும் எப்படியோ ஸமாளித்துக்கொண்டு, வஸதி இல்லாததையும் வஸதி செய்துகொள்ளும் நம் மக்களின் மேன்மை அந்தக் கம்பார்ட்மெண்டில் உறங்குபவரை நோக்கினால் நன்ருய்ப் புலப்படும். அரையின் முக்கால் பாகத்தை ஏழெட்டு இந்திய ராணுவரும் அவர் காகி மூட்டைகளும் நிரப்பியிருந்தன; மிகுதியிருந்த கால் பாகத்தில் பதஞ்ஜலி மஹரிஷி சொல்லாத, செய்யமுடியாத, ஆஸனங்களைப் போட்டு, ஆழ்ந்த நித்ரா ஸமாதியில் பல மக்கள் தென்பட்டனர். நாங்கள் இருவரே விழித்துப் பேசிக்கொண்டு வந்தோம்.

* * *

"இன்று பதினைந்து வருஷத்துக்கு முன்னால், ஒனக்கு என்னை அப்போது தெரியவே தெரியாது; இந்த ஸூர்ய நாராயணனையும் நேரே தெரியாது எனக்கு; ஆனால் எங்கள் கோஷ்டியில் இவனை அடிக்கடி சந்திக்கும்படி நேரிட்டது. இங்கிலீஷ்லே வேகமாப் பேசுவன்; இப்போ மூஞ்சி பெருத்துப் போய், ஆள் ஒரு தினுஸாப் போய்ட்டான்."

"ஆமாமான்; உச்சன் தலேலேகூட வழுக்கை மார்ஸ்ஸுக்கு (Mars) ஸர்ச்லைட் (Searchlight) அடிக்கும் போல இருக்கு"

"அப்போ அஸாமி நன்னயிருப்பன்; ஒத்த நாடியா, சுத்தமா டிரஸ் பண்ணிண்டு வருவன்; பேசரபோது, சிரிக்கரபோது, கன்னத்திலே ஒரு குழி விழும்; அந்தக் குழிதான் அவனைக் கெடுத்தது."

"என்ன, குழிலே தள்ளிடுத்தா? சொல்லு கதையை."

"இப்பன தீனமா, அடக்கமாப் பேசரான்; அப்போ 'படா ஸ்டைல்'; சீமைலேந்து வந்த புதிசு."

"ஸரிதான், 'இங்க்லண்ட்—ரிடர்ண்ட்' (England returned)னு சொல்லு; சீமைக்குப் போயிட்டு வந்தவன இப்படி பெரிய வேலை ஒண்ணுமில்லாம இந்த குண்டூர் காளவாயில் வெந்துண்டுருக்கான்?

"அவன் அதிர்ஷ்டக் குறையே அவனைக் காப்பாத்தித்து; லெளகிக பதவியிலே அவனுக்கு ஏற்பட்ட நஷ்டம் ஆத்மிக நிலையில் அவனுக்கு பெரும் லாபமாய் முடிந்தது. சீமையிலேந்து டிகிரியோடு வந்தவன், அப்படி இருக்கலாம், இப்படி இருக்கலாம்னு திட்டம் போட்டுண்டு கோட்டை கட்டிண்டிருந்தான்; வருஷம் ஒண்ணாச்சு, இரண்டாச்சு. அஞ்சும் ஆச்சு, வேலை ஒண்ணும் ஸரியா ஏற்படலே."

"ரொம்பப் பணம் இருந்தவன்போல இருக்கு? இல்லேன, மாமனர் அனுப்பினரோ என்னமோ? கல்யாணம் முன்னடியோ, பின்னடியோ?"

"ஸித்தாந்தம் ஸூர்யநாராயணன்னு இவன் முழுப்பேர். அந்த 'ஸித்தாந்தம்'ங்கிர 'இண்டிப்பேரு' என்ன தெரியுமா? அவனுடைய குடும்பம் ஒரு பெரிய ஜ்யோதிஷர்களின் குடும்பம்; மஹாராஷ்ட்ர தேசத்திலிருந்து ஆந்த்ர தேசத்திற்கு விஜயநகர காலத்தில் வந்தது; அவர்கள் குலத்தில் ஸூர்ய நாராயணன், பாஸ்கரன், திவாகரன் என்று எல்லாம் கிரஹபதியான ஸூர்யதேவனின் பெயராகவே இருக்கும்; ஸர்வமான்யம் பெற்றவர்கள். 'ஸூர்யநாராயண' வை விட்டு விட்டுச் சீமையிலிருந்த போதும் திரும்பி வந்த போதும் "ஸித்தாந்தம்" என்றே தன் பேரைக் குறுக்கி வைத்துண்டுருந்தான். நான் மட்டும் ஸூர்யநாராயணா என்றுதான் கூப்பிடரது. தன் ஸொத்து, மாமன் பணம் எல்லாவற்றையும் கொண்டுதான் பல வருஷம் சீமையிலேயே தங்கியிருந்தான், காலேஜ் முடிவானதும் நல்ல பழம் பெருங்குலமென்று இவனிடம் அன்புகொண்டு மற்றொரு கெளரவமுள்ள குடும்பக்காரர் ஒருவர் தம்மகளைக் அவனுக்குக் கொடுத்திருந்தார்."

"இப்படிப் போரவன்களே ஸரியா வரதில்லேன; நான் பல 'கேஸ்'களைப் பார்த்துட்டேன்."

"ஆமாம்; கல்யாணத்தைப் பண்ணதை அனுப்பரதே தேவலே, மேலே கேளேன்; லண்டன்லே ஸெளகர்யமாகவே இருந்தான்; நல்ல பரம்பரைலே வந்தவன, அதினலே கொஞ்சம் ச்லோகம் சொல்ரது. பூஜை, ஜபம் இதெல்லாம் பழக்கமுண்டு! நாள், கிழமைன்னு அங்கெ இருக்கர இந்திய ஸ்னேகிதர்களைக் கூட்டுவன்; கிருஷ்ண ஜயந்தி பண்ரேன்னு ஒருதரம் ஒரு உபன்

யாஸம் செஞ்சூட்டு, பட்டுகட்டிண்டு பூஜை பண்ணி, ப்ரஸாதம், தீர்த்தம் எல்லாம் வந்தவாளுக்கெல்லாம் பட்டாச்சாரியாட்டமா கொடுத்தான். வந்திருந்த கூட்டத்துலே ஒரு இளம் இங்கிலீஷ் பெண் இருந்தா; அவளுக்கு இந்தியாவைப்பத்திபுஸ்தகங்கள் வாசிச்சு, இந்திய டான்ஸ், ம்யூஸிக், சில்பம், சித்ரம், இந்திய மதம், வேதாந்தம்—இதுலெல்லாம் பலமான மோகம். இவன் வீச்சும், பூஜையில் பூ போடரபோது இவள் கை போகிற வளைவும் அழகும், இவன் ஒன்றன்மேல் ஒன்ருய்ச் செய்த கர்ம விதரணை (Ritual) யின் புரியாமலேயே மனதை இழுக்கும் ஓர் ஹாஸ்ய மந்த்ரசக்தியும், இவன் சற்று த்யானத்தில் கண் மூடினதும் தான் சில்பத்தில் கண்ட புத்த விக்ரஹ நினைவின் ஏக்கமும், எல்லாவற்றிற்கும் மேலாய் இவன் ப்ரஸாதம் வழங்கும்போது செய்த முறுவலோடு குழிந்த இவன் கன்னங்களும் அவளை இவனுக்கு அடிமையாக்கிவிட்டன............

"சென்னையில் நம் கோஷ்டிகளில் பின் சில வருஷங்களுக்கப்பால் இவன் பழகிக்கொண்டிருக்கும்போது சிலருக்கே இவன் ஏகாந்த வ்யவஹாரங்கள் தெரியும். ஆனல் சீக்ரத்தில் அவை பலர் அறியும்படி யாவதற்கான, எதிர்பாராத ஸம்பவம் திடீரென நேர்ந்துவிட்டது............

"அது நேரவேண்டிய ஸம்பவமே; அன்று இல்லாவிட்டால் பின் கொஞ்சகாலத்துக்குள் வரவேண்டிய நிகழ்ச்சியே. இவன் வேலை யொன்றும் தகையாமல் சென்னையில் இருந்துகொண்டிருக்கும்போது, திடீரெனத் தந்தியொன்று பம்பாயிலிருந்து வந்தது; படித்துத் திகைத்துப் போனுன். தான் இருப்பதோ ஒரு சிறு ரூம்............"

"சிறு ரூமாகப் போவானேன்? பணக்காரன் என்ருயே?"

"ஸரிதான்; எவ்வளவுநாள் சீமை வாழ்வுக்கு நம் பணங்கள் போரும்? அதுவுமில்லாமே இவனுக்கும் இவன் வீட்டுக்கும் இவனுக்கும் இவன் மனைவி வீட்டுக்கும், ஒத்துக்கொள்ளாமல்போய் சிக்கல்கள் ஏற்பட்டன. சீமையிலிருந்து திரும்பினதும் இரண்டு வீட்டுக்காரரும் குழந்தைகளுக்கு மேலே ஆக வேண்டிய 'இல்லறத் துவக்கவிழா' நடத்த வேணும்னு கட்டாயப்படுத்தினு; இவனுக்கு அவ்விழாவை நடத்த இஷ்டமில்லை; மணம் புரிந்துகொண்டவனுயிருந்தும் சீமை நட்பால் மனம் முறிந்தவனுயிருந்தான். சுத்தியிருப்பவர்கள் கட்டாயம் செஞ்சி எப்படியோ அந்த நிகழ்ச்சியை நடத்திவச்சுட்டா இதில் மஹா கோபம், பேச்சுவார்த்தை இல்லாம, அவாளுடைய பணம் போக்குவரத்து ஒண்ணுமில்லாம, பட்டணத்துலே ஒரு மூலலே சின்ன ரூம் ஒன்னு வச்சுண்டுருந்தான்.

"தந்தின்னயே, பம்பாயில் இருந்து?" என்று விட்ட இடத்தை எடுத்துக்கொடுத்தான் ஸாப்பு.

"தந்தியைப் பார்த்ததும் திகைத்துப் போயிட்டான். அந்த இங்கிலீஷ் பொண்ணுக்கு இந்தியாவுக்கு வரணும், அத்புத காக்ஷிகளை இங்கே பாக்கனம்னு இருந்த உத்ஸாகமும் மோஹமும் அவளுக்கு இருப்புக்கொள்ளல்லே; அவளும் கொஞ்சம் ஸௌகர்யமா இருக்கர குடும்பத்தைச் சேர்ந்தவதான்; 'இந்தியாப்பித்து' புடிச்சுடுத்து; 'ஸரி, போ' என்று அவள் அப்பனும் கையிலே பணத்துடன் அவளை அனுப்பிச்சுட்டான்.

"இங்கே நம்ப புள்ளையாண்டானே, தனக்கு இருக்கும் சீமை டிகிரியினலே, பெரிய வேலை கிடைச்சுடும், பங்களா, கார் எல்லாம் வச்சுனுடலாம், அப்பறம் அவளுக்கு எழுதி வரவழைச்சுக்கலாம்னு இருந்தான். அவளோ அவஸரம் தாங்காமல் நிகழ்ச்சிகளை நெருக்கிவிட்டாள்.........

"டார்லிங், நான் எழுதரேன்னு சொன்னேனே, ஏன் இப்படி திடீர்னு சொல்லாமலேயே வந்துட்டே; நீ பண்ணது ரொம்ப தப்பு" என்ருன்.

"இவ்வளவு தூரத்திலிருந்து காந்தத்தால் இழுக்கப்பட்ட லோகம்போல், பரவசப்பட்டு வந்த நம்மைக்கண்டு குதூகலமடையாமல், நான் வந்தது தவறு என்ருனே" என்று அவள் மிகவும் வருந்தினுள். ஆனுலும், இவனிடமிருந்த காதலால் வெளியே காட்டிக்கொள்ளாமல் 'பாதகமில்லே; எப்படி எங்கே இருந்தா என்ன; இந்தியா, நீ—இரண்டு உண்டோல்யோ, அதுபோரும் எனக்கு' என்ருள். தனக்கு ரொம்பவேண்டியவனும் சற்று மேனுட்டு முறையில் வாழ்பவனுமான ஒரு நண்பனின் வீட்டின் ஒரு பக்கத்தை யாசகம் வாங்கிக்கொண்டு, அவனுடைய தயவில் ஒருமாதம் காலத்தை மிகவும் கஷ்டத்துடன் கழித்தான். கோஷ்டிகளுக்குத் தன்னை அழைத்துப் போ என்ருள் அவள். இவன் அழைத்துப்போனவன் அவளை ஒவ்வொருவரிடம் ஒவ்வொரு விதமாய் அறிமுகப்படுத்தி

னான்; அப்படிச் செய்யும் ஒவ்வொருதரமும் அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. 'குசுகுசு' என்று நண்பர் பேசிக்கொண்டனர்; சிலபேர் 'ஒருவேளை அங்கே கல்யாணம் பண்ணினாட்டானோ என்னமோ' என்றனர். நண்பரிடம் எவ்வளவு நாள் கடன் பட்டுக்கொண்டிருப்பான்? தனக்கு இடம் கொடுத்த நண்பனை ஓரிரவு தனியே கூவி—

"நீதான் என்னைக் காப்பாத்த வேண்டும்" என்றான்.

"என்ன ஆகவேண்டும்" என்று அன்பாய்க் கேட்டான் அந்த நண்பன்.

"என்ன ஆகவாவது? எனக்கு அவமானம் தாங்கவே இல்லை; இது வரைக்கும் உன்னிடம் இவளை பம்பாயிலிருந்து வந்த ஸ்னேகிதி என்று சொன்னதுபொய்; இவள் சீமையில் நான் மணந்த மனைவி......" என்று தலைகுனிந்தான்.

இந்த வார்த்தை நண்பனைத் தூக்கிவாரிப் போட்டது. நண்பன் கைகளைக் கெட்டியாய் பிடித்துக்கொண்டு மன்றாடினான் "வெளியே சொல்லவேண்டாம்; நான் கொஞ்சம் வெளியே போய்விடுகிறேன்; நீ இந்த என் இங்கிலீஷ் மனைவியிடம் என்னைப்பற்றிய உண்மையைச் சொல்லிவிடு" என்று.

"என்ன உண்மையைச் சொல்வது?" என்றான் தோழன்.

"நான் முன்னாலேயே இந்து மனைவியொருத்தியை மணந்தவன். இன்னும் வேலை ஏற்படாதவன். குடும்பத்தோடு தகராறு பட்டு, தரித்ரனாய்ப் பிழைக்க வழிகாணாமல் அலைபவன்........எல்லாவற்றையும் சொல்லிவிடு, சொல்லிவிடு......" என்று அலறிவிட்டு வெளியே விரைந்தான்.

"சில மாதங்கள் கழிந்தன. மறுபடியும் பம்பாயிலிருந்து இவனுக்கு தபால் வந்தது; உடைத்தவன் மனம் அன்றே உடைந்துபோயிருக்கவேண்டும்; அப்படி உருக்கமாய் அந்த ஆங்கிலப்பெண் கடிதம்ஒன்றைக் கவிபோல் எழுதியிருந்தாள். கடிதம் பெரிதல்ல; மணியார்டர் கொண்டுவரும் அடுத்த தபால்காரன் மூலம், தன் மனக் கோவிலில் போற்றி வந்த இந்தியச் சிற்ப பிம்பம் சிதைந்து கிடக்கிறதே என்ற துயரம் தாங்காமல், தன் 'பாஸேஜி'ற்குமட்டும் வேண்டிய பொருளை வைத்துக்கொண்டு கையிலிருந்த மிகுதிப் பணம் முழுதையும் அந்த ஆங்கிலப்பெண் இவனுக்கு அனுப்பி, கூபனில் "கஷ்டப்படாதே, இந்தா" என்று இரண்டே வார்த்தைகள் எழுதியிருந்தாள். அவ்விரு வார்த்தைகளும் இவனை உடைவாள்போல் ஹிருதயத்தில் குத்தின......

"இங்கிலீஷ் மனைவி கப்பலேறி மறைந்துவிட்டாள்; இந்திய மனைவி மகன் ஒருவனைப் பெற்றாள்.

"இங்கிலீஷ் பெண் இவனிடமிருந்த காதல், அனுதாபம், இவற்றால் இவனுக்குத் தீங்கு வழக்கு யாதொன்றையும் விளைவிக்காமல், மறைந்துவிட்டாள்; இந்திய மனைவி இவனுடைய குழந்தையை வளர்த்துக்கொண்டு, அதன் புன்னகையின் அமுதத்தால் தன் உடலைத் தாங்கிக்கொண்டு கிராமத்திலிருந்தாள்.

"சீமைக் காதல் சிதைந்துபோனதும், அம்மேனாட்டு மாது தன்னைப்பற்றி இழிவான அபிப்ராயத்தைக் கொள்ளும்படி நேர்ந்ததும் இவனுடைய மனது கசந்துபோய், கோபத்திற்கு ஆளாயிற்று; கோபம் எல்லாம் தன் இந்து மனைவியின்மீது பாய்ந்தது; இக்கோபத்தில் தன் உறவினரொருவர் வந்திருந்தபோது, தனக்கு ஏற்பட்ட புணர்ச்சிமணம் கடும் நிர்ப்பந்தத்தில் நடந்தது என்றும், அதில் அவன் மனப்பூர்வமாய் நடந்துகொள்ளவே இல்லை என்றும், தன் மனைவி எப்படிப் பிள்ளை பெற்றிருப்பாள் என்றும் துஷ்டத்தனமாய் வாதித்தான்."

இதுவரைக்கும் குறுக்கே ஒன்றும் பேசாமல், மூச்சுவிடாமல் கேட்டுவந்த ஸுப்பு "அடே, போக்கிரி!" என்றான்.

நான் மேலும் சொன்னேன்: "சீமையில் அவளை ஏமாற்றினதற்கும், இங்கு இவளை நிராகரித்ததற்குமாய் இவனைக் கடவுள் கடுமையாய்த் தண்டித்தார்.

"பல வருஷம் வேலையே ஆப்படல்லெ. இவன் நடத்தையும் பஹிரங்கமாய் போச்சு. எனக்குத் தெரிஞ்சு இவன் ஒருவேளைச் சாப்பாட்டுக்குக்கூடகஷ்டப்பட்டுண்டுருந்த நாள் உண்டு."

"பின் எப்ப ஜாதகம் திரும்பித்து?" என்றான் ஸுப்பு.

"அப்படி அவன் கஷ்டப்படர காலத்
லேதான் என்னை அவன் நன்னாத் தெ

சுண்டான். நான் அவனுக்கு சில சில்லறை வேலைகள் ஏற்பாடு செஞ்சு கொடுத்து, ஏதோ காலத்தைத் தள்ள ஒத்தாசை பண்ணிண்டுருந்தேன்,'' என்றேன்.

''ஓகோ, அப்போதான் தாங்கள் இந்த சிஷ்யாளுக்கு ஆசாரியாளாக ஆனேளோ'' என்றான் ஸுப்பு.

''ஆமாம்'' என்றேன்.

''இங்கு தன் மனைவியைப்பற்றி இவன் கொண்ட கெட்ட அபிப்ராயத்தை மாற்றினேன். நாளடைவில் பழைய வாழ்க்கையில் இவனைக் கொண்டுவந்தேன். என் வீட்டிற்கு அடிக்கடி அழைத்து வந்து நம் இல்லறத்தில் ஆசையைக் கொஞ்சம் கொஞ்சமாய் ஊட்டினேன். தைவாதீனமாய் இவன் ஊருக்குப் பக்கத்திலேயே வேலை யொன்று கிடைத்தது. உறவுக்காரர் நாலாபக்கமும் நிரம்ப இருக்குமிடம். மெள்ள மெள்ள குடும்பப் பற்றுகள் ஒன்றொன்றாய் ஒட்டிக் கொண்டன. மனைவியையும், மகனையும் ஏற்றான்; அவள் பானைபிடித்ததிலிருந்து சம்பளமும் ஓசந்தது; அவளுடைய குணச் சிறப்பால் உறவினர் பலரும் வந்துபோக ஆரம்பித்தனர்; தன் சீமைவாழ்விற்காக குடும்ப ஐவேஜியைக் காலிசெய்த இவன் மற்ற இளைஞரை முன்னுக்குக் கொண்டுவர வேண்டிய பாத்யதையையும் ஏற்றான்; ஓரே உழைப்பாய் உழைத்தான்; இவனுக்குமேல் இவன் மனைவியும் உழைத்தாள். இன்னும் குடும்பத்தில் எல்லாப்பளுக்களும் தீர்ந்ததாகச் சொல்லமுடியாது; ஆனாலும் மன ஆறுதலும், பொய்யில்லா வாழ்வும் உழைப்பின் சிரமத்திடையே ஒரு திருப்தியையும், ஒரு அலெளகிகமான மணத்தையும் பரவச் செய்கின்றன,''

''ஸரி, ஆசாரிய கைங்கர்யம் நீ செய்தது அரைகுறையான்னா இருக்கு, பாவம், அந்த இங்கிலீஷ் பொண்ணு கதி என்ன ஆச்சு? அவளையும்தானே அவன் ஏமாத்திவிட்டான்?'' என்றான் ஸுப்பு.

''வாஸ்தவம்தான்; மேனாட்டுப் பெண்கள்னு நாம் கேழ்விப்பட்டிருப்பம், ஸினிமாலேயும் பாத்துருப்பம்; இந்தப் பொண் நடந்துண்டது ரொம்ப விசேஷம்தான். அவளைப்பத்தி ஒண்ணும் அப்பறம் தெரியல்ல. ஸூர்யநாராயணுமட்டும் எங்கிட்ட ஒருநாளைக்குச் சொன்னான்; சீமைலே எடுத்துண்ட பல நண்பர் 'க்ரூப் போட்டோக்'கள்ளே அந்தப் பொண்ணு இருக்கும் போட்டோ ஒண்ணு இருக்கு; அதையும் நான் ஒருபக்கம் மாட்டி வச்சுருக்கேன். அந்த போட்டோவுக்கு என் மனைவி நித்யம் பூ போட்டுண்டே இருக்கா; எதுக்காகப் போடறேன்னு கேட்டேன்; பேசாமல் இருந்தா; ''நீ ரொம்ப பெரியவள்''னு என் மனைவியை ஸ்தோத்ரம் செஞ்சேன். கொஞ்சம் மகிழ்ச்சி, கொஞ்சம் வெக்கம், கொஞ்சம் நன்றி சேர்ந்த துயரம்—இவற்றுடன் அந்த போட்டோவை கடைக்கண்ணால் நோக்கி ''அவள் என்னைவிடப் பெரியவள்'' என்றாள். அதிலிருந்து என் மனைவியிடம் முன்னிருந்த கெளரவ புத்தி பன்மடங்கு பெருகிற்று'' என்று.

''வாஸ்தவம்தான், நல்லது'' என்றான் ஸுப்பு.

198070

"காவேரி" சந்தா விபரங்கள்

	உள்நாடு	சிலோன்	பர்மா & மலேயா
வருஷம்	4 8 0	4 12 0	6 0 0
ஆறுமாதம்	2 4 0	2 8 0	3 0 0
தனிப்பிரதி	0 6 0	40 சதம்	0 8 0

ஏஜென்ஸி இல்லாத இடங்களுக்குப் பொறுப்புள்ள ஏஜண்டுகள் தேவை.

ஏக காலத்தில் சென்னை கிரௌன் & சன் தியேட்டர்களில்

திருச்சி முருகனில் 25-5-46 முதல் ஆரம்பம்

இவை எல்லாம் சென்னையிலேயே இப்பொழுது தயாராகின்றன

பதப்படுத்திய உருக்கு ஸ்பானர்கள்
அசிடிலின் ஜெனரேட்டர்கள்—மீடியம் பிரெஷர்
அசிடிலின் ஜெனரேட்டர்கள்—லோ பிரெஷர்
டெயில் போர்ட் செயின்கள்
ஸ்லாம் பூட்டுகள் (இரண்டு வகை வேலை செய்வது)
ஹெவி ட்யூடி பஸ், லாரி ஜாக்கிகள்
தூக்கிச்செல்லக்கூடிய தொழிற்சாலை கிரேன்கள்
தூக்கிச்செல்லக்கூடிய தொழிற்சாலை போர்ஜுகள்
டோரேஜ்ஸ் டாங்குகள்
உலோகத் தகடுகள் வெட்டும் ரோட்டரி மெஷின்கள்
போர்ட்டபிள் ரோலர் ஊத்தும் மெஷின்கள்
வீல் பாரோஸ்
பிளாட்பாரம் டிராலிகள்
அட்ஜஸ்டபிள் மெடல் ஸ்டூல்கள் முதலியவைகள்

தயாரிப்பவர்கள்:—

ஸிம்ஸன் அண்ட் கம்பெனி லிமிடெட்

மவுண்ட் ரோட், சென்னை.

பிராஞ்சுகள்:— பெங்களூர், திருச்சிறுப்பள்ளி, உதகமண்டலம், ஹைதராபாத் (டக்கான்).

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.